இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 221 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 09 – வெள்ளிக்கிழமை 22 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 221: Thiruvalluvar Year - 2055 - Panguni 09 - Friday 22 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00

# இது வழக்கமான தேர்தல் அல்ல.. ஜனநாயக அறப்போர் !



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

இந்தியாவை மீட்பதற்கான அறப்போராட்டக் களத்தில் உங்களுடன் இணைந்து நானும் நிற்கிறேன். தமிழ்நாடு இழந்த உரிமைகளை மீட்கவும், இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் வளம் பெறவும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்துகிற கூட்டாட்சிக் கருத்தியலைக் காத்திடவும், பாசிச சக்திகளை வீழ்த்திடவும் நாடாளுமன்றத் தேர்தல் எனும் ஜனநாயகக் களத்தை எதிர்கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கொள்கைக் கூட்டணி தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் உள்ள 40 தொகுதிகளைத் தோழமைக் கட்சிகளுடன் இணக்கமாகப் பங்கிட்டுக் கொண்டு களம் காண ஆயத்தமாகிவிட்டது. அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடந்த நிகழ்வில் 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்திற்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, கழகத்தின் சார்பில் களமிறங்கும் 21 வெற்றி வேட்பாளர்களையும் கழகத் தலைவர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் அறிவித்தேன்.

எந்தவொரு தேர்தல் களமாக இருந்தாலும் எதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு களம் காண்கிறோம் என்பதைத் தேர்தல் அறிக்கை வாயிலாகத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்து மக்களைச் சந்திப்பதுதான் பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து தி.மு.கழகம் கடைப்பிடித்து வருகின்ற தேர்தல் நடைமுறை. அதன் வெளிப்பாடுதான், கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள 64 பக்கத் தேர்தல் அறிக்கை.

தமிழ்நாடு மீண்டும் உரிமையுடன் திகழ்வதற்காக மட்டுமின்றி, இந்தியாவில் உண்மையான ஜனநாயகமும் கூட்டாட்சிக் கருத்தியலும் நிலைபெறவும் கழகத்தின் சார்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏழை – நடுத்தர மக்களை அன்றாடம் பாடுபடுத்தும் சமையல் கேஸ் சிலிண்டர் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, 500 ரூபாயாகக் குறைப்பது, பெட்ரோல் – டீசல் விலைக் குறைப்பு, தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடிகளை முற்றிலுமாக அகற்றுவது உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம்.

> **“தமிழ்நாடு மீண்டும் உரிமையுடன் திகழ்வதற்காக மட்டுமின்றி, இந்தியாவில் உண்மையான ஜனநாயகமும் கூட்டாட்சிக் கருத்தியலும் நிலைபெறவும் கழகத்தின் சார்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏழை - நடுத்தர மக்களை அன்றாடம் பாடுபடுத்தும் சமையல் கேஸ் சிலிண்டர் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, 500 ரூபாயாகக் குறைப்பது, பெட்ரோல் - டீசல் விலைக் குறைப்பு, தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடிகளை முற்றிலுமாக அகற்றுவது உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம்.”**

மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறும் வகையில் அரசியல் சட்டத்தில் உரிய திருத்தங்கள், ஆளுநரின் அதிகாரங்களுக்குக் கடிவாளம், சி.ஏ.ஏ. சட்டம் இரத்து, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு, பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படாது, நாடு முழுவதும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், உழவர்களின் விளை பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 10 இலட்ச ரூபாய் வட்டியில்லாக் கடன், தமிழ்நாட்டு மீனவர்களின் நலன் காக்கும் சட்டங்கள், மாவட்டந்தோறும் தொழில்வளர்ச்சிக்கும் கட்டமைப்புக்குமான திட்டங்கள் உள்ளிட்ட இன்னும் பல வாக்குறுதிகளுடன் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான தேர்தல் அறிக்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டுள்ளது. உண்மையான புதிய இந்தியாவைக் கட்டமைத்திடும் உன்னத இலட்சியத்துடன், தோழமைக் கட்சிகளுடன் இணைந்து தி.மு.க. களம் காண்கிறது.

**கழகத்தின் சார்பில் போட்டியிடும் 21 வேட்பாளர்களில் அனுபவமிக்கவர்களும் உண்டு; அறிமுக வேட்பாளர்களும் உண்டு. அனைவருமே உதயசூரியன் சின்னத்தின் வேட்பாளர்கள் என்பது மட்டுமே உடன்பிறப்புகளாம் உங்கள் இதயச்சுவரில் பதிய வேண்டிய செய்தி. கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளும் நமது தொகுதிகள்தான். அவர்களின் வேட்பாளர்களும் நம்மவர்கள்தான். அவர்களின் சின்னங்களும் நம்முடையதுதான். நாற்பது தொகுதிகளில் தனித்தனி வேட்பாளர்கள் நின்றாலும், அனைத்துத் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலின்தான் வேட்பாளராக நிற்கிறேன் என்கிற உணர்வுடனும் கொள்கை உறவுடனும் இந்தியா கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திட வேண்டும் என்ற உத்வேகத்துடனும் களப்பணியாற்றிட வேண்டும் என ஒவ்வொரு உடன்பிறப்பையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.**

உங்களின் களப்பணிகளை ஊக்கப்படுத்திடவும், தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களின் ஆதரவைத் திரட்டிடவும், நாற்பது தொகுதிகளிலும் நமது கூட்டணியின் வெற்றியினை உறுதி செய்திடவும் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் நேரில் வருகிறேன். நாளை (மார்ச் 22) தீரர் கோட்டமாம், திருப்புமுனைகள் பல தந்த திருச்சியிலிருந்து தேர்தல் பரப்புரையைத் தொடங்குகிறேன். தொடர்ச்சியான பயணங்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தலைமைக் கழகம் திட்டமிட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கேற்ப அந்தந்த தொகுதிகளைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகத்தினர், தோழமைக் கட்சியினர், ஆதரவு இயக்கங்கள் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

தேர்தல் ஆணையத்தின் நெறிமுறைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு தொகுதியிலும் கழகத்தின் பரப்புரை இடைவிடாத அளவில் நடைபெற வேண்டும் என்பதற்கேற்ப கழகத்தின் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் தொடங்கி தலைமைக் கழக நிர்வாகிகளும், கொள்கைப் பரப்புச் செயலாளர்களும், தலைமைக் கழகப் பேச்சாளர்களும் தொடர்ச்சியான பரப்புரைப் பயணங்களை மேற்கொள்ளவிருக்கிறார்கள். பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் ஆகியவற்றுடன் திண்ணைப் பிரசாரமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஜனநாயகப் போர்ப்படையின் முன்கள வீரர்களான கழக உடன்பிறப்புகளிடம் உங்களில் ஒருவனான நான் அடிக்கடி வலியுறுத்துவது போல, வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். அதுதான் மக்களின் உள்ளத்தில் உண்மை நிலவரத்தைப் பதிய வைக்கும். நம்பிக்கையை மேம்படுத்தும். வெற்றியை உறுதி செய்யும்.**

## உங்களில் ஒருவன்

2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நாம் சந்திக்கும் எதிரிகள் நமக்கான அரசியல் எதிரிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிரிகள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எதிரிகள். இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரிகள். இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் மதச்சார்பின்மைக் கொள்கைக்கும் எதிரிகள். கூட்டாட்சிக் கருத்தியலுக்கு எதிரிகள். மொத்தமாகச் சொல்வதென்றால், மனித குலத்தின் எதிரிகள்.

பொய் சொல்ல அஞ்சாதது மட்டுமல்ல, பொய்களை மட்டுமே சொல்வது என்பதைக் குறிக்கோளாகவே கொண்டிருக்கிறார்கள் ஒன்றிய பா.ஜ.க ஆட்சியாளர்கள்.

பிரதமர் என்கிற மாண்புக்குரிய பொறுப்பை வகிப்பவர் தொடங்கி ஒன்றிய அமைச்சர்கள், இணை அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் என அத்தனை பேருமே பொய்யை மட்டுமே பரப்புரையாக மேற்கொண்டு வருவதை கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டின் வாக்காளர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்குக் கடந்த பத்தாண்டுகால ஆட்சியில் என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தோம் என்பதைச் சொல்வதற்கு எதுவுமில்லாமல் தி.மு.க.வை விமர்சிப்பதும், தி.மு.க. ஆட்சி மீது வீண்பழி போடுவதும், தி.மு.க. கூட்டணி பக்கம்தான் தமிழ்நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்பது உறுதியாகத் தெரிவதால், தமிழர்களையே தீவிரவாதிகள் எனச் சித்தரிப்பதும் பா.ஜ.க.வின் பரப்புரை ஃபார்முலாவாக இருக்கிறது.

நம்மிடம் தந்தை பெரியாரின் சமூக நீதிக் கொள்கை உள்ளது. ஜனநாயகக் களத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்கிற கண்ணியத்தைக் கற்றுத் தந்த பேரறிஞர் அண்ணாவின் வழிமுறை இருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தொடரும் ஆட்சியின் சாதனைகள் நிறைந்திருக்கிறது. அவற்றைத் தேர்தல் களத்தின் ஆயுதங்களாகக் கையில் ஏந்துவோம். பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாடு எப்படி வஞ்சிக்கப்பட்டுள்ளது என்பதை வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வாக்காளரிடமும் எடுத்துச் சொல்வோம். அதற்கு அ.தி.மு.க எப்படித் துணைபோனது என்கிற துரோகத்தையும் மறக்காமல் எடுத்துரைப்போம். தனித்தனியாக நிற்கும் கள்ளக்கூட்டணியின் முகத்திரையைக் கிழித்திடுவோம். வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் பொய்களையும் வதந்திகளையும் முறியடிக்கும் வகையில் ஆன்லைன் பரப்புரையையும் முனைப்புடன் மேற்கொள்வோம். ஒவ்வொரு வாக்குச் சாவடிக்குட்பட்ட வாக்காளர்களிடமும் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவைத் திரட்டுவோம். ஒவ்வொரு வாக்கும் நம் ‘இந்தியா’வின் வெற்றியை உறுதி செய்யட்டும்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் போது, எளிய மக்களை நடுஇரவில் நடுத்தெருவில் நிற்க வைத்துவிட்டு, ‘புதிய இந்தியா பிறந்தது’ என்று வெற்று முழக்கமிட்ட பிரதமரும் பா.ஜ.க.வினரும் இப்போது ‘இந்தியா’ என்று உச்சரிக்கவே தயங்குகிறார்கள் என்றால் இதுதான் நாம் கட்டமைத்துள்ள உண்மையான புதிய ‘இந்தியா’வின் முதற்கட்ட வெற்றி. அந்த வெற்றி தேர்தல் களத்திலும் தொடர்ந்திடும். ஆட்சி மாற்றத்தை உருவாக்கும்.

இதுவரை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் அனைத்தும் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான தேர்தல்களாக இருந்தன. இந்த முறை யார் ஆட்சிக்கு வரவே கூடாது என்பதற்கான தேர்தல் களமாக அமைந்துள்ளது. இது வெறும் தேர்தல் களமல்ல.. ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய அறப்போர்க்களம். இந்தப் போரில் நாம் வென்றாக வேண்டும். ஓயாது உழைத்தால் உறுதியான வெற்றி நிச்சயம்.

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!!**

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055,
பங்குனி 8,
21.03.2024

---

ஏன் பதவியேற்பு நடத்தி வைக்க மறுக்கிறார்? இன்றைக்குள்

## பொன்முடி விவகாரத்தில் முடிவெடுக்க ஆளுநருக்கு கெடு!

### “கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும்” என உச்சநீதிமன்றம் கண்டிப்பு!

புதுடெல்லி, மார்ச் 22 –

பொன்முடி விவகாரத்தில் முடிவெடுக்க ஆளுநருக்கு இன்றுக்குள் பதிலளிக்க கெடு வழங்கியுள்ளது உச்சநீதிமன்றம். பொன்முடிக்கு ஏன் பதவியேற்பு நடத்தி வைக்க ஆளுநர் மறுக்கிறார்? எனவும் ஆளுநர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? எனவும் கேள்வி எழுப்பியுள்ள உச்சநீதிமன்றம் ஆளுநர் மீது கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் – எனவும் கண்டித்துள்ளது.

பொன்முடிக்கு விதிக்கப் பட்ட தண்டனை நிறுத்தி வைத்ததை தொடர்ந்து அவர் மீண்டும் எம்.எல்.ஏ. ஆகியிருக்கிறார்.

பொன்முடியை அமைச்சராக்க தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால்



ஆளுநர் அனுமதி மறுக்கிறார் என தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதிட்டார்.

பொன்முடி மீண்டும் எம்.எல்.ஏ. ஆன நிலையில் மீண்டும் அமைச்சராக பதவியேற்க முடியாதா? என ஒன்றிய அரசின் வழக்கறிஞரிடம் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

மசோதாக்களுக்கு எப்படி அனுமதி வழங்க மறுக்கிறாரோ, அதே வழியில் தற்போது அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் மறுத்து வருகிறார் எனவும் உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பிறகு ஒருவரை அமைச்சராக்க வேண்டும் என்று முதலமைச்சர் பரிந்துரைக்கும் போது அதை ஏற்க ஆளுநர் மறுத்துள்ளார் என மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி வாதிட்டார். மீண்டும் அமைச்சராக்குவதற்கு அரசியல் சாசனம் அனுமதிக்கும் போது ஆளுநர் ஏன் பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுக்கிறார்? ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் அரசியல் சாசன விதிமீற லாகும் என்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள், ஆளுநர் ஆர்.என்.ரவி எழுதிய கடிதத்தின் கருத்துக்களை படித்து காண்பித்து கடுமையாக விமர்சித்துள்ளனர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 22-03-2024

# கூட்டாட்சியை உருவாக்கும் மக்கள் அறிக்கை!

2024 ஆம் ஆண்டுக்கான தேர்தல் அறிக்கையை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

★ **மாநில சுயாட்சியை மதிக்கும் கூட்டாட்சி அரசை உருவாக்குவோம்!**

★ **மதச்சார்பற்ற இந்தியக் கூட்டணி அரசை உருவாக்குவோம்!**

★ **சமூகநீதியைப் போற்றுவோம்! சமத்துவம் வளர்ப்போம்!**

★ **ஜனநாயகம் தழைத்தோங்க சளைக்காமல் உழைப்போம்!**

- ஆகிய முழக்கங்களுடன் இந்த அறிக்கை வெளியாகி உள்ளது.

கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையிலான குழு, தமிழ்நாடு முழுவதும் சென்று பல்வேறு தரப்பினரைச் சந்தித்து அவர்களது எண்ணங்களை உள்வாங்கி இந்த அறிக்கையை தயாரித்துள்ளது. அதனால்தான் இதனை **'மக்கள் அறிக்கை'** என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வர்ணித்துள்ளார்கள்.

இந்த அறிக்கையானது தமிழ்நாட்டுக்கு மட்டுமான அறிக்கையாக இல்லை. ஒட்டுமொத்தமாக இந்தியாவுக்கான அறிக்கையாக அமைந்துள்ளது. 'அதிகமாக ஒன்றிய அரசைப் பற்றியே இருக்கிறதே?' என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, **"ஆமாம்! நாங்கள்தானே ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கப் போகிறோம்"** என்று பளிச்சென்று பதில் அளித்தார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கப் போகும் 'இந்தியா' கூட்டணி செல்லும் பாதைக்கு வழிகாட்டுவதாக தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை அமைந்துள்ளது.

இந்தியா இதுகாலம் காப்பாற்றி வந்த அனைத்து மாண்புகளையும் சிதைத்து விட்டது பா.ஜ.க. அதனை மீட்டெடுக்க வேண்டிய கடமை 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் ஆட்சிக்கு இருக்கிறது. அதனைதான் தி.மு.க. அறிக்கை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது.

★ **இந்திய அரசியலமைப்பு இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி அமைப்பை அழிக்க எதையும் செய்வார்கள்.**

★ **அனைத்துப் பிரச்சினைகளையும் மிகக் கவனமாகப் பரிசீலித்து, இந்தியாவை ஜனநாயகக் கூட்டாட்சிக் குடியரசாக நிலைநிறுத்துவதில் தி.மு.க. உறுதி கொண்டுள்ளது. எனவே, பாசிச வெறிபிடித்த, மத ஆதிக்கவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்திட அரசியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைத் தேர்தல் அறிக்கையில் இணைத்து வலியுறுத்துகிறது.**

★ **மாநிலங்களை வலுவிழக்கச் செய்யவும், அவற்றின் பங்கைக் குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் பா.ஜ.க அரசால் மேற்கொள்ளப்படுகின்றன.**

★ **தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நன் மதிப்பினைக் குறைக்கும் கருவியாக ஆளுநர், சி.பி.ஐ., அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித்துறை போன்ற ஒன்றிய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.**

★ **மாநிலங்களில் நிதி மேலாண்மையில் தலையிடுவதுடன் உரிய நியாயமான நிதிப் பகிர்வை வழங்குவதில்லை.**

★ **மாநில சுயாட்சி மற்றும் மாநில உறவுகள் குறித்து ஆராய இதுவரை அமைக்கப்பட்ட நான்கு குழுக்களின் பரிந்துரைகளையும் முழுமையான விவாதங்களுக்கு உட்படுத்தி மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெற்றிடும் வண்ணம், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை தி.மு.கழகம் ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தும்.**

★ **ஆளுநர் பதவி தேவையில்லை.**

★ **ஆளுநர் பதவி இருக்கும் வரை மாநில ஆளுநர்களை நியமிக்கும்போது அந்தந்த மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளைப் பெற்று, ஆளுநர்களை ஒன்றிய அரசு நியமிக்க வேண்டும்.**

★ **சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநில ஆளுநர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 361ஐ நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆளுநரும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டவர் என்ற நிலை உருவாக்கப்படும்.**

★ **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்திட வழிவகுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ அகற்றிட தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்.**

★ **மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சிக்குழு அமைக்கப்படும்.**

★ **பா.ஜ.க. அரசால் கலைக்கப்பட்ட ஒன்றிய திட்டக்குழு மீண்டும் அமைக்கப்படும். மாநில அரசுகளின் கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதுள்ள நிதி ஆயோக் கலைக்கப்படும்.** - ஆகியவை கூட்டாட்சியை உருவாக்கும் குரல்களாக அமைந்துள்ளன.

> **"இனியும் மோடி ஆட்சி தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல. பா.ஜ.க. ஆட்சியை அகற்றியாக வேண்டும் என்ற அரசியல் எண்ணத்துடன் இந்தியா கூட்டணி அகில இந்தியா முழுமைக்கும் அமைந்துள்ளது. நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக அமைய இருக்கும் புதிய ஆட்சியானது, இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையை மதிக்கும் ஆட்சியாக அமையும். மாநிலங்களை அரவணைத்துச் செயல்படும் ஆட்சியாக அமையும். சமத்துவ - சமதர்ம எண்ணம் கொண்ட ஆட்சியாக அமையும். அனைவரும் ஒன்று என எண்ணும் சகோதரத்துவ ஆட்சியாக அமையும்.**
>
> **மொத்தத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் காத்து - மக்களாட்சி மாண்பைச் செம்மைப்படுத்தும் ஆட்சியாக அமையும்"** என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

அதனை நிறைவேற்றும் செயல்திட்டங்களைக் கொண்டதாக தி.மு.க. தேர்தல் அறிக்கை அமைந்துள்ளது. அரசியல் கோரிக்கைகளை அரசு வடிவமாக மாற்றுவதற்கு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி பாதை அமைக்கட்டும்.

## மராட்டியம் - அருணாச்சலப்பிரதேசத்தில் நிலநடுக்கம்!

மும்பை, மார்ச் 22 –

மராட்டியத்தில் 2 முறை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. மராட்டிய மாநிலம் ஹிங்கோலியில் நேற்று முன்தினம் காலை 6.08 மணிக்கு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் 10 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.5ஆக பதிவாகியுள்ளது. ஹிங்கோலியில் காலை 6.19 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டரில் 3.6ஆக பதிவானது. அதே போல அருணாச்சலப்பிரதேசத்தில் 3 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. அருணாச்சலப்பிரதேச மாநிலம் கிழக்கு காமெங் பகுதியில் அதிகாலை 5.13 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

பூமிக்கு அடியில் 5 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.2ஆக பதிவாகியுள்ளது. கிழக்கு காமெங் பகுதியில் முன்னதாக அதிகாலை 3.40 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டரில் 3.4ஆக பதிவாகியுள்ளது. அருணாச்சலத்தின் மேற்கு காமெங் பகுதியில் நள்ளிரவு 1.49 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதுரிக்டரில் 3.7ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகள் லேசாக அதிர்ந்தது.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் அலுவலகத்தை கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் திறந்து வைத்தார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.சக்திதாசன், கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் நவீன் சங்கர், கே.ராஜ்கமல் ஒன்றிய குழு தலைவர் என்.இ.சத்தியானந்தம், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, ஜனார்த்தனன், வீ.பிரதீஷ்டேவிட், அன்பரசன், எம்.டி.சீனிவாசன், நகர துணை செயலாளர் மா.மனோஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# காங்கிரசை முடக்க பிரதமர் மோடி சதி!

## சோனியா காந்தி தாக்கு!

புதுடெல்லி, மார்ச் 22-

பழமையான காங்கிரஸ் கட்சியை முடக்க பிரதமர்மோடி திட்டமிட்டு சதி செய்கிறார் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியாகாந்தி கடுமையாக சாடியுள்ளார்.

தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்ட விவகாரம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இது தொடர்பாக தலைநகர் டெல்லியில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர்.

அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார் ஜுன கார்கே கூறுகையில், பாரபட்சமின்றி தேர்தலை நடத்துவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படையாகும். அனைத்து அரசியல் கட்சிகளும் போட்டியிட சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். ஒரு கட்சி, அனைத்து விசாரணை அமைப்புகளையும் கட்டுப்படுத்த அனுமதிக்கக்கூடாது.



தேர்தலை சமபலத்துடன் எதிர்கொள்ள ஒவ்வொரு கட்சிக்கும் நிதி அவசியம். தேர்தல் பத்திர முறைகேடு விவகாரத்தில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. தேர்தல் பத்திரம் மூலம் 56 சதவீதம் பணத்தை (ரூ.6 ஆயிரம் கோடி) பா.ஜ.க. பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 11 சதவீதம் நன்கொடை மட்டுமே கிடைத்தது.

சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. தவறாக பயன்படுத்துகிறது. தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகளை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் முடக்கியுள்ளனர் இவ்வாறு கார்கே கூறியுள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி கூறுகையில், நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சியை முடக்க பிரத மர் மோடி சதி செய்கிறார். அதனாலேயே பொருளாதார ரீதியாக காங்கிரஸ் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியாவில் ஜனநாயகத் தின் அடிப்படை தன்மைக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார். கடந்த வாரம், 1994-95ஆம் ஆண்டுக்கான வருவாய் விபரங்கள் தொடர்பாக விளக்கம் கேட்டு வருமான வரித்துறை சார்பில் காங்கிரஸ் கட்சிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. கடந்த பிப் 16ந்தேதி காங்கிரஸ் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டதாக பொருளாளர் அஜய் மக்கான் கூறியிருந்த நிலையில், வங்கிக் கணக்கை பயன்படுத்த எவ்வித தடையும் விதிக்க வில்லை எனவருமானவரித்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

### தமிழ்நாட்டிற்கு

# தோல்வி பயத்தால் பிரதமர் அடிக்கடி வருகிறார்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, மார்ச் 22-

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் திமுக சார்பில் இரண்டாவது முறையாக கனிமொழி கருணாநிதி போட்டியிடுவதை முன்னிட்டு தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டம் நேற்று (21/03/2024) தூத்துக்குடி 2 ம் கேட் அருகிலுள்ள அபிராமி மஹாலில் நடைபெற்றது. திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் தூத்துக்குடியில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து இந்தியா கூட்டணிக் கட்சிகள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் ஜென்னிட்டா, இந்தியா கூட்டணிக் கட்சிகள் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது: மகளிருக்கு புதுமைப்பெண் திட்டம் என்று அந்தத் திட்டத்தின் வழியாக உயர்கல்வி படிக்க கூடிய பெண்களுக்கு நம்ம வீட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம். மகளிருக்கு இலவச பேருந்து, கலைஞர் மகளிர் உரிமை தொகை என்று அறிவித்து ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு மேல நம்முடைய சகோதரிகள் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க கூடிய அந்த திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் நமக்காக வழங்கிக் கொண்டிருக்கிறார்.

அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார். நான் வாரத்துக்கு நான்கு நாள் தூத்துக்குடி தொகுதியில் இருக்கிறேன் என்று. இப்படி எல்லாம் பார்த்தீங்கன்னா பிரதமர் மோடி வந்து தமிழ்நாட்டில்தான் வாரத்துக்கு மூன்று நாள் இருக்காரு, அத்தனை நாள் நாடாளுமன்றத்திற்குக் கூட போவதில்லை தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டே இருக்கிறார். ஏனென்றால் தேர்தல் பயம் வந்துடுச்சு, தேர்தல் ஜூரம் வந்துடுச்ச. இத்தனை தடவை வறீங்களே ஒட்டு வாங்க வேண்டும் என்று. எங்களுடைய மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கஷ்டப்பட்ட போது வீடுகளை இழந்து தவித்துக் கொண்டிருந்த பொழுது, தான் சேர்த்து வைக்கக் கூடிய அத்தனை சொத்துக்களும் வீட்டில் இருக்கிற அத்தனை பொருட்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட போது, வாழ வழி எல்லாம் அடுத்த வேளை உணவுக்கு வழியில்லாமல் தவித்து நின்று கொண்டிருந்த பொழுது சென்னையிலும் சரி, தூத்துக்குடியிலும் சரி இப்படிப் பரிதவித்த அந்த மக்களை பார்த்து ஆறுதல் சொல்ல ஒரு முறையாவது வந்தாரா? இல்லை. இதுவரைக்கும் இங்கே தரப்பட்ட இருக்கக்கூடிய அதனை நிவாரணத்தையும் தந்தது நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இங்க இருக்கக் கூடிய பிரதமர், ஒன்றிய அரசாங்கமும் வந்து பாத்துட்டு போன அமைச்சர்களும் மக்களுக்காக டெல்லியிலிருந்து ஒரு ரூபா கூட தரவில்லை, நம்ம கிட்ட இருந்து வசூல் பண்ண காசு ஜிஎஸ்டி போட்டு, இங்கே வரி போட்டு நம்மிடம் இருந்து வசூல் பண்ண காசு நமக்காக செலவழிக்கவில்லை, நம்முடைய மக்களுக்கு செலவழிக்கவில்லை. வீடு கட்டிக் கொடுத்தது முதலமைச்சர், பாதிக்கப்பட்டவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தது முதலமைச்சர், ஆடு மாடுகளுக்கு நிவாரணம் வழங்கியது நம்முடைய முதலமைச்சர். வயலில் எல்லா பயிர்களும் வீணாகிவிட்டது என்று கண்ணீரோடு நின்ற விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டியது நம்முடைய முதலமைச்சர்.

அதனால், திரும்பத் திரும்ப இங்கே வந்து தமிழ்நாட்டில் ஒரு கால் வைத்து விட வேண்டும் என்று அந்த எண்ணத்தோடு பிரதமரை திரும்பத் திரும்ப அழைத்துக்கொண்டு வராங்க. ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் கண்ணீரோடு நின்ற பொழுது நீளாத அந்தக் கரத்திற்கு, இன்று தமிழக மக்கள் தன்னுடைய விரல்களை நீட்டி வாக்களிக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும், புரிய வைக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக தேர்தல் அலுவலகம் திறப்பு விழா திருத்தணியில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சரும் அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளருமான எஸ்.ஜெகத்ரட்சகன் அலுவலகத்தை திறந்து வைத்தனர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட துணைச் செயலாளர் ஜெயபாரதி, மாவட்ட பொருளாளர் எம்.மிதுன்சக்ரவர்த்தி, நகரச் செயலாளர் வி.வினோத்குமார், ஒன்றிய செயலாளர்கள் ஆர்த்திரவி, கூளூர் எம்.ராஜேந்திரன், சி.ஜெ.சீனிவாசன், ஜி.ரவீந்திர, மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், என்.கிருஷ்ணன், உள்பட பலர் உள்ளனர்.

## தோல்வி உறுதியான நிலையில் - அஞ்சிநடுங்கும் பாசிச பா.ஜ.க. அரசு அராஜகம்!

# டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது!

## கோழைத்தனத்தை அம்பலப்படுத்துகிறது! கட்சித் தலைவர்கள் கண்டனம்!

புதுடெல்லி,மார்ச்.22-

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை வியாழக்கிழமை இரவு அமலாக்கத் துறை கைது செய்தது. இதனால், டெல்லியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

டெல்லியில் உள்ள முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் இல்லத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சுமார் மூன்று மணி நேரம் விசாரணையில் ஈடுபட்டனர். அதன்பின், கைது செய்யப்பட்ட அவர் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். இதனிடையே, ஆம் ஆத்மி நிர்வாகிகளும் தொண்டர்களும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி வருவதால், போலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் பெரும் அளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, டெல்லி அரசின் மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான பண மோசடி வழக்கில் தொடர்பாக அம்மாநிலத்தின் 2 அமைச்சர்களை அமலாக்கத் துறை கைது செய்தது. இருவரும் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இது வரை ஜாமீன் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மாநில முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலிடம் விசாரணை நடத்த வேண்டும் என அமலாக்கத் துறை அவருக்கு சம்மன் அனுப்பியது.


அமலாக்கத் துறை தனக்கு சம்மன் அனுப்பியது சட்ட விரோதம். தான் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராக மறுத்து வந்தார்.

கொள்கை உருவாக்கம் இறுதி செய்யப்படுவதற்கு முன் நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் லஞ்ச குற்றச்சாட்டுகள் குறித்து கேஜ்ரிவாலின் வாக்குமூலத்தை அமலாக்கத் துறை பதிவு செய்ய விரும்புகிறது. ஆனால், இந்த சம்மன்கள் சட்டவிரோதம் எனவும், அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனவும் கேஜ்ரிவால் கூறிவந்தார்.

அவர் விசாரணையை தவிர்ப்பது தொடர்பாக 2 புகார் மனுக்களை டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை சமீபத்தில் தாக்கல் செய்தது.

இவ்வழக்கில் கேஜ்ரிவால் சமீபத்தில் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது அமலாக்கத் துறை சம்மன்களை தவிர்ப்பது தொடர்பான வழக்கில் கேஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கி கூடுதல் முதன்மை பெருநகர மாஜிஸ்திரேட் திவ்யா மல்ஹோத்ரா உத்தரவிட்டார். மேலும், புகார்கள் தொடர்பான ஆவணங்களை கேஜ்ரிவாலிடம் வழங்குமாறு அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டார்.

அதேவேளையில், இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு கோரி டெல்லி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கேஜ்ரிவால் மனு தாக்கல் செய்தார். ஆனால் அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில்தான், மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை வியாழக்கிழமை இரவு அமலாக்கத் துறை கைது செய்தது.



**உச்சநீதிமன்றம் நிராகரிப்பு!**

சுமார் 500க்கும் அதிகமான ரெய்டுகளை நடத்தி, ஆயிரக்கணக்கான சாட்சிகளிடம் விசாரணை நடத்திய பின்னரும் இதுவரை இந்த வழக்கில் ஒரு ரூபாயோ அல்லது ஆதாரமோ கைப்பற்றப்படாத விரக்தியை பற்றி அவர்கள் இப்போது பேசுகிறார்கள். இந்த விவாகாரத்தில் ரூ.100 கோடி பணபரிவார்த்தனை நடந்திருப்பதாக கூறப்படும் கூற்றை உச்ச நீதிமன்றமே நிராகரித்திருக்கிறது. இந்த ஒட்டுமொத்த மதுபான ஊழல் வழக்கும் பொய்யான ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்பதை உலகமே தற்போது தெரிந்து கொண்டு இருக்கிறது.

**ஒரு ரூபாய் கூட கைபற்றவில்லை!**

மணீஷ் சிசோடியா உட்பட பல ஆம் ஆத்மி கட்சி தலைவர்களின் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது, என்றாலும் இது வரை ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை. ஆனால், தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு நிதி வழங்கிய அனைத்து நிறுவனங்களும் முன்பு அமலாக்கத் துறையின் சோதனைக்கு உள்ளாகி யுள்ளன. இதற்கு என்ன அர்த்தமென்றால், பணமோசடி செய்ததாக அமலாக்கத் துறையின் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள நிறுவனங்கள், சோதனைக்கு பின்னர் அவர்களுடைய குற்றத்தின் வருமானத்தை பா.ஜ.க.வுக்கு மாற்றியுள்ளன.

இந்த விவாகரத்தில் பாரபட்சமில்லாத விசாரணை நடத்தப்பட்டால் ஆயிரம் வழக்குகள் போட முடியும். இதில் மதுபான ஊழல் வழக்கில் அமலாக்கத் துறையின் சோதனைக்கு உள்ளான நிறுவனங்களும் அடங்கும். இந்த நிறுவனங்கள் பின்னர் பாஜகவுக்கு தேர்தல் நிதியளித்துள்ளன. எனவே, டெல்லி மதுபான ஊழல் வழக்கில் குற்றத்தைக் கண்டுபிடிக்க அமலாக்கத்துறை விரும்பினால் அவை பாஜகவின் கணக்குகளில் உள்ளன" என்றும் ஆம் ஆத்மி கூறியுள்ளது.

எதிர்க்கட்சிகளை பழிவாங்கி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ. போன்ற அமைப்புகளை ஏவி பழிவாங்கி வருகின்றதில் இதுவும் ஒன்று மாநில தேசியக் கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் டெல்லி முதல்வராக கேஜ்ரிவால் தொடர்வார்: ஆம் ஆத்மி இது குறித்து ஆம் ஆத்மியின் அதிஷி தெரிவித்தது. "நாங்கள் முன்பு சொன்னது போல டெல்லி முதல்வராக அரவிந்த் கேஜ்ரிவால் தொடர்வார் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறோம். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவர் சிறையில் இருந்தபடி முதல்வராக செயல்படுவார். அவர் தனது பணியை தொடர்வதை தடுக்க எந்த சட்டமும் இல்லை. அவர் குற்றவாளி அல்ல" என அவர் தெரிவித்தார்.

## கைது அருவருக்கத்தக்கது!

# கொடுங்கோன்மை பா.ஜ.க.வின் முகத்திரை கிழித்தெறியப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை,மார்ச்.22-

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் 'கொடுங்கோன்மை பா.ஜ.க.வின் முகத்திரை கிழித்தெறியப்படும்' என்று கூறியுள்ளார்.

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜிரிவால் கைது தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**2024 மக்களவைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில், தனது பத்தாண்டு ஆட்சியின் அவலங்களை நினைத்தும், தோல்வி உறுதியாகியுள்ளதாலும் அஞ்சி நடுங்கும் பாசிச பா.ஜ.க அரசு, சகோதரர் ஹேமந்த் சோரனைத் தொடர்ந்து, இன்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவாலைக் கைது செய்து, அருவருக்கத்தக்க நிலைக்குத் தரந்தாழ்ந்துள்ளது.**

**ஒரே ஒரு பா.ஜ.க தலைவர் மீது கூட விசாரணையோ கைது நடவடிக்கையோ இல்லை என்பதில் இருந்தே அவர்களின் அதிகாரத்து மீறலும், ஜனநாயகச் சிதைப்பும் அப்பட்டமாகிறது.**

**எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான இத்தகைய தொடர் பழிவாங்கும் நடவடிக்கைகள் அவர்களை பா.ஜ.க அரசு குறிவைத்து வேட்டையாடுவதை வெட்ட வெளிச்சம் ஆக்குகிறது.**

**இந்த கொடுங்கோன்மை பா.ஜ.க.வின் முகத்திரையை முற்றிலுமாகக் கிழித்தெறிந்து மக்களிடம் சீற்றத்தைத் தூண்டியுள்ளது. ஆனால் இந்தக் கைது நடவடிக்கைகளால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. மாறாக, நாங்கள் மேலும் உறுதியடைகிறோம். இந்தியா கூட்டணியின் வெற்றி உறுதியாகிறது.**

**மக்களின் சினத்தை எதிர்கொள்ளத் தயாராக இரு பா.ஜ.க.வே!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## பயந்துபோன சர்வாதிகாரி மோடி!

# ஜனநாயகத்துக்கு சாவு மணி அடிக்கிறார்!

## ராகுல் காந்தி கடும் கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 22-

"பயந்துபோன சர்வாதிகாரி பிரதமர் மோடி ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிக்கிறார்" என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது குறித்து தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து ராகுல் காந்தி தமது வலைத்தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பயந்துபோன சர்வாதிகாரி மோடி இறந்த ஜனநாயகத்தை உருவாக்க விரும்புகிறார்.

ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களையும் கைப்பற்றுவது, கட்சிகளை உடைப்பது, நிறுவனங்களை மிரட்டி பணம் பறிப்பது,

பிரதான எதிர்க்கட்சியின் கணக்கை முடக்குவது 'அசாதாரண சக்தி'க்கு போதாதென்று, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்களைக் கைது செய்வதும் சகஜமாகி விட்டது.



இதற்கு இந்தியா கூட்டணி தக்க பதிலடி கொடுக்கும்.

இவ்வாறு ராகுல் காந்தி தனது வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கெஜ்ரிவால் கைது: கடுமையான சதி!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

திருவனந்தபுரம், மார்ச் 22-

"டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டிருப்பது சதியாகும்" என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறியுள்ளார்.



இது குறித்து அவர் தமது வலைத் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

இது முற்றிலும் தீயது மற்றும் பொதுத் தேர்தலுக்கு சற்று முன்னதாக அனைத்து எதிர்ப்புக் குரல்களையும் மௌனமாக்குவதற்கான கடுமையான சதியின் ஒரு பகுதியாகும். இது ஜனநாயக செயல்முறைக்கு அஞ்சுபவர்களின் கோழைத்தனத்தை அம்பலப்படுத்துகிறது மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்து கூட்டு நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கிறது.

இவ்வாறு முதல்வர் பினராயி விஜயன் தமது வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# டெல்லி முதல்வராக கெஜ்ரிவால் தொடர்வார்!

## ஆம் ஆத்மி கட்சி அறிவிப்பு!

புதுடெல்லி,மார்ச்.22-

மதுபான கொள்கை தொடர்பான பண மோசடி வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், டெல்லி முதல்வராக அவரே தொடர்வார் என ஆம் ஆத்மி கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து ஆம் ஆத்மியின் அதிஷி தெரிவித்திருப்பதாவது:

"நாங்கள் முன்பு சொன்னது போல டெல்லி முதல்வராக அரவிந்த் கேஜ்ரிவால் தொடர்வார் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறோம். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவர் சிறையில் இருந்தபடி முதல்வராக செயல்படுவார். அவர் தனது பணியை தொடர்வதை தடுக்க எந்த சட்டமும் இல்லை. அவர் குற்றவாளி அல்ல" என அவர் தெரிவித்தார்.

சிறையில் இருந்தபடி முதல்வராக கேஜ்ரிவால் பணியாற்றும் பட்சத்தில் அது அரசியல் ரீதியாக நெருக்கடிகளை உருவாக்கும் என சொல்லப்படுகிறது. இதற்கு முன்னர் பிஹார் மாநில முதல்வராக இருந்த லாலு பிரசாத் யாதவ், ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட போது தனது பொறுப்பை அவரது மனைவி ராப்ரி தேவி வசம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜனவரியில் நில மோசடி வழக்கில் ஜார்க்கண்ட் மாநில முதல்வர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அப்போது அவர் முதல்வர் பொறுப்பில் இருந்து விலகி இருந்தார்.

முன்னதாக, டெல்லி அரசின் மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான பண மோசடி வழக்கில் தொடர்பாக அம்மாநிலத்தின் 2 அமைச்சர்களை அமலாக்கத் துறை கைது செய்தது. இருவரும் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இதுவரை ஜாமீன் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மாநில முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலிடம் விசாரணை நடத்த வேண்டும் என அமலாக்கத் துறை அவருக்கு சம்மன் அனுப்பியது. தான் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறி முதல்வர் கேஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராக மறுத்து வந்தார்.

இந்த வழக்கில் தெலங்கானா முன்னாள் முதல்வர் கே.சந்திரசேகர ராவின் மகளும், மேலவை உறுப்பினருமான கவிதா, கடந்த 15ம் தேதி அமலாக்கத் துறையால் ஹைதராபாத்தில் கைது செய்யப்பட்டார். இந்த சூழலில் அரவிந்த் கேஜ்ரிவால் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஆளுநருக்கு உயர்நீதிமன்றம் கண்டனம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

நாளைக்குள் (இன்றைக்குள்) ஆளுநர் தரப்பில் பதில் அளிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் உச்சநீதிமன்றம் உரிய உத்தரவுகளை பிறப்பிக்கும் எனவும் நீதிபதிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

ஒருமுறை தீர்ப்புக்கு தடை விதிக்கப்பட்டால் தண்டனை இல்லை என்றுதான் அர்த்தம் என மீண்டும் தெளிவுபடுத்திய உச்சநீதிமன்றம், நாளைக்குள் (இன்றுக்குள்) ஆளுநர் பாசிட்டிவ் முடிவுகளை எடுக்கவில்லை என்றால் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரலுக்கு இது ஏற்புடையது இல்லை என்றால் இப்போதே வாதிடலாம். இன்றே நாங்கள் உத்தரவு பிறப்பிக்க தயார் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர். உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கிய நிலையில் ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை. உச்சநீதிமன்றம் அரசியல் சாசன சட்ட விதி முறையை ஆளுநர் பின்பற்றி இருக்க வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்தனர், ஆளுநர் தனது கருத்துக் கேற்ப முடிவுகளை எடுக்க முடியாது. ஒருவரை அமைச்சராக்க, முதலமைச்சர் முடிவு செய்வது நாடாளுமன்ற ஜன நாயக நடைமுறை. அதற்கு ஆளுநர் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது எனவும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# கெஜ்ரிவால் கைது! ஜனநாயகப் படுகொலை!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, மார்ச் 22-

"டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டிருப்பது ஜனநாயகப் படுகொலை" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, எம்.எல்.ஏ., அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டெல்லி மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டிருப்பதை விட ஒரு ஜனநாயகப் படுகொலை எதுவும் இருக்க முடியாது. ஏற்கனவே ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார். அதன் மூலம் ஆட்சியை கவிழ்த்து விடலாம் என்று சதித் திட்டம் தீட்டியது பா.ஜ.க. ஆனால் மீண்டும் அங்கே ஆட்சி காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதை போலவே டெல்லி ஆம் ஆத்மி ஆட்சியை கவிழ்ப்பதற்கு தேர்தல் நேரத்தில் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செயப்பட்டிருக்கிறார். ஏற்கனவே ஆம் ஆத்மி அமைச்சர் மணீஷ் சிசோடியா சிறையில் இருக்கிறார். அமலாக்கத் துறையின் இத்தகைய அடக்குமுறைகளை வன்மையாக கண்டிக்கிறேன்.

இந்தியாவில் அமலாக்கத் துறை, வருமான வரித்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகிய அமைப்புகளின் மூலமாகத் தான் மோடி ஆட்சியில் அடக்குமுறைகள் ஏவி விடப்படுகிறது. எதிர்கட்சிகளை ஒடுக்குவதற்கு, முடக்குவதற்கு அமலாக்கத் துறையை மோடி பயன்படுத்துகிறார். இந்தியா கூட்டணியில் அரவிந்த் கெஜ்ரிவால் சேர்ந்தது முதற்கொண்டு அவரை பழிவாங்க வேண்டும் என்பதற்காகவே இந்த கைது நடவடிக்கை எடுக்கபப்ட்டுள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் காபந்து சர்க்காராக செயல்பட வேண்டிய மோடி அரசு எதிர்கட்சிகளை ஒடுக்குவதற்காக அமலாக்கத்துறையை பயன்படுத்துகிறது. சுயேச்சையாக, சுதந்திரமாக செயல்பட வேண்டிய தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரால் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்பதால் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை வேடிக்கை பார்க்கிறார்கள். தேர்தல் ஆணையம் மோடியின் கைப்பாவையாக மாறி விட்டதை தான் இது காட்டுகிறது. பாஜகவின் அடக்குமுறைக்கு முடிவு கட்ட 2024 மக்களவை தேர்தலை நாட்டு மக்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள இந்தியா கூட்டணியை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுக்கு விரோதமாக செயல்படுகிற சர்வாதிகாரிகள் ஆட்சியில் நீண்டகாலம் நீடித்ததில்லை. அதை போல விரைவில் மோடி ஆட்சி அகற்றப்படும். ஜனநாயகம் நிலைநாட்டப்படும். மோடியின் அடக்குமுறையை இந்தியா கூட்டணி ஒரணியில் திரண்டு நிச்சயம் முறியடிக்கும்.



இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், திருப்பெரும்பெரும்புதூர் நாடாளுமன்றத் தேர்தல் பணிமனைகளை மதுரவாயல் வடக்கு, மதுரவாயல் தெற்கு மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியப் பகுதிகளில் 21.3.2024 அன்று திறந்து வைத்தார். உடன் கழகப் பொருளாளரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளருமான டி.ஆர்.பாலு, மதுரவாயல் தெற்குப் பகுதிச் செயலாளர் க.கணபதி, எம்.எல்.ஏ. மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் வே.ராஜன் மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அ.ம.துரை வீரமணி ஆகியோர் உள்ளனர்.




இந்தியா கூட்டணி மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் ஆகிய தொகுதிகள் உட்பட்ட கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை கூட்டம் நேற்று புரசைவாக்கம் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் எம்பி தயாநிதிமாறன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியாராஜன், எம்.எல்.ஏ வெற்றியழகன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பொன்முடி விவகாரம்: உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகும்

# ஆர்.என்.இரவி ஆளுநர் பதவியில் நீடிப்பது சட்டப்படி சரியில்லை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி!

சென்னை, மார்ச் 22

பொன்முடிக்கு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்யாத ஆளுநர் ஆர்.என்.இரவிமீது உச்சநீதிமன்றம் கடும் அதிருப்தி தெரிவித்திருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகும் ஆளுநர் ஆர்.என்.இரவி பதவியில் நீடிப்பது நியாயப்படியும் சரியில்லை; அரசமைப்புச் சட்டப்படியும் சரியில்லை; அவர் பதவி விலகவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:

**செய்தியாளர்:** தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவிக்கு, பொன்முடி வழக்கில் உச்சநீதிமன்றம் தனது கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறது. இன்றைக்கோ அல்லது நாளைக்குள்ளோ முடிவு எடுக்காவிட்டால், நாங்கள் உத்தரவிட நேரிடும் என்று கடுமையான எச்சரிக்கையை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு பதிவு செய்திருக்கிறது. அது குறித்து உங்களுடைய முதற்கட்டப் பார்வை?

**கி.வீரமணி:** அரசமைப்புச் சட்டத்தின்படி பொன்முடி அவர்களை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவேண்டும் என்கிற முதலமைச்சருடைய பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்தது முழுக்க முழுக்க அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கை என்பதை தலைமை நீதிபதி உள்பட உறுதிபடுத்தியிருக்கிறார்கள்.

இதுபோன்று இவர், இப்போது முதல் முறையாக நடந்துகொள்ளவில்லை. இந்தக் கண்டனம் அவருக்குப் பலமுறை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இவ்வளவு உச்சக்கட்ட கண்டனத்தை இதுவரை யாரும், எந்த ஆளுநரும் பெற்றதே கிடையாது.

எனவேதான், நாளைக்கு (வெள்ளிக்கிழமை) பதவிப் பிரமாணத்தை செய்து வைப்பதைத் தவிர, அவருக்கு வேறு வழி கிடையாது.

என்றாலும்கூட, அதற்குப் பிறகும், அரசியல் நாகரிகத்தையும், அரசியல் பண்பாட்டையும் கருதி, இனிமேலும் அவர் தமிழ்நாடு ஆளுநராக நீடிப்பதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும், அரசமைப்புச் சட்டப்படி கிடையாது.

அவர் உடனடியாக அந்தப் பதவியிலிருந்து வெளியேறவேண்டும். இன்னுங் கேட்டால், இதற்குப் பொறுப்பேற்கவேண்டியது ஒன்றிய உள்துறைதான். அவருடைய நியமனத்திற்குக் காரணமானவர்கள், உடனடியாக அவரைத் திரும்பப் பெறவேண்டும்.

அப்படித் திரும்பப் பெறவில்லையானால், அவர்களும் சேர்ந்து இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்கிற செய்தி, வெளியுலகத்திற்கு மட்டுமல்ல, உச்சநீதிமன்றத்திற்கும் புரியவேண்டிய, புரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

எனவேதான், உடனடியாக அவர் நாளைக்குப் பதவிப் பிரமாணம் செய்தாலும்கூட, கடமை தவறிய அதிகாரி அரசமைப்புச் சட்டத்தின்மீது அவர் எடுத்த பதவிப் பிரமாணத்திற்கு விரோதமாக பலமுறை இது முதல்முறையல்ல பலமுறை தவறு செய்து, இன்றைக்கு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்ற காரணத்தினால்தான், தலைமை நீதிபதி உள்பட மற்ற நீதிபதிகளும் இவ்வளவு கடுமையான சொற்பிரயோகத்தை செய்துள்ளார்கள். இது போன்று இதுவரையில் வேறு எவருக்கும் செய்ததில்லை.

எனவே, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவிக்கு பொறுப்பு இருக்குமேயானால், உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகும் அவர் அந்தப் பதவியில் நீடிப்பது என்பது நியாயப்படியும் சரியில்லை; அரசமைப்புச் சட்டப்படியும் சரியில்லை.

அவர் வெளியேறவேண்டும்; அல்லது வெளியேற்றப்படவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமானது.

**செய்தியாளர்:** நீங்கள் ஒரு முதுபெரும் தலைவர்; இந்த 76 ஆண்டுகால அரசியல் வரலாற்றில், தமிழ்நாட்டில், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படக்கூடிய ஓர் ஆளுநரை, இதுவரை தமிழ்நாடு அரசு கண்டதுண்டா?



**கி.வீரமணி:** அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானவை என்கிறபொழுது ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிரதமர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட, அரசமைப்புச் சட்டத்தில், பிரமாண வாசகங்கள் தனித்தனியாக இருக்கின்றன.

ஆனால், ஆளுநருடைய பதவிப் பிரமாண வாசகங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எப்படி அமைக்கப்பட்டு இருக்கின்றன. 159-ஆவது பிரிவுப்படி எப்படி இருக்கின்றன என்று சொன்னால்,

''பொதுமக்களுடைய நன்மைக்காக நான் உழைக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்'' என்கின்ற வாசகங்கள் இருக்கின்றன.

**சட்டத்தை மதிக்காத ஆளுநர்**

ஆனால், இவர் பதவிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்ற ஓர் ஆட்சி இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சி அந்த ஆட்சி நிறைவேற்றுகின்ற சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார். அதை அவர் மதிக்கத் தயாராக இல்லை.

உச்சநீதிமன்றத்திலும் அதுகுறித்து வழக்கும் நிலுவையில் இருக்கின்றது.

இதற்கு முன்பு பேரறிவாளன் வழக்கிலேயே உச்சநீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உரியவராக ஆளாகியிருக்கிறார்.

இவ்வளவு நடந்தும் அவர், ஆளுநர் பதவியில் நீடிப்பது என்பது அரசமைப்புச் சட்டத்தின்படியும் சரி, மக்கள் விருப்பத்தின்படியும் சரி, அது நியாயமல்ல!

இந்த ஆளுநர் எங்கே சென்றாலும், கருப்புக் கொடியை சந்திக்காமல் வருவதில்லை.

சட்டமன்றத்தின் மரபையே உடைத்து, இதுவரையில் இல்லாத கொடுமைகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்!

வேண்டுமென்றே சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறுவது அதன்மூலம் பத்திரிகை விளம்பரம் தேடுவது சட்டமன்றத்திற்குப் போனால், எதிரிக்கட்சித் தலைவர்போல் நடந்து கொண்டு, சட்டமன்றத்தின் மரபையே உடைத்து, இதுவரையில் இல்லாத கொடுமைகளை, மரபு மீறல்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்.

**அரசியல் அநாகரிக ஆளுநர்**

ஆகவேதான், இந்த ஆளுநரை, நியாயப்படி, நீதியுள்ள ஓர் ஒன்றிய அரசாக இருந்தால், அவரைத் திரும்பப் பெற வேண்டும்; அல்லது இந்த ஆளுநரை, குடியரசுத் தலைவர் டிஸ்மிஸ் செய்யவேண்டும்.

அப்படியில்லையானால், உச்சநீதிமன்றத்தினுடைய கண்டனம் ஆளுநருக்கு மட்டுமல்ல; அவர்களையும் சுற்றிவரக் கூடிய நிலையை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இவ்வளவு அசிங்கப்பட்டு, அரசியல் அநாகரிகமான ஆளுநரை வேறு எங்கும் பார்க்கவே முடியாது!

எனவேதான், இது மிக முக்கியமான 76 ஆண்டு கால சுதந்திர வரலாற்றில், தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது மாதிரி, இப்படி ஓர் ஆளுநர் கிடைத்ததில்லை. வேறு எந்த இடத்திலும், இவ்வளவு அசிங்கப்பட்டதில்லை; அரசியல் அநாகரிகமான ஆளுநரை வேறு எங்கும் பார்க்கவே முடியாது.

எனவே, இதற்கு ஒரு விடை, ஒரு முடிவு இதன் மூலமாவது ஏற்படவேண்டும். இல்லையானால், மக்கள் தேர்தல்மூலம் அந்த முடிவைக் காட்டுவார்கள்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.



மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பாக 'வார் ரூம்' மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. திறந்து வைத்து ஆலோசனை வழங்கினார். உடன் கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.ஜே.சரவணன் மற்றும் மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் மற்றும் கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### 'இந்தியா' கூட்டணிக்கு பார்வதி சண்முக சாமியின்

# தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு ஆதரவு!

## துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதியை சந்தித்து தெரிவித்தனர்

தூத்துக்குடி, மார்ச் 22 -

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் திமுக சார்பில் இரண்டாவது முறையாக போட்டியிடும் கனிமொழி கருணாநிதி. நேற்று (21/03/2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு மாநில தலைவர் பார்வதி சண்முகசாமி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவுக்கு முழு ஆதரவு தெரிவித்தனர். அவருக்குக் கனிமொழி கருணாநிதி சால்வை அணிவித்து வரவேற்பு தெரிவித்தார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன் உடனிருந்தார்.

செய்தியாளர்களைச் சந்தித்த கனிமொழி கருணாநிதி: "திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் செயல்பாடுகளைப் பார்த்து,ஆட்சியின் மீது இருக்கக்கூடிய நம்பிக்கையின் காரணமாகத் தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு சார்பில் தமிழகம் முழுவதும் திமுக மற்றும் திமுக கூட்டணி இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்குப் பார்வதி சண்முகசாமி அவர்கள் இன்று அவர்களுடைய கூட்டமைப்பின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மற்றும் கூட்டணிக்கும் ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாஜகவுக்கு ஆதரவாக யார் இல்லை என்றாலும் வருமான வரித்துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளை வைத்து மிரட்டி கொண்டு இருக்கிறார்கள். யார் மீது விசாரணை குற்றம் சுமத்தப்படுகிறதோ அவர்கள் பாஜகவில் இணைந்தால் வாஷிங் மெஷினில் போட்டுக் கழுவி சுத்தப்படுத்தி விடுவார்கள்.

தூத்துக்குடி வின்பாஸ்ட் கார் நிறுவனம் இன்னும் பல நிறுவனங்கள் தூத்துக்குடிக்கு வரவேண்டும். இதன் மூலம் ஆண்கள் பெண்கள் என பல பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோளாக இருக்கும். மத்திய அரசிடம் வைக்கக் கூடிய ஒரு சில கோரிக்கைகள் ரயில்வே போன்ற கோரிக்கைகள் பலமுறை வைத்தால் தான் நிறைவேற்றித் தரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

10 ஆண்டுகள் கடந்த பிறகு தான் குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை இருந்தது. கலைஞர் அவர்கள் மன்மோகன் சிங்கருக்கு கடிதம் எழுதி தொடர்ந்து பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பி இருக்கிறேன். முதலமைச்சர் இதை வலியுறுத்தி இருக்கிறார்கள். அங்க இருக்ககூடிய அமைச்சர்களை தொடர்ந்து சந்தித்து இஸ்ரோவில் வேலை செய்யக்கூடிய அறிவியலாளர்கள் மற்றும் முக்கிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்களைச் சந்தித்து கோரிக்கைகளை வைத்திருக்கிறேன்.

அங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களை சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என கோரிக்கை வைத்திருக்கிறேன். தற்போது குலசேகரபட்டினம் இஸ்ரோ அமையக்கூடிய இடத்தில் இடத்தை தேர்வு செய்தது மற்றும் இடம் கையகப்படுத்துவது போன்ற பல் வேறு பிரச்சனைகளை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். அதை அத்தனை பேரும் இணைந்து நின்று சரி செய்து இருக்கிறோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி கூறினார்.

# தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக மற்றும் தோழமைக் கட்சிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு அறிக்கை!





தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் கழகத்தின் வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் மேற்கொள்ளவிருக்கும் தேர்தல் பணிகள் குறித்த அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் சைதாப்பேட்டை நூர்ஜகான் திரையரங்கம் அருகில் அமைந்துள்ள எஸ்.பி.எஸ். திருமண அரங்கில் இன்று (22.3.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவண்

**தென்சென்னை நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குழு**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கீரை ஆ. தமிழ்ச்செல்வன்

**மார்ச் 22 (1997)**



புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்" என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## நாடாளுமன்றத் தேர்தல் – 2024 : தமிழ்நாடு முழுவதும்



கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## திருச்சியில் இன்று தொடங்குகிறார்! தலைமைக் கழகம் அறிவிப்பு!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர்,

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| **22.03.2024 (வெள்ளிக்கிழமை)** | - | **திருச்சி, பெரம்பலூர்** |
| **23.03.2024 (சனிக்கிழமை)** | - | **தஞ்சை, நாகை** |
| **25.03.2024 (திங்கட்கிழமை)** | - | **கன்னியாகுமரி, திருநெல்வேலி** |
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | - | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன் கிழமை)** | - | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | - | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | - | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | - | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | - | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன்கிழமை)** | - | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | - | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | - | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | - | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | - | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | - | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | - | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | - | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | - | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | - | **காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | - | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# சிவகங்கையில்வழக்கறிஞரணிசார்பில்தேர்தல்கட்டுப்பாட்டுஅறை!

## மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை.மார்ச் 22-

சிவகங்கையில் கலைஞர் மாளிகையில் மாவட்ட வழக்கறிஞரணி சார்பில் அமைக்கப் பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை (வார்ரூம் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணி முத்து தலைமை வகித்தார். மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் சேயல்பாடுகள் குறித்து விளக்கி வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞரணி துணை அமைப்பாளர்கள் துரை வேலவன், செந்தில்குமார், கோதண்டராமன் நாகூர்கனி , திருமதி உமாபதி ராஜேந்திரன் ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர் கே. ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மாநில வழக்கறிஞரணி செயலாளர் என். ஆர். இளங்கோ அறிவுரையின் பேரில் மாவட்டம் தோறும் வழக்கறிஞரணி சார்பில் தேர்தல் கட்டுப்பாட்டு அறை செயல்பட உள்ளது .நமது மாவட்டத்தில் கடந்த தேர்தல்களில் வழக்கறிஞரணியினர் தேர்தல் பணிகளை சிறப்பாக பணியாற்றி உள்ளார்கள். தற்பொழுது நடைபெறும் தேர்தல்களில் வழக்கறிஞர்களின் பணி முக்கியமாக அமைந்துள்ளது. வேட்புமனு அளித்தல்,வேட்புமனு பரிசீலனை மற்றும் பல்வேறு பிரச்சினை கள் ஏற்படும் போது வழக்கறிஞர்கள் இதில் தலையிட்டு பிரச்சினையை தீர்த்து வைக்க பாடுபட்டு வருகிறார்கள். பிரச்சினை களை சட்டபூர்வமாக எதிர்கொள்வதற்கும் வழக்கறிஞர்களின் பணி இன்றியமையாததாக அமைந்துள்ளது. நமது மாவட்டத்தில் வழக்கறிஞர் களை இன்னும் அதிக அளவில் உறுப்பினர்களாக சேர்த்து வழக்கறிஞர் அணியினை வலுப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக தலைவர் தளபதி அவர்கள் தமிழகத்தில் 40 தொகுதிகளிலும்இண்டியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று விரும்பு கிறார். அதற்கு ஏற்ப நமது அனைத்து நிர்வாகிகளும் ஒன்றுபட்டு 40 தொகுதியிலும் வெற்றி பெறுவதற்கான பணிகளில் ஈடுபட வேண்டும். இன்று கழகத் தலைவரின் எண்ணத்தில் உருவானது தான் இண்டியா கூட்டணி. அந்த கூட்டணி மத்தியில் ஆட்சி அமைய நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றிட வேண்டும். இதற்காக தலைவர் தளபதி அவர்கள் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் அயராது அல்லும்பகலும் பணியாற்றி வருகிறார். அவரது பணிகள் இன்று இந்தியாவிற்கேவழிகாட்டுதலாக அமைந்துள்ளது. அவருடைய செயல்பாடுகளை இந்தியாவே உற்றுநோக்கி வருகிறது. எனவே அவரது கரத்தை வலுப்படுத்தும் வகையில் நாம் அனைவரும் தனது பணியினை சிறப்பாக செய்திட வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

மாவட்ட வழக்கறிஞரணி தலைவர் சேதுராமச்சந்திரன் நன்றி கூறினார் .

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன் . திருமலை முத்துராமலிங்கம் ,பொதுக்குழு உறுப்பினர் சுரேஷ்குமார், மாவட்ட அயலக அணி தலைவர் தலைவர் கேப்டன் சரவணன், அயலக அணி துணை அமைப்பாளர் சன்சீமான் சுப்பையா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் விவசாய தொழிலாளர் அணி தனசேகரன், தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் இளைஞரணி தங்க செல்வம் உட்பட மாவட்டம் முழுவதிலு மிருந்து வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

## இணைய சேவை மையம் வழியாக முன்பதிவு!

# பழனிக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

## திண்டுக்கல் மண்டல அரசு போக்குவரத்துக் கழகம் ஏற்பாடு!

பழனி, மார்ச் 22 -

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், (திண்டுக்கல் மண்டலம்) நிர்வாக இயக்குனர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

பழனியில் பங்குனி உத்திர திருவிழா வருகின்ற 25.03.2023 அன்று நடைபெறவுள்ளது.

திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் பகுதி களிலிருந்து பழனிக்கு செல்லும் பக்தர்களின் தேவைக்கேற்ப இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து பழனிக்கும், பழனியிலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் 23.03.2024 தேதி முதல் 26.03.2024 தேதி வரையிலும் சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பழனி செல்லும் பக்தர்களின் சுலபமான பயணத்திற்கு திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை, கரூர், சேலம், ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மற்றும் தேனி ஆகிய பேருந்து நிலையங்களில் பக்தர்களுக்கு உதவவும் வழிகாட்டவும் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இப்போக்குவரத்துக்கழகம் மூலம் பொது மக்கள் மற்றும் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய ஏதுவாக அரசு விரைவு போக்கு வரத்துக்கழகம் மூலம் (OTRS) www.tnstc.in Website, Mob App மற்றும் இணைய சேவை மையம் வழியாக முன்பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தெற்கு ஒன்றியம், மண்டலநாயனகுண்டா ஊராட்சி, காட்டுகொல்லை நியாய விலைக் கடை மற்றும் மேல்புதூர் நியாய விலை கடை ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட நியாய விலை கடை கட்டிடத்தை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஏ.சி.தேவகுமார், டி.அசோக்குமார், கே.முருகேசன், துரைசாமி, இந்துமதி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## வாக்காளர்களை திசை திருப்பும் வகையில்

# சமூக வலைதளத்தில் தவறான தகவல்களைப் பரப்பிடும் பா.ஜ.க. மீது நடவடிக்கை தேவை!

## தலைமை தேர்தல் ஆணையருக்கு தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு!

சென்னை, மார்ச் 22

வாக்காளர்களை திசை திருப்பும் வகையில் தவறான வகையில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் தனது சமூகவலைதளத்தில் (எக்ஸ்) தகவல்களை பரப்பி வரும் பா.ஜ.க. மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தலைமைத் தேர்தல் ஆணையருக்கு தி.மு.கழகம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அளித்துள்ள மனு வருமாறு:-

பாரதிய ஜனதா கட்சி தனது சமூக வலைதளப் பக்கத்தில் (எக்ஸ்) கடந்த 5-ஆம் தேதி தவறான முறையில் 2ஜி தொடர்பான விளம்பரம் ஒன்றை வெளியிட்டு வாக்காளர்கள் இதை மறந்துவிடக்கூடாது என்று தெரிவித்துள்ளது. இது தனி நபரை மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டையே அவமதிப்பதாகும்.

அதுமட்டுமின்றி அந்த விளம்பரத்தில் 11.11.2010 அன்று நியூ இந்தியன் எக்ஸ்பிரசில் வெளியான 'நாட்டுக்கான இழப்பு ரூ.1760000000000' என்று குறிப்பிட்டு, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த ஆ.ராசாவின் படத்தையும் வெளியிட்டுள்ளது.

பா.ஜ.க.வால் வெளியிடப்பட்ட இந்த விளம்பரம் பல்வேறு சமூக ஊடகங்களில் வெளியாகி, எனவே வாக்காளர்கள் இந்த கோடிக்கணக்கான ஊழலை மறந்துவிடாதீர்கள் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

இங்கே குறிப்பிடத்தக்கது என்னவெனில், ஆ.ராசா அவர்கள் முறைப்படி நீதி விசாரணையில் விசாரிக்கப்பட்டு குற்றவாளி இல்லை என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இப்படிப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்ட ஆ.ராசா பற்றி தவறாக பா.ஜ.க. தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டிருப்பது, இந்திய குற்றவியல் சட்டத்திற்கு மட்டுமின்றி, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு நேர்மாறானது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இது தொடர்பாக தேர்தல் சட்ட விதிமுறைகளை அப்பட்டமாக மீறிய பாரதிய ஜனதா கட்சி மீது உரிய நடவடிக்கை எடுக்கும் படியும், சட்டவிதிகளுக்கு உட்பட்டு தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் காஞ்சிபுரம் தொகுதி கழக வேட்பாளர்

# க.செல்வம் உத்திரமேரூரில் அறிஞர் அண்ணா - அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார்

## ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் – நிர்வாகிகள் பங்கேற்பு

காஞ்சிபுரம், மார்ச் 22 -


காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் இந்தியா கூட்டணியின் சார்பாக காஞ்சிபுரம் (தனி) பாராளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ள சிறுவேடல் க.செல்வம் 20- 03 - 2024 அன்று மாலை 5 மணியளவில் உத்திரமேரூரில் உள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா, சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர், சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்..

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக் குழு உறுப்பினர் .கெ.ஞானசேகரன் தலை மையில் உத்திரமேரூர் பேரூர் கழக செயலாளர் என். எஸ். பாரிவள்ளல் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.நாகன் , உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவர், பொதுக் குழு உறுப்பினர் .பொன்.சசிகுமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி . இளமதி கோவிந்தராஜ் , உத்திரமேரூர் ஒன்றிய கழக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.சண்முகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள், உத்திரமேரூர் ஒன்றிய கழக நிர்வாகிகள்,மாவட்ட ஒன்றிய, அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஊராட்சிகளின் கிளை கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதி பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (22.03.2024 வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7. செல்லப்பா தெரு என்ற விலாசத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல்

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தொகுதிகள் தோறும் தேர்தல் பணிக்குழு விவரம்!



மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

## தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் 2024

### சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1. | மு.மகேஷ்குமார் | தலைவர் | தி.மு.க. | 94444 04499 |
| 2 | எம். கிருஷ்ணமூர்த்தி | செயலாளர் | தி.மு.க. | 94440 47366 |
| 3 | இரா. துரைராஜ் | செயலாளர் | தி.மு.க. | 98844 64668 |
| 4 | எஸ். குணசேகரன் | உறுப்பினர் | தி.மு.க. | 98844 88870 |
| 5 | சைதை மா.அன்பரசன் | " | தி.மு.க. | 98413 85755 |
| 6 | ஸ்ரீதரன் | " | தி.மு.க. | 94440 03987 |
| 7 | சைதை சம்பத் | " | தி.மு.க. | 98840 16775 |
| 8 | மின்னல் கந்தப்பன் | " | தி.மு.க. | 93825 11115 |
| 9 | சைதை சாதிக் | " | தி.மு.க. | 9566016668 |
| 10 | மணிகண்டன் நாடிமுத்து | " | தி.மு.க. | 90031 92466 |
| 11 | பாஸ்கர் | " | தி.மு.க. | 98410 69120 |
| 12 | R. கிருஷ்ணகுமார் | " | தி.மு.க. | 96001 74981 |
| 13 | கோட்டூர் எஸ்.பிரகாஷ் | " | தி.மு.க. | 97899 09173 |
| 14 | முத்தமிழ் மன்னவன் | " | காங்கிரஸ் | 98401 93126 |
| 15 | சந்தானம் | " | காங்கிரஸ் | 92821 36844 |
| 16 | கணேஷ் | " | காங்கிரஸ் | 96984 83109 |
| 17 | எஸ்.வி.குமார் | " | ம. தி.மு.க. | 98413 85503 |
| 18 | ஜேக்கப் | " | வி.சி.க | 90941 87989 |
| 19 | வெங்கடேசன் | " | CPM | 97103 26278 |
| 20 | டி.சி.கே. சுந்தரம் | " | CPI | 94442 06195 |
| 21 | அப்துல்கலாம் | " | இ.மு.லீக் | 93440 72169 |
| 22 | ரமேஷ் | " | த.வி.தொ.க. | 81909 49978 |
| 23 | சினேகா | " | ம.நீ.ம | 90036 61122 |
| 24 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |
| 25 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 26 | ஜின்னா | " | ம.நே.ம.க. | 99405 11973 |

**கோ.வி.லெனின் - 77084 83700**

**தொகுதி பொறுப்பாளர்**

### விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | AMV.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 9962159159 |
| 2 | கே. கண்ணன் | செயலாளர் | தி.மு.க. | 9962002345 |
| 3 | மு. ராசா | செயலாளர் | தி.மு.க. | 9884409410 |
| 4 | க. தனசேகரன். | உறுப்பினர் | தி.மு.க. | 9884012130 |
| 5 | காசி முத்து மாணிக்கம் | " | தி.மு.க. | 9444041978 |
| 6 | கௌதமன் | " | தி.மு.க. | 9940923535 |
| 7 | யாழினி | " | தி.மு.க. | 9176398824 |
| 8 | வாசுகிபாண்டியன் | " | தி.மு.க. | 7299963998 |
| 9 | உ. துரைராஜ் | " | தி.மு.க. | 9444958481 |
| 10 | எஸ்டி. தங்கராஜ் | " | தி.மு.க. | 9962826699 |
| 11 | பி. எஸ். முருகேசன். | " | தி.மு.க. | 8608984065 |
| 12 | ஆர். சசிகுமார் | " | தி.மு.க. | 9840071389 |
| 13 | கனிமொழி தனசேகரன் | " | தி.மு.க. | 9710957957 |
| 14 | நிஷா சையத். | " | தி.மு.க. | 9841865444 |
| 15 | யாழினி | " | தி.மு.க. | 9176398824 |
| 16 | P. ராஜமாணிக்கம் | " | காங்கிரஸ் | 9840872801 |
| 17 | K. ராஜபாண்டி | " | காங்கிரஸ் | 9789818384 |
| 18 | வைகோ ரவி | " | ம.தி.மு.க. | 9941446138 |
| 19 | செ. கரிகால்வளவன் | " | வி.சி.க. | 9962225226 |
| 20 | E. ரவி | " | CPM | 9841395105 |
| 21 | தயாளன் | " | CPI | 9543265035 |
| 22 | வி. அப்துல்லா | " | ம.ம.க. | 9962361406 |
| 23 | மன்சூர் | " | த.மு.மு.க. | 9940385834 |
| 24 | சிக்கந்தர் | " | இ.யூ.மு.லீ. | 9840899988 |
| 25 | செல்வம் | " | ம.நீ.ம | 9841531567 |
| 26 | ஜின்னா | " | ம.ம.க | 9940511973 |
| 27 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க | 9500024593 |
| 28 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 9381955966 |

**கன்னிகை ஸ்டாலின் - 9884912377**

**தொகுதி பொறுப்பாளர்**

### வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | அசன் மௌலானா எம்.எல்.ஏ. | தலைவர் | காங்கிரஸ் | 79000 66666 |
| 2 | சு.சேகர் | செயலாளர் | தி.மு.க. | 98404 24318 |
| 3 | துரை கபிலன் | செயலாளர் | தி.மு.க. | 99628 06089 |
| 4 | வேளச்சேரி மணிமாறன் | உறுப்பினர் | தி.மு.க. | 91763 97897 |
| 5 | எஸ்.பாஸ்கரன் | " | தி.மு.க. | 94440 66199 |
| 6 | பாலசுந்தரம் | " | தி.மு.க. | 98410 56278 |
| 7 | பி.ஜே.பாஸ்கர் | " | தி.மு.க. | 98401 70507 |
| 8 | வே. ஆனந்தம் | " | தி.மு.க. | 99627 66635 |
| 9 | எம்.விநாயகமூர்த்தி | " | தி.மு.க. | 98407 63394 |
| 10 | பரிமேலழகன் | " | தி.மு.க. | 99401 32450 |
| 11 | சுரேஷ் | " | தி.மு.க. | 93822 02751 |
| 12 | வழக்கறிஞர் ஜெகதீசன் | " | தி.மு.க. | 94449 12827 |
| 13 | கழக ரமேஷ் | " | தி.மு.க. | 94440 84485 |
| 14 | முகேஷ் | " | தி.மு.க. | 94450 02020 |
| 15 | விஜயரதி | " | காங்கிரஸ் | 86674 72012 |
| 16 | தரமணி மணி | " | காங்கிரஸ் | 97101 16336 |
| 17 | ராபர்ட் | " | காங்கிரஸ் | 98848 88789 |
| 18 | சி.வி.செந்தில்குமார் | " | ம.தி.மு.க. | 90921 58333 |
| 19 | இளையா | " | வி.சி.க. | 94441 61149 |
| 20 | ரஃபீ | " | சி.பி.எம். | 98403 31529 |
| 21 | கோவிந்தன் | " | சி.பி.ஐ. | 98404 64941 |
| 22 | மொய்தீன் பாஷா | " | இ.யூ.மு.லீக் | 98844 16133 |
| 23 | தயாளன் | " | த.வி.தொ.க. | 90803 53152 |
| 24 | முத்துகுமார் | " | த.வா.க. | 95978 61222 |
| 25 | சினேகா | " | ம.நீ.ம. | 90036 61122 |
| 26 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 27 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |

### சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | எஸ். அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 98400 61354 |
| 2 | எஸ்.வி.ரவிச்சந்திரன் | செயலாளர் | தி.மு.க. | 94440 61590 |
| 3 | வி.இ. மதியழகன் | செயலாளர் | தி.மு.க. | 99625 50333 |
| 4 | வெங்கடேசன் | செயலாளர் | தி.மு.க. | 99413 33434 |
| 5 | பாலவாக்கம் க.சோமு | உறுப்பினர் | தி.மு.க. | 98402 65211 |
| 6 | த.விஸ்வநாதன் | " | தி.மு.க. | 93840 06322 |
| 7 | பாலவாக்கம் மனோகரன் | " | தி.மு.க. | 98404 28067 |
| 8 | எம்.கே.ஏழுமலை | " | தி.மு.க. | 98400 49609 |
| 9 | தா.பஷீர் | " | தி.மு.க. | 89397 65458 |
| 10 | எஸ். ஏ. ஹரிகிருஷ்ணன் | " | தி.மு.க. | 98410 97038 |
| 11 | பா.ரவி | " | தி.மு.க. | 93810 33110 |
| 12 | ரத்னா லோகேஸ்வரன் | " | தி.மு.க. | 98411 92728 |
| 13 | சி.பிரதீப் | " | தி.மு.க. | 94888 88812 |
| 14 | அனீஷ் | " | தி.மு.க. | 98849 75420 |
| 15 | பா. அருண்குமார் | " | தி.மு.க. | 98414 28800 |
| 16 | எம்.பார்த்திபன் | " | தி.மு.க. | 98842 82377 |
| 17 | சங்கீதா பாரதிராஜா | " | தி.மு.க. | 94443 58956 |
| 18 | ஜெ.இ.பாண்டியன் | " | தி.மு.க. | 98411 43199 |
| 19 | கா.தியாகராஜன் | " | தி.மு.க. | 98408 55056 |
| 20 | இராமன் | " | காங்கிரஸ் | 99621 44120 |
| 21 | அங்கமுத்து | " | காங்கிரஸ் | 93826 75440 |
| 22 | லோகநாதன் | " | காங்கிரஸ் | 81485 10203 |
| 23 | செந்தில்நாதன் | " | காங்கிரஸ் | 98404 00492 |
| 24 | சங்கர் | " | காங்கிரஸ் | 98419 98999 |
| 25 | கயல் கோவிந்தராஜ் | " | ம.தி.மு.க. | 94442 05253 |
| 26 | மதிவளவன் | " | வி.சி.க. | 72004 91774 |
| 27 | ஜெயவேல் | " | சி.பி.எம். | 99402 11124 |
| 28 | தோழர் ஜி.கண்ணதாசன் | " | சி.பி.ஐ. | 94442 06195 |
| 29 | முகமது அபுபக்கர் | " | இ.யூ.மு.லீக் | 97890 03864 |
| 30 | மனோகரன் | " | த.வி.தொ.க. | 98400 66146 |
| 31 | செல்வம் | " | த.வா.க. | 98410 83040 |
| 32 | பிரவீன் | " | ம.நீ.ம. | 96000 07339 |
| 33 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 34 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |

**வி.பி.கலைராஜன் 94440 13892**

**தொகுதி பொறுப்பாளர்**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தொகுதிகள் தோறும் தேர்தல் பணிக்குழு விவரம்!



அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

### மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | A.முரளி | தலைவர் | தி.மு.க. | 9840049577 |
| 2 | நந்தனம் மதி | செயலாளர் | தி.மு.க. | 9444109216 |
| 3 | மு.தம்பிதுரை | உறுப்பினர் | தி.மு.க. | 9941250535 |
| 4 | என்.அன்பர்கன் | " | தி.மு.க. | 8056232560 |
| 5 | நந்தனம் வேதா | " | தி.மு.க. | 9840807676 |
| 6 | மு.மலர் | " | தி.மு.க. | 9941296380 |
| 7 | மந்தைவெளி அ.பாபு | " | தி.மு.க. | 9444354757 |
| 8 | செல்விசௌந்தரராஜன் | " | தி.மு.க. | 9940246598 |
| 9 | வேலு சம்பந்தம் | " | தி.மு.க. | 6374400185 |
| 10 | யோகேஷ் ரவி | " | தி.மு.க. | 9884964986 |
| 11 | டி.தினகரன் | " | தி.மு.க. | 9840683623 |
| 12 | விஜய்வெங்கடேசன் | " | தி.மு.க. | 9840378053 |
| 13 | சத்தியமூர்த்தி | " | தி.மு.க. | 9840087925 |
| 14 | ஆர்.பாலு | " | தி.மு.க. | 9444287619 |
| 15 | விக்னேஷ்வரன் | " | தி.மு.க. | 9094699900 |
| 16 | தினேஷ் மாணிக்கம் | " | தி.மு.க. | 98411 11318 |
| 17 | துரை | " | காங் | 8610593573 |
| 18 | சாரணாத் | " | வி.சி.க | 9884082930 |
| 19 | எஸ்.கே சிவா | " | இ.க.கட்சி | 9444231216 |
| 20 | வேல் முருகன் | " | மா.க.கட்சி | 9444047038 |
| 21 | கழக குமார் | " | ம.தி.மு.க | 9500133889 |
| 22 | சுப்பிரமணி | " | ம.தி.மு.க | 7550206491 |
| 23 | முத்துராஜ் | " | த.வா.கட்சி | 9597861222 |
| 24 | செல்வம் | " | த.வி.தொ.கட்சி | 9841083040 |
| 25 | பிரவீன் | " | ம.நீ.ம | 9600007339 |
| 26 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.கட்சி | 9500024593 |
| 27 | வினோத் குமார் | " | ஆம்.ஆத்மி | 9381955966 |
| 28 | பீர் முகமது | " | இ.மு.லீக் | 9884416133 |
| 29 | அகமது அலிஜின்னா | " | ம.நே.ம.க | 9940511973 |
| 30 | பிஸ்மில்லா கான் | " | த.மு.மு.க | 7299119550 |

### தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | ஜெ.கருணாநிதி | தலைவர் | தி.மு.க. | 9444183111 |
| 2 | கே.ஏழுமலை | செயலாளர் | தி.மு.க. | 9500199992 |
| 3 | எஸ்.மோகன் | உறுப்பினர் | தி.மு.க. | 9789812345 |
| 4 | கோ.சு மணி | " | தி.மு.க. | 9940482233 |
| 5 | மாம்பலம் சந்திர சேகர் | " | தி.மு.க. | 9444053222 |
| 6 | மு.சத்தியா | " | தி.மு.க. | 7200665678 |
| 7 | வாசுதேவன் | " | தி.மு.க. | 9382167184 |
| 8 | அம்பேத்கர் | " | தி.மு.க. | -- |
| 9 | ஆறுமுகம் | " | தி.மு.க. | 9444326600 |
| 10 | ஜானகிராமன் | " | தி.மு.க. | 9444118899 |
| 11 | ராஜா அன்பழகன் | " | தி.மு.க. | 9790966669 |
| 12 | பழனிகிரமணியார் | " | தி.மு.க. | 9940414140 |
| 13 | உமா சங்கர் | " | தி.மு.க. | 9940391391 |
| 14 | டேன்டி பிரகாஷ் | " | தி.மு.க. | 9445444445 |
| 15 | அஸ்வின் குமார் | " | தி.மு.க. | 9677049694 |
| 16 | முத்தழகன் | " | காங் | 9841026696 |
| 17 | கரிகாவளவன் | " | வி.சி.க | 9962304323 |
| 18 | இ.கருணாநிதி | " | இ.க.கட்சி | 9381023046 |
| 19 | வேல் முருகன் | " | மா.க.கட்சி | 9444047038 |
| 20 | கழக குமார் | " | ம.தி.மு.க | 9500133889 |
| 21 | சுப்பிரமணி | " | ம.தி.மு.க | 7550206491 |
| 22 | முத்துராஜ் | " | த.வா.கட்சி | 9597861222 |
| 23 | செல்வம் | " | த.வி.தொ.கட்சி | 9841083040 |
| 24 | பிரவீன் | " | ம.நீ.ம | 9600007339 |
| 25 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.கட்சி | 9500024593 |
| 26 | வினோத் குமார் | " | ஆம்.ஆத்மி | 9381955966 |
| 27 | பீர் முகமது | " | இ.மு.லீக் | 9884416133 |
| 28 | அகமது அலிஜின்னா | " | ம.நே.ம.க | 9940511973 |
| 29 | பிஸ்மில்லா கான் | " | த.மு.மு.க | 7299119550 |

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

**மயிலை த.வேலு**
செயலாளர்
சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க.



குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் க.செல்வம் ஆகியோரை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் வேட்பாளர்கள் மற்றும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோருக்கு குன்றத்தூர் வடக்கு – தெற்கு ஒன்றியச் செயலாளர்கள் படப்பை ஆ.மனோகரன், ஏ.வந்தேமாதரம் பொன்னாடை, மலர் மாலை அணிவித்தனர்.



சென்னை, ஓட்டேரி, என்.கே.டி. மஹாலில், நேற்று (21.3.2024) “நாடும் நமதே! நாற்பதும் நமதே! என்ற இலக்குடன் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதி, கொளத்தூர் திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்ட இந்தியா கூட்டணி, தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, மாவட்ட பொறுப்பாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் உட்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருப்பெரும்புதூர் - காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும்

# கழக வேட்பாளர்கள் டி.ஆர்.பாலு - க.செல்வத்தை வெற்றி பெறச்செய்ய பாடுபடுவோம்!

## காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் முடிவு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

திருப்பெரும்புதூர், மார்ச்.22-

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு - காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் க.செல்வம் ஆகியோரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றியடையச் செய்ய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத் தோழர்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக பணியாற்றி வெற்றிக் கனியை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்பாதங்களில் சமர்பிப்போம் என்று மாவட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர்-அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், மௌலிவாக்கம்-மாங்காடு சாலையில் அமைந்துள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஆர்.டி.அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயகுமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், டி.காமராஜ், எஸ்.இந்திரன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எம்.கே.டி.கார்த்திக், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், எம்.ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, தொ.மு.ச.பேரவைச் செயலாளர் பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே.சையத்யூசூப், பொன்.ரமேஷ்கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், பெப்சி கண்ணன், உதயா கருணாகரன், சசிகலா, தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு,

தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

இந்திய திருநாட்டு மக்கள் இது காலம் வரையில் பேணி காப்பாற்றி வந்த சமூக நல்லிணக்கம் - மதச்சார்பின்மை - மக்கள் ஒற்றுமை ஆகிய உன்னத தத்துவங்களுக்கு முரணான வகையில் பாசிச ஆட்சி நடத்தி வரும் மோடி தலைமையிலான மக்கள் விரோத அரசை எதிர்த்து, இந்திய நாட்டில் உள்ள அனைத்து எதிர்கட்சிகளையும் ஒன்றிணைத்து “இந்தியா கூட்டணி என்ற மாபெரும் கூட்டணியை உருவாக்குவதற்கு வழிகாட்டியாக இருந்த தி.மு. கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கிறது.

வருகிற 19.04.2024 - வெள்ளிக்கிழமை அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களையும்,

காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.செல்வம் அவர்களையும் ஆதரித்து,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் கழக அணிகளின் நிர்வாகிகள் - கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் ஒன்றிணைந்து தேனீக்களைப் போல சுறுசுறுப்பாக தேர்தல் பணியாற்றி, இரவு - பகல் பாராமல் கடுமையாக உழைத்து, கூட்டணி கட்சி தோழர்களுடன் இணைந்து களப்பணியாற்றி

இந்திய ஒன்றியத்தில் பன்முகத் தன்மையைக் காக்கவும், மதவெறி சக்திகளை வீழ்த்தி, மதநல்லிணக்கம் தழைக்கவும், ஜனநாயகத்தை மீட்கவும் பாசிச பா.ஜ.க. அரசை வீழ்த்திட வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன்,

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் “இந்தியா” கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தி காட்டிடவும், நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்கள் முன்னெடுத்துள்ள

“நாற்பதும் நமதே” - “நாடும் நமதே” “ஒன்றுபட்டு நிற்போம்” - “வென்று காட்டியே தீருவோம்” என்ற முத்தான முழக்கங்களை கழகத்தினர் அனைவரும் மனதில் முன்னிறுத்தி தேர்தலில் ஒற்றுமையாக பணியாற்றி திருப்பெரும்புதூர் நாடாளு மன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களையும், காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் க.செல்வம் அவர்களையும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து 2 நாடாளுமன்றத் தொகுதி வெற்றிக் கனியையும், நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் தளபதி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிபோம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

### நெல்லை - கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# நாங்குநேரியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினின் மாபெரும் பிரச்சாரப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - மனோ தங்கராஜ் பொதுக் கூட்டத்திடலை பார்வையிட்டனர்!

நெல்லை, மார்ச் 22-

நெல்லை மற்றும் கன்னியாகுமரி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நெல்லை மாவட்டம் நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே வருகிற 25.03.2024 திங்கள் கிழமை நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றுகிறார்கள்.

பொதுக்கூட்டம் நடைபெற உள்ள இடத்தை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், ஞானதிரவியம் எம்.பி.மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சியினர் தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி நெல்லை மற்றும் கன்னியாகுமரி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நெல்லை மாவட்டம் நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே 25.03.2024 திங்கட்கிழமை நடக்கும் மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றுகிறார்கள்.

அதற்காக அமைக்கப்பட்டு வரும் பிரம்மாண்டமான மேடைப் பணிகளை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தன்னரசு,பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் பார்வையிட்டனர்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

வருகிற 25ஆம் தேதி நெல்லை பாராளுமன்றம் மற்றும் கன்னியாகுமரி பாராளுமன்றம் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் பொதுக்கூட்டம் நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு முதல்வரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார்.இந்த கூட்டத்தில் தி.மு.க. தொண்டர்கள் பொதுமக்கள் என 50,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள். முதல்வர் அவர்களின் தென் மாவட்ட பிரச்சார பயணம் தி.மு.க. தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சித் தொண்டர்கள் இடையே மிக பெரிய எழுச்சி ஏற்படுத்துவதுடன் நெல்லை மற்றும் கன்னியாகுமரி பாராளுமன்ற வேட்பாளர்கள் 4 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு அச்சாரமாக இந்த பொதுக்கூட்டம் அமையும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.


இந்த நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஏ.எல். எஸ்.லெட்சுமணன், பேச்சி பாண்டியன், தேவாலய உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் வாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த், துணை மேயர் ராஜு, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவஐயப்பன், கண்ணன், மீனவர் அணி துணை செயலாளர் எரிக்ஜூடு, மத்திய மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன், ஒன்றிய செயலாளர்கள் சுடலை கண்ணு, செல்வகருணாநிதி, ஜோசப்பெல்சி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி ஜான் ரபீந்தர், மாணவரணி அலெக்ஸ் அப்பாவு, வழக்கறிஞரணி செல்வசூடாமணி

மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மகளிர் அணி ரேவதி அசோக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வேலூர் மாவட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக

# வேலூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் அறிமுக கூட்டம்!

## மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



2024 வேலூர் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில் கழகத்தலைவர், முதல்வர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட கழக வெற்றி வேட்பாளர் து.மு.கதிர்ஆனந்த் எம்.பி அவர்களை சட்டமன்றத் தொகுதி வாரியாக அறிமுகபடுத்திடும் கூட்டம் கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் சிறப்புரையுடன் கீழ்கண்ட நிகழ்ச்சிநிரலின்படி நடைபெற உள்ளது.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் நிகழ்விடம் |
|---|---|---|
| 22.03.2024 காலை 10.00 மணி | கீ.வ.குப்பம் | குடியாத்தம் – காட்பாடி சாலை, ரைஸ் மஹால் எதிரில், சேத்துவண்டை |
| 22.03.2024 மாலை 06.00 மணி | அணைக்கட்டு | பேருந்து நிலையம், அணைக்கட்டு |
| 24.03.2024 மாலை 05.00 மணி | குடியாத்தம் | புதிய பேருந்து நிலையம் அருகில், வேலூர் சாலை, குடியாத்தம் |

எனவே, அந்தந்த தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தியா கூட்டணி தோழமை கட்சிகளான காங்கிரஸ், விசிக, CPI, CPM, மதிமுக, கொ.ம.தே.க, முஸ்லீம் லீக், மக்கள் நீதி மைய்யம், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, திராவிடர் கழகம் உள்ளிட்ட நிர்வாகிகள், கழக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ஆகியோர் மேற்குறிப்பிட்ட

நிகழ்ச்சிநிரலின்படி நடைபெற உள்ள வேட்பாளர் அறிமுககூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.



தேனி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்செல்வனை ஆதரித்து அமைச்சர் – கழக மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (23ஆம் தேதி) ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பு பிரச்சாரம் செய்ய இருக்கும் இடத்தினை தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ ஆகியோர் பார்வையிட்டனர். உடன் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் செந்தில், மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ராமசாமி, கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம், பேரூர்ச் செயலாளர் சரவணன், தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகர தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் தொகுதி களப்பணி,தேர்தல் பணி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாநகர வழக்கறிஞரணி அமைப்பாளர் சுரேஷ்குமார் தலைமையில் அணித்தலைவர் ஜாகிர் உசேன்,துணை அமைப்பாளர்கள் சண்முகசுந்தர்,சங்கர் கணேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு. சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசினார். நிகழ்வில் வழக்கறிஞரணி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார்,தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மாரியப்பன்,துரை, களப்பணி வழக்கறிஞர்கள் ரிபாய், பரமசிவன், கணேசன்,வேம்பு, சுப்பிரமணியன், வினோத்,சேக் முகமது நிஜாமுதீன்,முகம்மது நயினார்,அந்தோணி ஆரோக்கியராஜ், தினகரன், பட்டன், லத்திகா சரண், சுபாஷ்,பீர் ராஜா,அம்பேத் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திராவிட தமிழர் கட்சி 2024 நாடாளுமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள இந்தியா கூட்டணியை ஆதரித்து நாடு முழுவதும் பிரச்சாரம் செய்வதென முடிவு செய்து கடந்த 19.3.2024 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆதரவு தீர்மானம் வழங்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் வெண்மணி தலைவர், நெல்லை கதிரவன் பொதுச் செயலாளர் சு.கா. சங்கர் மாநில அமைப்பு செயலாளர், தங்கவேல் கொள்கை பரப்புச் செயலாளர், கரு வீரபாண்டியன் மாநில துணைப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட திராவிட தமிழர் கட்சியின் தோழர்கள் கலந்து கொண்டார்கள்



கன்னியாகுமரி, திருநெல்வேலி தொகுதியில் போட்டியிடுகிற கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து 25.3.2024 – திங்கட்கிழமை நாங்குநேரி சுங்கச்சாவடி அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு கூட்டணி கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றுகிறார்கள். பொதுக்கூட்டம் நடைபெற உள்ள இடத்தை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு,மனோ தங்கராஜ் ஆகியோர் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், ஞானதிரவியம் எம்.பி. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாலைராஜா,லட்சுமணன், கிரகாம்பெல், பிரபாகரன்,பேச்சி பாண்டியன்,அலெக்ஸ்அப்பாவு,விஜிலா சத்யானந்த், சுரேஷ், தர்மன், சுடலைகண்ணு, ஜோசப்பெல்சி, செல்வகருணாநிதி, கண்ணன், பரமசிவம் ஐயப்பன், செல்வ சூடாமணி, ராஜு, கருப்பசாமி, கோட்டையப்பன், மீரான்மைதீன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

# சிவகங்கை தொகுதியில் 36 கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பு!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

சிவகங்கை, மார்ச் 18 - சிவகங்கை மக்களவைத் தொகுதியில் 36கண்காணிப்புக் குழுக்கள் தேர்தலை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளன.

மக்களவை தேர்தல் தமிழகத்தில் ஏப்.19அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலானது குறித்து செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் ஆஷாஅஜித் தெரிவித்ததாவது:

சிவகங்கை மக்களவை தொகுதியில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த நான்கு சட்டமன்ற தொகுதிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி, திருமயம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகள் உட்பட மொத்தம் ஆறு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. தற்போது மக்களவை தொகுதியில் மொத்தம் 16லட்சத்து 23ஆயிரத்து 408 வாக்காளர்கள் உள்ளனர். 1873வாக்குச்சாவடிகள் உள்ளன. 162வாக்குச்சாடிகள் பதட்டமானவை யாக கண்டறியப்பட்டுள்ளன.

இதில் மத்திய போலீஸ் படை பாதுகாப்பு போடப்படும். தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதால் வாகன சோதனை, பறக்கும்படையினர் சோதனை உள்ளிட்டவைகள் நடந்து வருகின்றன. ரூ.50ஆயிரத்திற்கு கூடுதலாக கொண்டு செல்பவர்கள் கட்டாயம் அதற்கான ஆவணங்களை கொண்டு செல்ல வேண்டும்.

தேர்தல் பணியில் 6உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், பறக்கும் படையினர், நிலையான கண்காணிப்புக்குழு, வீடியோ கண்காணிப்புக் குழு என 36குழுக்கள் செயல்பட உள்ளன.

இது தவிர மாவட்டம் முழுவதும் 14செக்போஸ்டுகள் சிசிடிவி கேமரா வசதியுடன் அமைக்கப்பட்டு அங்கு போலீசார் பாதுகாப்பு மற்றும் சோதணை செய்யும் பணிகளில் ஈடுபட உள்ளனர். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24மணி நேரமும் செயல்படும வகையில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. 1950மற்றும் 18004257036 கட்டணமில்லா தொலைபேசி எண்களில் தேர்தல் தொடர்பான புகார் மற்றும் தகவல்களை தெரிவிக்கலாம். அனைவரையும் வாக்களிக்க வைக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசு கட்டிடங்கள், தனியார் கட்டிடங்களில் வைக்கப்பட்டுள்ளவிளம்பரங்களை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதுபோது எஸ்.பி. டோங்கரேபிரவீன் உமேஷ், தேர்தல் தாசில்தார் மேசியாதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## பி.எம்.ஸ்ரீதர் தலைமை! அ.பாரிபாலன் வரவேற்புரை!

# நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, மார்ச் 22- நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட, தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் வரவேற்றார்.

தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.செல்வமுத்துகுமரன், மா.ரெக்ஸ், எஸ்.ராபர்ட்கிங், காந்திமதிலோகநாதன், பரமேஷ்வரிவெங்கட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் செல்லமுருகன் , கணேசன், வினோத், ஆத்மநாதன், மைதிலி, அந்தோனிடேவிட், இளையராஜா ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் 40க்கு 40 என்ற இலக்கை எட்டும் வகையில் தகவல் தொழில் நுட்ப அணியின் சார்பில் பிரச்சார பணியை சிறப்பாக செய்திடுவது என்றும், இந்தியா கூட்டணியின் வேட்பாளராக நாகை நாடாளுமன்ற தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடும் வை.செல்வராஜ்க்கு நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் தாய் கழகத்தோடு வீடு வீடாக சென்று பிச்சாரம் செய்யும் பணியில் ஈடுப்படுவது என்றும், கழகத்தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்களின் சாதனைகளை தொடர்ந்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு பிரச்சாரப்பணியை செய்திடுவது என்றும்,

நாளை (23ம் தேதி) திருவாரூர் கொரடாச்சேரில் கழகத்தலைவர் தளபதி அவர்கள் கலந்து கொள்ளும் நாகை, தஞ்சை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணியை சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும், 10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பொது துறை நிறுவனத்தை விற்பனை செய்தது, சி.ஏ.ஜி. அறிக்கையின் படி ரூ. 7.5 லட்சம் கோடி ஊழல், தேர்தல் பத்திரம் என்ற பெயரில் பி.ஜே.பி. கட்சிக்கு ரூ. 10 ஆயிரம் கோடிக்கு மேல் நிதி நிறுவனங்களை மிரட்டி நிதி பெற்றது போன்றவற்றை சமூக வலை தளத்தில் ஆதாரத்துடன் பதிவிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது

## கொரடாச்சேரியில் பிரமாண்ட மைதானம்!

# கழகத் தலைவர்–முதல்வர் பங்கேற்கும் பிரச்சாரக்கூட்டம்!

## பூண்டி கே.கலைவாணன் முன்னிலையில் ஏற்பாடுகள் தீவிரம்!

திருவாரூர், மார்ச் 22- மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் பங்கேற்கவிருக்கும் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சார கூட்டத்திற்கான ஏற்பாடுகள் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் கொரடாச்சேரியில் பிரமாண்டமாக நடைபெற்றுவருகிறது.

இந்தியாவை அழிவுப்பாதைக்கு அழைத்துசெல்லும் வகையில் கடந்த பத்தாண்டுகளாக ஒன்றிய பாசிச பிஜேபி அரசின் மதவாத சக்திகளை முறியடிக்கும் வகையில், தமிழ்நாட்டில் இந்திய துணைக்கண்டமே வியக்கும் வகையில் ஆட்சி நடத்தும் திராவிட நாயகர் தளபதி அவர்களின் முன்னெடுப்பில், அகில இந்தியாவில் உருவாகி இருக்கும் இந்தியா கூட்டணி பாஜக அரசுக்கு மாற்றாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு பிரபலம் அடைந்துவருகிறது. தமிழ்நாட்டில் புதுச்சேரியையும் சேர்த்து நாற்பது தொகுதிகளையும் வென்றெடுக்க திமுக தலைமையிலான கூட்டணி தேர்தல் பணிகளை மேற்கொண்டு துவங்கியுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய நாடாளுமன்ற தொகுதிக்கான இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் பரப்புரை நாகைதஞ்சை பிரதான சாலையில் உள்ள கொரடாச்சேரியில் பிரமாண்ட பொதுக்கூட்டமாக நாளை (23.03.2024 சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் நடைபெற இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,அவர்களின் முன்னிலையில் கழக நிர்வாகிகள் செய்துவருகின்றனர். பிரமாண்டமான வகையில் ஏற்பாடுசெய்யப்படும் இந்த அரங்கிற்கு மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடல்" என பெயரிடப்பட்டுள்ளது.

திருவாரூர் என்றாலே பிரமாண்டம் என்கிற வகையில் ஏற்பாடுகளை செய்துவரும் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்கும் கூட்டம் என்பதாலும், இந்தியா கூட்டணி தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் என்பதாலும் தஞ்சை மற்றும் நாகை மாவட்ட கழகத்தினருடனும், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடனும் இணைந்து மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பொய்யானத் தகவல்களை தெரிவித்து விளம்பரம்!

## உச்சநீதிமன்றத்தில் பதஞ்சலி நிறுவனம் மன்னிப்பு கோரியது!

புதுடெல்லி, மார்ச் 22- பொய்யான தகவல்களை தெரிவித்து விளம்பரம் செய்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில், சாமியார் பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.

பல்வேறு நோய்களுக்கு நிரந்தர குணம் அளிப்பதாக சாமியார் பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் தொடர்ந்து விளம்பரங்களை வெளியிட்டு வந்தது. இதனை எதிர்த்து இந்திய மருத்துவர்கள் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், உடனடியாக விளம்பரங்களை அகற்றுமாறு பதஞ்சலி நிறுவனத்திற்கு உத்தரவிட்டது. எனினும் அந்த உத்தரவை செயல்படுத்தாத பாபா ராம்தேவ், மேலாண்மை இயக்குனர் பாலகிருஷ்ணா ஆகியோர், பத்திரிகையாளர்கள் சந்தித்து தங்களது விளம்பரங்களை நியாயப்படுத்தி பேசினர்.

இதனை தொடர்ந்து, அவர்களுக்கு நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் அனுப்பிய உச்ச நீதிமன்றம், இருவரும் வரும் ஏப்ரல் 2ம் தேதி நேரில் ஆஜராக சம்மன் அனுப்பி உத்தர விட்டுள்ளது. இந்த உத்தரவை தொடர்ந்து, தற்போது பதஞ்சலி நிறுவன மேலாண்மை இயக்குனர் பாலகிருஷ்ணா மன்னிப்பு க் கோரி உச்சநீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளார். அதில் தங்களது நிறுவனம் வெளியிட்ட விளம்பரத்திற்கு வருந்துவதாகவும், அதற்கு மன்னிப்பு கோருவதாகவும் பாலகிருஷ்ணா குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# சென்னையில் காவல் துறை - வங்கிகள் - தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட தேர்தல் ஆணையர் தலைமையில்!

சென்னை, மார்ச் 22 - இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, காவல்துறை, வங்கிகள், வருமான வரித்துறை, ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு உள்ளிட்ட தேர்தல் பணி குழுவினருடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (21-03- 2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்றது.

காவல் துறை

வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் தேவையான இடங்களில் அமைக்கப்பட வேண்டிய தடுப்புகள் குறித்தும், வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படவுள்ள பாதுகாப்பு அறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் காவல்துறையின் சார்பில் பொறுப்பு அலுவலர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும், சட்டமன்றத் தொகுதி வாரியாக அரசியல் கட்சியினர் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு இணையதளம் வழியே வழங்கப்படவேண்டிய அனுமதி குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும் வாக்குப்பதிவிற்காக வாக்குப்பதிவு மையங்களில் செய்யப்பட்ட வேண்டிய ஏற்பாடு பணிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்தும், வாக்குச்சாவடி மையங்களில் வெப் கேமரா மூலம் நேரடியாக கண்காணிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டது.

இதேபோல் வங்கிகள், வருமான வரித்துறை மற்றும் கலால் துறை உள்ளிட்ட தேர்தல் பணி தொடர்புடைய பல்வேறு குழுக்களிடம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு இப்பணிகள் சிறப்பாக மேற்கொள்வது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

முன்னதாக, சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான பயிற்சிக்காக முதற்கட்டமாக கணினி மூலம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் முதலாவது கணினி குலுக்கல் முறையில் ( First Randomization) பாராளுமன்றத் தேர்தலுக்கான சென்னையில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

தொடர்ச்சியாக, அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களின் விளம்பரங்களுக்கு அனுமதி வழங்குதல், நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் தேர்தல் குறித்த செய்திகள், விதிமீறல்கள் ஆகியவற்றை கண்காணித்திடும் சென்னை மாவட்ட ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு (MCMC) உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் அபிஜித் அதிகாரி, ஜி. ஏ. ஹரஹானந்த், சுபோத் சிங், மதுக்கர் குமார், முகேஷ் குமாரி, மானசி திரிவேதி, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர். லலிதா, (கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்), டாக்டர் ஜி.எஸ்.சமீரன், (இணை ஆணையாளர் (பணிகள்), கூடுதல் காவல் ஆணையாளர்கள் கபில் குமார் சி. சரத்கர், (தலைமையிடம்), அஸ்ரா கார்க், (வடக்கு), பிரேம் ஆனந்த் சின்ஹா, (தெற்கு), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் எம். பி.அமித், (சென்னை தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (சென்னை மத்தியம்), . கட்டா ரவி தேஜா, (சென்னை வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து இன்று தி.மு.கழக வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழகத் **தலைவர்** அவர்களின் அறிவுரையின்படி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், கழக வேட்பாளர்களாக போட்டியிடுபவர்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்து குறித்து கலந்தாலோசிக்க, "தி.மு.க. வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (22.3.2024 - வெள்ளிக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இதில், தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அவர்கள், கழக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து ஆலோசனைகள் வழங்கிட உள்ளார்.

இக்கூட்டத்தில், கழக வேட்பாளர் அல்லது அவரது முகவர், கழக வேட்பாளர் போட்டியிடும் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் - 20.3.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி தேரடி பகுதியில் I.N.D.I.A கூட்டணியின் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் 20.03.2024 அன்று மாலை நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், அமைச்சருமான திருமதி. பி.கீதாஜீவன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி மாநகர மாவட்ட தலைவர் முரளிதரன், சமத்துவ மக்கள் கழக மாவட்டச் செயலாளர் அற்புதராஜ், மாநகரக் கழகச் செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணை மேயர் திருமதி ஜெனிட்டா செல்வராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் சரவெடி சரத்பாலா, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் துறைமுகம் பிளாரன்ஸ், திருமதி. கஸ்தூரி தங்கம், நிர்மல்ராஜ், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார், அந்தோணி ஸ்டாலின், திருமதி ஜெயசீலி, திருமதி பவானி மார்ஷல், திருமதி.மெட்டில்டா, திருமதி, நாகேஸ்வரி, அருண்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முதல்வர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், "அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகத்தின் நிறுவனர்தலைவர் திருச்சி பொன்.முருகேசன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



முதல்வர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 'இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட்டெவலப்பர்ஸ் நிலதரகர்கள் நலச் சங்கத்தின்' அகில இந்திய தலைவர் விருகை வி.என். கண்ணன் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தார்.

### தேர்தல் பத்திர முறைகேடு: ஒன்றிய பா.ஜ.க. அரசால்

# உலக அளவில் இந்தியாவின் பெயருக்கு களங்கம்!

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 22–

தேர்தல் பத்திர முறைகேட்டால் உலக அளவில் இந்தியாவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய மல்லிகார்ஜுன கார்கே, தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகள் உள்நோக்கத்துடன் முடக்கப்பட்டுள்ளதாக கண்டனம் தெரிவித்தார்.

அமலாக்கத்துறை, சிபிஐ, வருமானவரித்துறை உள்ளிட்ட அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க., அரசு தவறாக பயன்படுத்துகிறது என்று குற்றம் சாட்டிய அவர், தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் பா.ஜ.க., பல ஆயிரம் கோடி ரூபாய்



பணத்தை முறைகேடாக பெற்றுள்ளது என்று கண்டனம் தெரிவித்தார்.

பா.ஜ.க.,வின் தேர்தல் நன்கொடை பத்திர முறைகேட்டால் உலக அளவில் இந்தியாவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார். தேர்தல் நன்கொடை பத்திரங்களின் ரகசிய எண்கள் சமர்ப்பிக்கப்பட்டபின்பு, இந்த விவகாரத்தில் நியாயம் கிடைக்கும் என்று கார்கே தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

**காங்கிரஸ் மூத்தத் தலைவர் சோனியாகாந்தி,**

இதனைத் தொடர்ந்து பேசிய காங்கிரஸ் மூத்தத் தலைவர் சோனியாகாந்தி, மோடி ஆட்சியில், எதிர்க்கட்சிகள் மீதான தாக்குதல் அதிகரித்துவிட்டது என்றும், இது சட்ட விதிகளுக்கு புறம்பானது என்றும், அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்றும் சோனியாகாந்தி தெரிவித்தார்.

மோடி ஆட்சியில் இந்தியாவின் ஜனநாயகத்திற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியை முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மோடி அரசு செயல்பட்டு வருகிறது என்று குற்றம்சாட்டிய அவர், காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். மோடி அரசின் செயல்பாடுகள் நியாயமான தேர்தலுக்கும், ஜனநாயக நடைமுறைக்கும் விரோதமாக உள்ளது என்று தெரிவித்த சோனியா காந்தி, நேர்மையாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெற, எதிர்க்கட்சிகளையும் செயல்பட அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

**ராகுல் காந்தி கடும் விமர்சனம்!**

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகளை முடக்கியிருப்பது கிரிமினல் குற்றம் என்று ராகுல் காந்தி கடுமையாக சாடியுள்ளார். காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பிரதமரும், உள்துறை அமைச்சரும் நடத்துவது கிரிமினல் செயல் என குற்றம் சாட்டியுள்ளார். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் இன்றைக்கு, இந்தியாவில் ஜனநாயகம் என்பது பொய்யாகிவிட்டதாகவும் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

### தேர்தல் ஆணையர் பணியிடங்களுக்கு 6 பேர் தேர்வு செய்யப்பட்டு

# அதிவிரைவில் 2 பேரை தேர்தல் ஆணையர்களாக நியமித்தது எப்படி ?

### ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி !

புதுடெல்லி, மார்ச் 22-

தேர்தல் ஆணையர் பணியிடங்களுக்கு 200 பேர் களத்தில் இருந்தநிலையில், 6 பேர் அதிவிரைவில் தேர்வு செய்யப்பட்டு தேர்தல் ஆணை யர்களாக 2 பேரை நியமித்தது எப்படி என்று ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

புதிய தேர்தல் ஆணையர்கள் நியமனத்திற்கு எதிரான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தன. அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், தேர்வுக் குழுவில் உறுப்பினராக உள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கு 10 நிமிடங்களுக்கு முன்புதான், தேர்வு செய்யப்படவுள்ள ஆணையர்கள் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

வழக்கு நிலுவையில் உள்ளபோது அவசரகதியில் தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்துள்ளனர் என்றும் குற்றம்சாட்டினார். 2 தேர்தல் ஆணையர்கள் முறையாக தேர்வு செய்யப்படவில்லை என்றும், உச்சநீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக இந்த நியமனங்கள் நடைபெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டார். ஒன்றிய அரசால் மட்டுமே தேர்தல் ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டால் அது தேர்தல் ஆணையம் முறையாக செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்காது என்றும் அவர் கூறினார். புதிய குழுவை அமைத்து தேர்தல் ஆணையர்களை நியமிக்க உத்தரவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், தேர்தல் ஆணையர் பணியிடங்களுக்கு 200 பேர் களத்தில் உள்ள நிலையில், 6 பேர் அதிவிரைவில் தேர்வு செய்யப்பட்டது எப்படி என்றும், ஏன் அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய நேரத்தில் தேர்வு பட்டியல் வழங்கப்படவில்லை என்றும் ஒன்றிய அரசுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மூன்று நாட்களுக்கு முன்பே தேர்வு பட்டியலை வழங்கி இந்த பிரச்சனைகளை தவிர்த்து இருக்கலாம் என்றும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் காரணமாகவே அவசரமாக தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்த தாக ஒன்றிய அரசு சார்பில் பதிலளிக்கப்பட்டது.

அப்போது தேடுதல் குழுவானது, முன்பே இந்த பணிகளை தொடங்கி இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிய நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஆகஸ்ட் மாதத்திற்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டனர்.

### மதத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்கு சேகரிக்கும்

# பிரதமர் மோடி மீது உரிய நடவடிக்கை எடுத்திடுக!

### தலைமை தேர்தல் ஆணையரிடம் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி புகார் மனு!

சென்னை, மார்ச் 22

மதத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்குச் சேகரிக்கும் பிரதமர் நரேந்திர மோடி மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தலைமைத் தேர்தல் ஆணையரிடம் தி.மு.கழகம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மனு அளித்துள்ளார்.

அவரது மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சமீபத்தில் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சேலத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது அவர் பேசும்போது, இந்தியா கூட்டணி மீண்டும் மீண்டும் வேண்டும் என்றே இந்துக்களுக்கு எதிராக நடந்துகொள்வதாகவும், இந்து மதத்திற்கு எதிராக பேசி வருவதாகவும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்து மதத்தை கடுமையாகத் தாக்கி வருவதாகவும்



பேசி வருகிறார்.

இதை எப்படி நாங்கள் தாங்கிக் கொள்வது? இதை எப்படி அனுமதிப்பது?

மதம், இனம், மொழி இவைகளுக்கு எதிராக பேசுவது, உணர்வுகளை பிரதிபலிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 123 (3ஏ) தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இதையே பொதுத்தேர்தலுக்கான நெறிமுறைகளும் தெரிவிக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் சேலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியிருப்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் தேர்தல் நெறிமுறைகளுக்கு முற்றிலும் எதிரான ஒன்றாகும். உயர் பதவியில் இருந்துகொண்டு ஒரு மதத்தின் அடிப்படையில் வாக்கு சேகரிப்பது தவறான அறிகுறியாகும். எனவே இந்தியத் தேர்தல் ஆணையம் உடனடியாக இதில் தலையிட்டு இதுபோன்ற மதம், இனம், மொழி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாக்கு சேகரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்.

எனவே எங்களின் இந்தப்புகாரின் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இனியும் அவ்வாறு நிகழாமல் சட்டத்தின் அடிப்படையில் செயல்பட தேவையான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.





தஞ்சாவூர், நாகப்பட்டிணம் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் 23/03/2024 அன்று கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொள்ளவது முன்னிட்டு கொரடாச்சேரியில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

### மதுரை கிழக்கு தொகுதியில்

# மதுரை நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, மார்ச் 22-

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஆலத்தூரில் மதுரை நாடாளுமன்ற இந்தியா கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம் அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி பேசுகையில், நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வேட்பாளராவார். அதனால் நாம் அனைவரும் கடுமையாக பாடுபட வேண்டும், தலைவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை நாடு போற்றும் அறிக்கையாக உள்ளது மக்கள் வரவேற்கக் கூடிய பெருமைமிக்க அறிக்கை இதனால் நாற்பது தொகுதிகளிலும் நாம் வெல்வது நிச்சயம் என குறிப்பிட்டார்.

அதன் விபரம் வருமாறு:-

கடந்த பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் செய்யாத மக்கள் நல திட்டப் பணிகளை நம் தலைவர் முதல்வர் கடந்த இரண்டரை ஆண்டுகளில் செய்து முடித்துள்ளார். பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயணம், மகளிர் சுய உதவி குழுவினருக்கு பல கோடி கடன் உதவிகள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு உள்ளிட்ட பல்வேறு முத்தான திட்டங்களை அறிவித்து செயலாற்றி வருகிறார்.

மதுரை கிழக்கு தொகுதியில் மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டி, பாதாள சாக்கடை திட்டம், சாலை வசதிகள்,, நடைப்பயிற்சி சாலைகள் கண்மாய் சீரமைப்பு என பல்வேறு திட்டங்கள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. இன்னும் ஓராண்டில் மதுரை கிழக்கு தொகுதி தமிழ்நாட்டில் தன்னிறைவு பெற்ற தொகுதியாக மாறும் என்பது உறுதி.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத பெண்கள் பட்டியல் தயாராகி வருகிறது தேர்தல் முடிந்தவுடன் தகுதியானவர்களுக்கு உடனடியாக மகளிர் உரிமை தேவை வழங்கப்படும். கடந்த சட்டமன்ற தேர்தலில் ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் கிழக்கு தொகுதியில் வென்றோம், தற்போது நாடாளுமன்ற தேர்தலில் கிழக்கு தொகுதியில் மட்டும் எழுபத்தைந்தாயிரம் வாக்குகள் நாம் கூடுதல் வாக்குகள் பெற வேண்டும். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சு.வெங்கடேசன் ஒரு லட்சத்து 42,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார், வருகிற தேர்தலில் இரண்டு லட்சத்து 84 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வெற்றி பெற நாம் உழைக்க வேண்டும்.

நம் கழக தேர்தல் அறிக்கை நாடு போற்றும் தேர்தல் அறிக்கையாக உள்ளது, இதனை வாக்காளர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் வீடு வீடாகச் சென்று எடுத்துக் கூறி துண்டு பிரசுரம் வழங்கி அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க வேண்டும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் நம் கழகத் தலைவர் அவர்களே வேட்பாளர் என கருதி நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்து மாபெரும் வெற்றியை தேடி தர வேண்டும். கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் நாற்பது தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வெல்வதற்கு நாள்தோறும் கடுமையாக உழைத்து வருகிறார்கள். அந்த உழைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி நாமும் அயராது பாடுபட்டு அதிக வாக்குகள் பெறுவதற்கு உழைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் முதலிடம் பெற்ற தொகுதி மதுரை நாடாளுமன்றத் தொகுதி என்ற பெயர் பெற வேண்டும் என வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

மேலும் இக்கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள் ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், ஆசைக்கண்ணன், ரோகிணி பொம்மதேவன், வடிவேல் முருகன், புதூர் சேகர், தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், மாநில இலக்கிய அணி நேரு பாண்டியன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி பாசபிரபு, ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சி சிறைச்செல்வன், மதிவாணன், பகுதி செயலாளர்கள் பெ. சசிகுமார், மருதுபாண்டியன், பாண்டியராஜன், கவுரிசங்கர், மண்டல தலைவர் வாசுகி சசிகுமார்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வீரராகவன், வக்கீல் கலாநிதி, ஒத்தக்கடை சரவணன், கலை கார்த்திகேயன், ஆலாத்தூர் ராஜவேல்பாண்டியன், மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆலத்தூர் ரவிச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் சாமுவேல் ராஜ், எஸ்.கே. பொன்னுத்தாய், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ராஜேந்திரன், பி.முத்து வேல், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அரச முத்துப்பாண்டியன், மதிமுக மார்நாடு, மனித நேய மக்கள் கட்சி உஜ்ஜயினி முகமது, தமிழக வாழ்வுரிமைக் கட்சி சித்திக் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

### குட்கா முறைகேடு தொடர்பான வழக்கின்

# கோப்புகள் விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்!

### சிறப்பு நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தகவல்!

புதுடெல்லி, மார்ச் 22 -

குட்கா முறைகேடு தொடர்பான வழக்கின் கோப்புகள் விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என சிறப்பு நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டில் தடையை மீறி அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து குட்கா பொருள்கள் விற்பனை செய்த விவகாரம் தொடர்பாக டெல்லி சிபிஐ வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், குட்கா முறைகேடு தொடர்பாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீதான விசாரணைக்கு ஒப்புதல் அனுமதி கிடைத்து விட்டதாகவும், அது தொடர்பான கோப்புகள் சி.பி.ஐ.யின் பரிசீலனையில் உள்ளதாகவும், சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

குட்கா முறைகேடு தொடர்பான கோப்புகள் மீதான பரிசீலனை முடிந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எவ்வளவு காலம் ஆகும் என்று நீதிபதி மலர் வாலன்டியா கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த சி.பி.ஐ. சிறப்பு அதிகாரி, குட்கா முறைகேடு தொடர்பான கோப்புகள் விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இதனை கேட்ட நீதிபதி, வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை ஏப்ரல் 15ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# திராவிட மாடல் - ஒரு பரிணாமப் பார்வை!

- பேரா.கான்ஸ்டன்டைன் ரவிந்திரன்
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்



ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகள் உருண்டோடி கொண்டிருக்கிற பூமிப்பந்தின் மீது உயிர்கள் தோன்றி மனிதர்களாக வாழ்ந்த காலத்தின் துவக்கம் எதுவென்று இன்றைக்கும் நம்மால் தெளிவாக தீர்மானித்து விட முடியவில்லை. உலகின் பழமையான நாகரிகம் என்று கருதப்படுகிற மெசபடோமியா நாகரிகமே கிறிஸ்து பிறப்பதற்கு முன் 4500 முதல் 5000 ஆண்டுகளுக்குட்பட்டதுதான். இந்த நாகரிகங்கள் தோன்றி வளர்ந்ததன் பின்னணியில்தான் அரசியல் தோன்றியிருக்கிறது. ஆரம்பத்தில் மனிதர்கள் இனக்குழுக்களாக வாழ்ந்த காலகட்டத்தில் இருந்து சமூக ஆய்வாளர் தன்பார் (DUNBAR) என்பவர் தனது ஆய்வில் ஒரு தனி மனித மூளை அதிகபட்சமாக 150 பேரை நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் படைத்தது என்பதை கண்டறிந்து நாகரீக வளர்ச்சியால் இன்னும் அதிகமான எண்ணிக்கையில் மனித இனக் குழுவினர் இணைந்து நிர்வகிக்கப்படு வதற்காக உருவானதுதான் அரசியல்.

சுருக்கமாக சொன்னால் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வாழும் பலதரப்பட்ட மக்களுக்கு அங்கு இருக்கிற இயற்கை வளங்களை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, சமூக, பொருளாதார ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான செயல்முறை திட்டம்தான் அரசியல். இந்த திட்டங்களுக்கு அடிப்படையானதுதான் கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம். சமூகத்தில் எல்லோரையும் சமமாக பாவித்து எல்லோருக்குமான வளர்ச்சியை உறுதி செய்வது ஒரு வகையான தத்துவம் என்றால் ஏதோ ஒரு புறக்காரணியால் வேறுபாடு கற்பித்து உயர்வு தாழ்வு உருவாக்கி அதன் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பது என்பது மற்றுமொரு தத்துவம் ஆகும். இதில் முதல் வகை அரசியல் தத்துவம்தான் தமிழர்களின் வாழ்வியல் அரசியல் முறைமை.

சுமார் 5000 ஆண்டுகளாக இலக்கியம், வரலாறு, நாட்டார் வாழ்வியல் மற்றும் செவி வழியாக பேசப்பட்டு வந்த இந்தத் தத்துவத்தின் அரசியல் நடைமுறைதான் இந்த நூற்றாண்டின் திராவிட அரசியலின் அடிநாதம். மனித குலம் தோன்றி வாழ்வியல் நெறிமுறைகளின் அடிப்படையில் நாகரிகங்கள் வரையறுக்கப்படுவதைப் போல அரசியலில் ஒரு மாதிரியுருவை (Model) தீர்மானிக்க குறைந்தது 100 ஆண்டுகள் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் 1916 இல் பேசப்பட்ட அரசியல் தத்துவங்கள், மற்றும் 1929 இல் செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட சமூகக் கோட்பாடுகள் ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சிதான் திராவிட மாடல் என்று அழைக்கப்படுகிற “திராவிட மாதிரியுரு” ஆகும். எல்லோருக்கும் எல்லாம் அதாவது சமூக நீதி, சம நீதி, சம வாய்ப்பு, சுயமரியாதை, மொழியுரிமை, பொருளாதார உரிமை, கல்வியுரிமை என்ற மனிதகுல வளர்ச்சிக்கான காரணிகள் அனைத்திலும் அவரவருக்கு உரிய பங்கை உறுதி செய்யும் ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சிதான் திராவிட மாடல். இந்தியா சுதந்திரம் அடைந்த போது எல்லா மாநிலங்களும் பொருளாதாரக் கல்வி மற்றும் சமூக சூழலில் ஏறத்தாழ சமமாகத்தான் இருந்திருக்கின்றன. சுதந்திர இந்தியாவில் ஆட்சி பரிபாலனம் செய்தவர்கள் பெரும்பாலும் வட இந்தியாவிற்கு கொடுத்த வளரும் வாய்ப்புகளை தென்னிந்தியாவிற்கு தந்திருக்கவில்லை என்பதை தக்க சான்றுகளோடு அரசியல் தளத்தில் எடுத்து வைத்து, ‘வடக்கு வாழ்கிறது... தெற்கு தேய்கிறது’ என்பதை வெறும் கோஷமாக மட்டுமல்லாமல், ஒன்றிய நிதிநிலை அறிக்கையின் நிதிஒதுக்கீடு மற்றும், வங்கி சேவைகள், எப்படியெல்லாம் வடக்கு வாழ உதவுகிறது என்பதை தனது, ‘பணத்தோட்டம்’ என்ற புத்தகத்தில் தெளிவாக நிறுவியிருப்பார் பேரறிஞர் அண்ணா. அவரின் இந்த அரசியல் நிலைப்பாட்டிற்கு காரணமாக இருந்தது எதுவென்றால் 1919ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக உருவான இரட்டை ஆட்சி முறை தந்த படிப்பினைதான். அதாவது ஆட்சி பரிபாலனத்தில் பெரும்பாலான அதிகாரங்களை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களுக்கு தந்துவிட்டு வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்கள் இந்தியர்களுக்கும் தரப்பட்டது.

இந்த ஆட்சி முறையில் முதல் தேர்தலில் அன்றைக்கு மெட்ராஸ் மாகாணத்தில் மொத்தம் இருந்த 127 பேர் அடங்கிய அவையில் 87 பேர் வெற்றி பெற்று (அதாவது 69 பேர் தேர்தலில் வென்று 18 பேர் நியமனம் பெற்று) நீதிக்கட்சி 17.12.1920ல் ஆட்சி பீடம் ஏறியது. கடலூர் சுப்பராய ரெட்டியார் பிரிமியர் ஆகவும், பனகல் அரசர் மற்றும் வெங்கட ரெட்டி ஆகியோர் அமைச்சர்களாகவும் பதவியேற்றனர். 12.1.1921ல் சென்னை சட்டமன்றம் துவங்கியது. இவர்களது ஆட்சியில்தான் வரலாற்று சிறப்புமிக்க வகுப்புவாரி பிரதிநித்துவ அரசாணை மூலம் உள்ளாட்சி அமைப்புகள் கல்வி நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு கூடுதல் விகிதத்தில் வாய்ப்புகள் வழங்கப்பட்டது. இந்தியாவிலேயே முதல்முறை யாக பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. அதுவரை கண்டிராத சமூக - சமய சீர்திருத்த முயற்சியாக இந்து சமய அறநிலைய சட்டம் 1921ல் இயற்றப்பட்டது.

பெண்கள் சட்டமன்றத்திற்கு நியமிக்கப்படவும், தேர்தலில் போட்டியிடவும் இந்தியாவிலேயே முதன் முதலில் இந்த அரசுதான் 1.4.1921ல் சட்டம் இயற்றியது. இதன் விளைவாகத்தான் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி 1927ல் சட்டமன்றத்திற்கு ஆளுநர் நியமனம் செய்தார். இவரது அயராத ஒழிப்பின் மூலம் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டு கல்வி மற்றும் சமூக மேம்பாட்டில் பெண்களுக்கான பங்கு பெறப்பட்டது. கூட்டுறவு சங்கங்களை துவக்கியது, நிலமேம்பாட்டு கடன் மற்றும் சட்டங்களை இயற்றி விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது, வரலாற்று சிறப்புமிக்க காவிரி பாசன பகுதி நீர்ப்பாசன வசதிக்காக மைசூர் அரசிடம் 1924 இல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

உயர் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு சென்னை பல்கலைக்கழக செயல்முறை திருத்த ஆணை மற்றும் 1929ல் அண்ணாமலை பல்கலைக்கழக உருவாக்கம், அதோடு மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவை என்ற கட்டுப்பாட்டை அகற்றி ‘அனைவருக்கும் மருத்துவக் கல்வி’ என சமூகத்தின் அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கான நல்லாட்சியாக திகழ்ந்தது. நீதிக்கட்சி அரசு ஏறத்தாழ 1937 வரை இயக்கத்திற்குள் இருந்த கூடுதல் குறைவுகளுடன் மக்களுக்கான நல்லாட்சியாக நடந்து நிறைவுற்றது. இதனூடாகவே தந்தை பெரியார் என்னும் மாபெரும் தலைவர் காங்கிரஸை விட்டு விலகி 1925 இல் சுயமரியாதை இயக்கத்தை துவக்கி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டினை 17 மற்றும் 18.2.1929 தேதிகளில் செங்கல்பட்டில் நடத்தினார்.

சுயமரியாதை இயக்கம் மற்றும், திராவிட இயக் கத்தின் வளர்ச்சியிலும், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றிலும் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த மாண்பமை ப. சுப்பராயன் மாநாட்டைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இம்மாநாட்டில் தலைவர்கள் பெயருக்குப் பின்னால் இருந்த ஜாதி பெயரை நீக்கி மக்களுக்குப் பிறவியில் ஜாதிபேதம் கிடையாது. ஜாதி பேதம் கற்பிக்கும் மதம், வேதம், சாஸ்திரம் புராணம் முதலியவைகளை பின்பற்றக்கூடாது. மக்களுக்குள் தீண்டாமை ஒழித்து பொது ஜனங்களுக்குச் சமஉரிமை இருக்க வேண்டும். பெண்களின் திருமண வயது 16க்கு மேல் இருக்க வேண்டும். விதவைகள் மறுவிவாகம் செய்துகொள்ள வேண்டும். கலப்பு மணம் செய்து கொள்ளலாம்.

பெண்களுக்குச் சொத்துரிமை. உத்தியோக உரிமை. கல்வி விசயத்தில் தாய் மொழி, அரசாங்க மொழி ஆகிய இரண்டைத் தவிர மற்ற கல்விக்குப் பொதுப் பணத்தைச் செலவிடக் கூடாது. அதுவும், ஆரம்பக் கல்விக்கு மாத்திரம் பொது நிதியைச் செலவழித்து கட்டாயமாய் யாவருக்கும் கற்பிக்க வேண்டும். நாம் யாவரும் ஒன்று, நாம் யாவரும் சரிநிகர் சமானமானவர்கள் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்பன போன்ற அன்றைய தீர்மானங்கள்தான் இன்றைய திராவிட அரசியலின் அடிப்படைக் கருதுகோள்களாக அமைந்துள்ளன.

இந்த காலகட்டத்தில்தான் இந்திய அரசியல் வானில் துருவ நட்சத்திரமான, சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை தொடர்பான சிந்தனையாளர், அந்தச் சிந்தனையை வெற்றிகரமாக அரசியல் படுத்தி, அப்படி அரசியல்படுத்துவதற்காக மேடை, பத்திரிகை, நாடகம், சினிமா, நூல்கள் என்று எல்லா ஊடகங்களையும், கையில் எடுத்து அதற்குப் புதிய தோற்றமும், உள்ளடக்கமும் தந்த பேரறிஞர் அண்ணா அரசியலில் மையம் கொண்டார்.

1934ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் தேதி, திருப்பூரில் நடந்த செங்குந்தர் மகாஜன சங்க மாநாட்டுக் கூட்டத்தில் ஐயா பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முதன்முறையாகச் சந்தித்துப் பேசிக்கொண்டனர். ஐயாவின் கருத்து அண்ணாவை ஈர்த்தது. அண்ணாவின் பேச்சு பெரியாரை மயங்கிற்று என்றே சொல்ல வேண்டும். அண்ணாவிடம் என்ன செய்கிறாய் என்று கேட்ட பெரியாருக்கு படித்து முடித்துள்ளேன் என்று அண்ணா சொல்ல... வேலைக்கு போறியா? என்றார்....இல்லை பொது சேவை செய்ய ஆசை என்றார் அண்ணா... தன்னோடு அணைத்து கொண்டார் பெரியார்.

1937-ம் ஆண்டு ஈரோடு சென்ற அண்ணா அங்கு பெரியாரின் குடியரசு மற்றும் விடுதலை நாளிதழ்களில் துணை ஆசிரியராக 60 ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்கு சேர்ந்தார். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் தீவிரமாக இறங்கிய பெரியார் மற்றும் அண்ணா ஆகியோர் 1938-ம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். அண்ணாவுக்கு 4 மாத சிறைவாசம் விதிக்கப்பட்டது. பெரியாருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை கிடைத்தது.

எது வந்த போதும் தளராமல் அரசியல், சமூகம், பத்திரிகை உலகம் என்று பயணித்துக் கொண்டிருந்த வேளையில் நீதிக்கட்சியின் இறங்கு முகமும் காங்கிரஸ் அரசின் மக்கள் விரோத செயல்பாடும் ஒரு புதிய அரசியல் சக்திக்கான தேவையை உருவாக்கி விட்டன. குறிப்பாக இந்தி திணிப்பு மற்றும் மெட்ராஸ் மாகாண பிரச்சினை என்று வரிசையாக வந்தன. இந்த நிலையில் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து பெரியார் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கத்தை முன்வைத்தார். அப்போது தமிழ்நாடு என்ற மாநிலமே உருவாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையில் இருக்கும்போதுதான் பெரியாருக்கு நீதிக்கட்சித் தலைவர் பதவி தரப்பட்டது. இதுவே பின்னாளில் நீதிக் கட்சியையும், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்து 1944 இல் சேலத்தில் நடந்த மாநாட்டில் திராவிடர் கழகம் என்று மாற்றுவதற்கான தீர்மானத்தை அண்ணா முன் மொழிந்தார். திராவிடர் கழகம் உருவாயிற்று. அன்றிலிருந்து திராவிடர் கழகத்திலும் பெரியாரின் தளபதியாக இருந்தார் அண்ணா. இருவரின் அரசியல் பயணத்தில் சின்ன சின்ன கருத்து வேறுபாடுகள் வரவே தனிக் குடித்தனம் செல்ல முடிவெடுத்தார் அண்ணா. அதன் விளைவாகத்தான் 1949 செப்டம்பர் 17-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்படுத்தி, அண்ணா அதன் பொதுச் செயலாளர் ஆனார். அண்ணாவிடம் கடவுள் கொள்கை குறித்து கேட்டதற்கு,‘நான் பிள்ளை யாரையும் உடைக்கமாட்டேன் அதற்குத் தேங்காயும் உடைக்க மாட்டேன்’என்ற அண்ணாவின் வாசகம், வெகுஜன அரசியலுக்கேற்ற நிலைப்பாடாக, அதே நேரம் மதச்சார்பற்ற அரசியலுக்கேற்ற நிலைப்பாடாகவும் இருந்தது. அது வரைக்கும் அரசியல் மணம் வீசாத பட்டிதொட்டி எங்கும் அரசியல் விவாதங்கள் நடந்தது.. தி.மு.க. அசுர வேகத்தில் வளர்ந்தது. ஆயிரக்கணக்கான பொதுக்கூட்டம் நூற்றுக்கணக்கான மாநாடு என்று நொடிக்கு நொடி உழைத்தார் அண்ணா....தேர்தல் அரசியல் குறித்து முடிவெடுக்க 1956-ஆம் ஆண்டு மாநாட்டில் தம்பிமார்களிடம் தேர்தலில் போட்டி யிடும் முடிவை வாக்களித்து தேர்ந்தெடுத்து,

1957-ம் ஆண்டு நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் பங்கேற்று 15 எம். எல். ஏ.க்களை வென்றெடுத்தார். காஞ்சிபுரத்தில் அண்ணா வெற்றி பெற்றார். 1962ம் ஆண்டு நடந்த அடுத்த தேர்தலில் தி.மு.க. 50 தொகுதிகளை வென்றது. ஆனால், அண்ணா தோல்வி அடைந்தார். அதுவும் ஒரு வகையில் புதிய அத்தியாயத்தை எழுத காரணமாக அமைந்தது.ஆம் 1963 இல் நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலில் வெற்றி பெற்று டெல்லி சென்றார் அண்ணா. I belong to Dravidian Stock என்று துவங்கிய பேச்சு தமிழ் இன வரலாறு , மொழி பெருமை கூறி பின் நமக்கு சேர வேண்டிய உரிமைகள் குறித்தும் வாதிட்டு நம் நியாயங்களை இந்தியா முழுமைக்கும் கொண்டு சேர்த்தது.

கால ஓட்டத்தில் தமிழக சட்டமன்றத் தேர்தல் வந்து சேர்ந்தது. ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட தி.மு.க. வெற்றி பெற்றது. 1967 மார்ச் 6ம் தேதி அண்ணா முதல்வ ரானார். ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சிக் காலத்தில் தமிழ் நிலப்பரப்புக்கு ‘மதராஸ் மாகாணம் (Madras Presidency)’ என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் பெயர் ‘மதராசப்பட்டினம்’ என்கிற மீனவ கிராமத்தின் பெயரில் இருந்து எடுக்கப்பட்டது. இந்த மதராஸ் மாகாணத்தின் எல்லை திருவிதாங்கூர் மாவட்டம் முதல் கஞ்சம் மாவட்டம் வரைக்கும் மிகப்பெரிதாக பரந்து விரிந்திருந்தது. இங்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு வகை திராவிட மொழி பேசும் மக்கள் ஒன்றுபட்டு ஒரே குழுவாக வாழ்ந்து வந்தார்கள்.

சுதந்திரத்திற்கு பிறகு 1956 நவம்பர் 1ம் தேதி மொழிவாரி மாநிலங்கள் அமைக்கும் முடிவை பிரதமர் நேரு வெளியிட்டார். அப்போது, மதராஸ் மாகாணத்தில் இருந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் மக்களைக் கொண்ட பகுதிகள், ஆந்திரா, கேரளா, கர்நாடகா என 3 தனி மாநிலங்களாக பிரிக்கப்பட்டன. அதே வேளையில், தமிழ்நாட்டுக்கு ‘மதராஸ் ஸ்டேட்’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்கள் உருவாகும் நிலை ஏற்பட்ட பிறகு, ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்ற ஆங்கிலப் பெயரை ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றம் செய்யவேண்டுமென, தமிழ் பற்றாளர்கள் போராடத் தொடங்கினர்.

விருதுநகரைச் சேர்ந்த காந்தியவாதி - தியாகி சங்கரலிங்கனார், 1956 ஜூலை 26-ம் தேதி சாகும் வரை உண்ணாவிரதத்தை தொடங்கி அதிரவைத்தார். காமராஜர், அண்ணா, ராஜாஜி போன்ற பெரிய தலைவர்கள் வற்புறுத்திக் கேட்டும் அவர் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தார். மொத்தம் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உடல்நிலை ரொம்ப மோசமாகி 1956-ம் ஆண்டு அக்டோபர் 13-ம் தேதி அவர் உயிரிழந்தார்.

சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகத்தை தொடர்ந்து ‘தமிழ்நாடு’ என்ற பெயர் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்துக்குள்ளும் உணர்வுப்பூர்வமாக பதிந்தது. அந்த உணர்வை தி.மு.க.வின் தலைவரான அண்ணா மிக வலிமையாக சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தார். அவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் 1957-ம் ஆண்டு மே 7-ம் தேதி தமிழ்நாடு பெயர் மாற்றும் தீர்மானத்தை மெட்ராஸ் ஸ்டேட் சட்டமன்றத்தில் கொண்டுவந்தது. ஆனால், அந்தத் தீர்மானம் காங்கிரஸ் உறுப்பினர்களால தோற்கடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு நாடாளுமன்றத்திலும் அண்ணா தமிழ்நாடு பெயர் மாற்றத்தை பிரதான கோரிக்கையாக முன்வைத்தார்.

“பார்லிமெண்ட்டை லோக்சபா என்று பெயர் மாற்றி என்ன லாபத்தை கண்டீர்கள்? கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸை ராஜ்யசபா என்று பெயர் மாற்றி என்ன லாபத்தை சம்பாதித்தீர்கள்? பிரசிடெண்ட்டை ராஷ்டிரபதி ஆக்கியதாலும் என்ன லாபம் கிடைத்தது? ஆக, என் மாநிலத்துக்கு தமிழ்நாடு என்ற பெயரை நீங்கள் கொடுத்தே ஆக வேண்டும். மாநிலத்தின் பெயருக்கும் தலைநகரத்தின் பெயருக்கும் கட்டாயம் வித்தியாசம் இருக்க வேண்டும்” என்று தர்க்கப்பூர்வமாக அவர் முழங்கினார். ஆனால், மீண்டும் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆனால் தான் முதல்வர் ஆனதும் 1967 ஆம் ஆண்டு ஜூலை 18ம் தேதி மதராஸ் ஸ்டேட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டும் தீர்மானத்தை அவர சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். அன்று “தமிழ்நாடு... தமிழ்நாடு... தமிழ்நாடு” என்று அண்ணா மூன்று முறை முழங்க, பெருவாரியான உறுப்பினர்கள் “வாழ்க...” என முழக்கமிட்டு வழிமொழிந்தார்கள்.1968ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி தமிழ்நாடு பெயர் மாற்ற தீர்மானத்தை இந்திய நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது. 1969ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் தேதி மதராஸ் ஸ்டேட் அதிகாரப்பூர்வமாக ‘தமிழ்நாடு’ என்று மாறியது! அத்துடன் நில்லாமல் தந்தை பெரியாரின் கொள்கையான சுயமரியாதை திருமணங்கள் செல்லுபடியாகும் அரசாணையை கொண்டுவந்தார்.

தொடர்ச்சி நாளை



சேலம் நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் சேலம் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.எம். செல்வகணபதியை. கழக முதன்மை செயலாளர். கே என். நேரு அறிமுகம் செய்து வைத்து பேசினார். உடன் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர். எஸ். ஆர். சிவலிங்கம். தொகுதி பொறுப்பாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன். ஏ.ஆர்.டி. உதயசூரியன் டேம். வெங்க டேசன். சி.ராஜேந்திரன். கே. எஸ். மூர்த்திபரணி. கே.மணி மேயர். ஆ.ராமச்சந்திரன், மாநகரச் செயலாளர். பா ரகுபதி உதயநிதி நற்பணி மன்ற மாநில பொதுச் செயலாளர் பி. கே. பாபு. மற்றும் ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள். இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் – ‘இந்தியா’ கூட்டணி

## நாடாளுமன்றத் தேர்தல் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, மார்ச் 22 -

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவின் 18வது நாடாளுமன்றத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுமென இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் முதல்கட்டமாக ஏப்ரல் மாதம் 19ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.


தி.மு.க. தலைமையிலான ‘INDIA’ கூட்டணி அனைத்துக் கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி தொகுதியில் வேட்பாளராக கனிமொழி கருணாநிதி போட்டியிடுவார் என தி.மு.க தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தூத்துக்குடியின் தொழில் வளர்ச்சிக்காக திறம்பட பணியாற்றிய மக்களின் எம்.பி என அனைவராலும் போற்றப்படும் கனிமொழி கருணாநிதி வெற்றிக்காக மாபெரும் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (22.03.2024- வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு உடன்குடி அருகில் உள்ள, தண்டுபத்தில் நடைபெறவுள்ளது.

எனது தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் பங்கேற்று உரையாற்றுகின்றனர். திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், செயல் வீரர்கள், தி.மு.க. மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள கழக செயல் வீரர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

7 வது ஆண்டு நினைவு அஞ்சலி
நாள் : 22.03.2024



MJF.Ln. Dr.M.V.இராமு B.Com.,
❖ தோற்றம் : 21.12.1935 ❖ மறைவு : 22.03.2017
உரிமையாளர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா தியேட்டர், கூடுவாஞ்சேரி.
ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மாளிகை, கூடுவாஞ்சேரி.
முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் தி.மு.க
முன்னாள் தலைமை தணிக்கை குழு உறுப்பினர் தி.மு.க
முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், காட்டாங்கொளத்தூர்
முன்னாள் பொருளாளர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, சென்னை.
என்றும் உங்கள் நினைவில்
மனைவி : R.பாரதி
மகன்கள் : இராமு பாஸ்கர் B.E., M.S.,
இராமு ஜிஜேந்திரன் (ஜிஜி) B.E., M.S.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர் தி.மு.க
மகள் : R.மோகனலட்சுமி ஸ்ரீதர்
எண்: 4, கம்பர் தெரு, கூடுவாஞ்சேரி செல் : 8754447070
AS டிஜிட்டல் 8939711133

## பதினெட்டாவது மக்களவைக்கான நாடாளுமன்றத் தேர்தல்!

# வெல்லட்டும் மக்களாட்சி! வீழட்டும் அதிகாரக் குவிப்பு!

**நூறு** கோடியை நெருங்கும் வாக்காளர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய மக்களாட்சிக்கான தேர்தல் எழுபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்யப்போகும் இந்திய கூட்டாட்சிக் குடியரசில் அறிவிக்கப்பட்டுள்ளது.


ஒரு முறை நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டதால் தேர்தல் சிறிது தாமதமாகியிருக்கிறது. நான்கு முறை ஆட்சி குறுகிய காலத்திலேயே பெரும்பான்மை இழந்து கவிழ்ந்துள்ளது.

மற்றபடி இந்திய குடியரசு தொடர்ந்து தேர்தல் மூலம் மக்களின் வாக்குகளைப் பெற்று அமைந்த



ஆட்சிகளாலேயே ஆளப்பட்டுள்ளது. முக்கியமான தருணங்களில் ஒரே ஆளும் கட்சியோ, ஆட்சியோ தொடர்ந்து அதிகாரத்தை ஒற்றை புள்ளியில் குவித்துக்கொள்ள விடாமல் மக்கள் ஆட்சியை மாற்றியமைத்துள்ளனர்.

இந்திய மாநிலங்களில் பல புதிய கட்சிகள் உதயமாகியுள்ளன. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளன. பல மாநிலங்களில் மக்கள் இரண்டு கட்சிகளுக்கோ, இரண்டு அணிகளுக்கோ அடுத்தடுத்த தேர்தல்களில் மாற்றி வாக்களித்துள்ளனர். அதன் மூலம் தங்கள் அதிருப்தியை, தேவைகளை, அரசிடம் தங்களுக்




குள்ள கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர். கட்சிகளை அடித்தட்டு மக்களுக்கான நலத்திட்டங்களை அறிவிக்க, நடைமுறைப்படுத்த வைத்துள்ளனர்.

**சீர்குலையும் சட்டத்தின் ஆட்சி! மக்களாட்சி எதிர்கொண்டுள்ள சவால்!**

மக்களாட்சி என்பது தேர்தல்களால் மட்டும் கட்டமைக்கப் படுவதல்ல. அது சட்டத்தின் ஆட்சியும் கூடத்தான். அண்ணல் அம்பேத்கர் தலைமையேற்ற வரைவுக்குழு அரசியலமைப்பு அவையின் மூலம் உருவாக்கித் தந்த அரசியலமைப்பு சட்டமே நம் குடியரசின் உயிர் மூச்சாகும்.

ஒரு மக்களாட்சிக் குடியரசின் அரசியலமைப்பு சட்டம் அதிகாரத்தை ஒரு புள்ளியில் குவியாமல் பரவலாக்குவதையே தன் முதன்மை நோக்கமாகக் கொண்டது. இரண்டு வகையான அதிகாரப் பரவல்கள் நம் அரசியலமைப்பில் உறுதி செய்யப்படுகின்றது.

ஒன்று குத்துக்கோட்டு பிரிவினை. அதில் மூன்று முக்கிய தூண்கள் என்று அழைக்கப்படும் பிரிவுகள். ஒன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டமியற்றி, முடிவெடுத்து செயல்படுத்தும் அதிகாரம். இதனை ஆங்கிலத்தில் legislature என்பார்கள். அடுத்து அமைச்சரவை, அதிகாரிகளாலான அரசு இயந்திரம், அதன் நிறுவனங்கள், இயங்கு விதிகள் ஆகியவை. நாட்டை நிர்வகிப்பது இந்த நிர்வாகம், executive, என்ற தூண்தான். மூன்றாவது, நீதிமன்றம். சட்டத்திற்கு புறம்பாக யார் நடந்தாலும் விசாரித்து தண்டிக்கும், சீர்செய்யும் தன்னாட்சி அமைப்பு, judiciary.

கடந்த பத்தாண்டுகளாக பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியில் இந்த அதிகாரப் பகிர்வு கடுமையான சீர்குலைவை சந்தித்துள்ளது. அரசு நிர்வாகம் ஆளும் கட்சியின் எதேச்சதிகாரப் போக்கிற்கு முழுவதும் வளைந்து, பணிந்து கொடுப்பதாக மாறியுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தின் தரிசனங்களை சிதைக்கும் விதமாக ஆட்சி செயல்படுகிறது. நீதிமன்றங்களும் பல சந்தர்ப்பங்களில் அரசினை கட்டுப்படுத்தத் தவறுவதை பார்க்க முடிகின்றது. அரசு நிர்வாகத்துறை, நீதித்துறை இரண்டின் மீதும் ஆளும் கட்சியின் அரசியல் சார்பு நிழலாகப் படிகிறது.

சுதந்திர இந்திய வரலாற்றில் உச்சநீதிமன்ற நீதிபதிகளே பத்திரிகையாளர்களை சந்தித்து தாங்கள் சுதந்திரமாக பணியாற்ற இயலவில்லை என்று முறையிட்ட காட்சி முதல் ஐந்தாண்டுகளிலேயே அரங்கேறியது. பிரதமர் எதேச்சதிகார நோக்கில் திடீரென பணமதிப்பிழப்பை அறிவித்ததில் எளிய மக்களும், ஒட்டு மொத்த பொருளாதாரமும் பெரும் இடர்பாடுகளை சந்தித்தது. அதிகாரத்தை ஒற்றை புள்ளியில் குவித்து மகிழ்ந்ததைத் தவிர இந்த நடவடிக்கையால் எந்த பயனும் விளையவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டின் துவக்கத்திலேயே ஜம்மு,காஷ்மீர் மாநிலத்தையே இல்லாமலாக்கி, அதனை மூன்று யூனியன் பிரதேசங்களாக ஒன்றிய அரசு பிரித்து அதிர்ச்சியளித்தது. கூட்டாட்சி தத்துவத்தின் முதுகெலும்பையே முறிக்கும் இந்த செயலினை உச்ச நீதிமன்றம் கண்டிக்கவில்லை என்பது கூட்டாட்சி தத்துவத்தின் எதிர்காலத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. ஒன்றிய அரசு நினைத்தால் எந்த மாநிலத்தையும் ரத்து செய்யலாம், அதனை ஒன்றிய அரசுப் பகுதியாக மாற்றலாம் என்றால், கூட்டாட்சிக்கு என்ன பொருள் இருக்க முடியும்?

**இதற்கெல்லாம் முத்தா ய்ப்பாக தேர்தல் பத்திரங்களை யாரும் வாங்கி ரகசியமாக அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாகத் தரலாம் என்ற அதிசய நடைமுறையை உருவாக்கியது பாஜக அரசு. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பாரத ஸ்டேட் பாங்க் மூலம் இது நிகழ்வதால், ஆளும் கட்சியால் யார் எந்த கட்சிக்கு நிதியளிக்கிறார்கள் என அறிய முடியும். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கோ, மக்களுக்கோ எந்த விவரமும் தெரியாது.**

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



**தேர்தல் பத்திரங்களில் அறுதிப் பெரும்பான்மையானவை ஆளும் கட்சிக்கே அளிக்கப்பட்டன என்பதில் வியப்பதற்கு எதுவுமில்லை. வருமான வரித் துறை, அமலாக்கத் துறை, உளவுத் துறை என பல்வேறு அரசு அமைப்புகள் மூலம் நெருக்கடிக்கு உள்ளாகும் வர்த்தக, தொழில் நிறுவனங்கள் ஆளும் கட்சிக்கு தேர்தல் பத்திரங்களை வாங்கியளிப்பதன் மூலம் தங்களை காத்துக்கொண்டன என்று எதிர்க்கட்சிகளும், பொது நல செயல்பாட்டாளர்களும் குற்றம் சாட்டுகின்றனர்.**

**ஈ.டி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் அமலாக்கத்துறை அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து கட்சி மாறும்படி செய்வதற்கும், எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கும், தேர்தல் பத்திரங்களை வசூலித்துத் தருவதற்கும் பயன்படுத்தப் படுவதாக பகிரங்கமாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர். அதற்கான காரணங்கள் பொதுவெளியில் மக்கள் காணும்படியாகவே உள்ளது. ரெய்டு நடக்கிறது. அதன் பின் என்ன நடக்கிறது என்பது வெளிப்படையாக இருப்பதில்லை.**

| மாநிலம் | மொத்த தொகுதி | பாஜக | பாஜக கூட்டணி | இந்தியா கூட்டணி + பிறர் |
|---|---|---|---|---|
| பாஜக தனித்து வலிமை பெற்ற மீண்டும் வெல்லக் கூடிய முக்கிய மாநிலங்கள் | | | | |
| உத்திரப் பிரதேசம் | 80 | 62 | - | 18 |
| மத்தியப் பிரதேசம் | 29 | 28 | - | 1 |
| குஜராத் | 26 | 26 | - | - |
| ராஜஸ்தான் | 25 | 24 | - | 1 |
| ஜார்கண்ட் | 14 | 11 | - | 3 |
| சட்டீஸ்கர் | 11 | 9 | - | 2 |
| உத்திராகண்ட் | 5 | 5 | - | - |
| ஹிமாச்சல பிரதேசம் | 4 | 4 | - | - |
| மொத்தம் | 194 | 171 | | 23 |
| பாஜக தனித்து வலிமை பெற்ற வலுவான போட்டியை சந்திக்கும் மாநிலங்கள் | | | | |
| கர்நாடகா | 28 | 25 | - | 3 |
| ஹரியானா | 10 | 10 | - | - |
| டெல்லி | 7 | 7 | - | - |
| அஸ்ஸாம் | 14 | 9 | - | 5 |
| மொத்தம் | 59 | 51 | - | 8 |
| பாஜக கூட்டணி பலத்தில் வென்ற கூட்டணியும் அதன் தன்மையும் மாறியுள்ள முக்கிய மாநிலங்கள் | | | | |
| மஹாராஷ்டிரா | 48 | 23 | 18 | 6 |
| பீஹார் | 40 | 17 | 22 | 1 |
| மொத்தம் | 88 | 40 | 40 | 7 |
| பாஜக இரண்டாம் நிலையில் போட்டியிடும் மாநிலங்கள் | | | | |
| மேற்கு வங்கம் | 42 | 18 | - | 24 |
| ஒரிஸ்ஸா | 21 | 8 | - | 13 |
| ஜம்மு, காஷ்மீர் | 6 | 3 | - | 3 |
| மொத்தம் | 69 | 29 | - | 40 |
| பாஜக வலிமையற்ற நிலையில் உள்ள மாநிலங்கள் | | | | |
| தமிழ்நாடு | 39 | - | - | 39 |
| ஆந்திர பிரதேசம் | 25 | - | - | 25 |
| கேரளா | 20 | - | - | 20 |
| தெலுங்கானா | 17 | 4 | | 13 |
| பஞ்சாப் | 13 | 2 | | 11 |
| மொத்தம் | 114 | 6 | | 108 |
| சிறிய மாநிலங்கள் + ஒன்றிய பிரதேசங்கள் | 18 | 6 | | 12 |
| மொத்த நாடாளுமன்ற தொகுதிகள் | 542 | 303 | 22 | 217 |

இது ஒரு புறம் என்றால், மற்றொரு முக்கிய கிடைக்கோட்டு அதிகாரப் பகிர்வான மூவடுக்கு கூட்டாட்சி வடிவமும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. ஒன்றிய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் என்று மூன்று தளங்களில் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை பகிர்ந்துகொண்டு ஆட்சி செய்யவேண்டும் என்பதே அரசியலமைப்பு சட்டமாகும். இதில் முக்கியமான பகிர்வு மாநில அரசுகளின் அதிகாரங்கள், ஒன்றிய அரசின் அதிகாரங்கள் என்ற பகிர்வுதான். மாநில அரசு தன் நிர்வாக அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும்.

கடந்த பத்தாண்டுகளாக மாநில அரசுகளின் அதிகாரங்கள் வெகுவாக மட்டுப் படுத்தப்பட்டு வருகின்றன. முதலில் வணிக வரி, விற்பனை வரி போன்றவை மாநில அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு




ஜி.எஸ்.டி என்ற பெயரில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் முகாண்மையிடம் கொடுக்கப்பட்டு விட்டது. இதனால் மாநில அரசின் நிதி மேலாண்மை சுயாட்சியானது பறிக்கப் பட்டுவிட்டது. வரிப்பகிர்வில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை செய்வதாக கடுமையாக குற்றம் சாட்டப்படுகிறது.

அடுத்து பல்வேறு துறைகளிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒன்றிய அரசின் தலையீடும், அரசியல் ரீதியான பாரபட்சமான நடவடிக்கைகளும் அதிகரித்து விட்டன. உதாரணமாக பேரிடர் நிவாரண நிதி என்பதன் ஒரு சிறு பகுதியை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் பேரிடரின் தாக்கம் அதிகமாக இருந்தால் ஒன்றிய அரசின் வசமுள்ள கணிசமான பேரிடர் நிதியின் தொகுப்பிலிருந்து அது தரவேண்டும். அப்படி தருவதில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும். எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கும் இடையே பாரபட்சம் காட்டப் படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில், ஒன்றிய அரசின் ஆளுநர்களின் அத்துமீறிய தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. மக்களாட்சி மரபுகளை காப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள குறியீட்டு மதிப்பை பயன்படுத்தி எதேச்சதிகாரமாக நடப்பது நடைமுறையாகி வருகிறது. உச்சநீதிமன்றமே பல சமயம் கண்டித்தும் இந்த போக்கு தொடர்வது மாநில அரசுகளின் சுயாட்சிக்கு பெரும் சவாலாக மாறி வருகிறது.

பெருமுதலீட்டிய நிறுவனங்களின், கார்ப்பரேட்களின் வளர்ச்சியை பெரிதும் ஆதரிக்கும் பா.ஜ.க.ஆட்சி, ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை, மக்களின் நல்வாழ்வு மேம்பாட்டை புறக்கணிப்பதாகவே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஆனால் ஊடகங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம் பா.ஜ.க., கார்ப்பரேட் கூட்டணி பெரும் கோயபல்ஸ் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

**சிதைந்து சரியும் நான்காவது தூண்!**

**மக்களாட்சியின் மூன்று தூண்களென சட்டமியற்றும் மன்றங்கள், அரசு நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றை பார்த்தோம். ஆனால் இவற்றின் செயல்பாடுகளிலுள்ள நிறை குறைகளை மக்கள் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டிய முக்கியமான நான்காவது தூண் ஊடகங்கள்.**

**ஊடகங்கள் முழுக்கவும், குறிப்பாக காட்சி ஊடகங்கள், ஆளும் கட்சியின் ஊதுகுழல்களாக மாறிவிட்டதாகவே தோன்றுகிறது. அரசினை, ஆளும் கட்சியினை விமர்சிக்கும் குரல்களுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. பெரும் ஊழல் குற்றச்சாட்டுகளும் கூட பின்னுக்குத் தள்ளப் படுகின்றன. ரஃபேல் விமான ங்களை கொள்முதல் செய்வதில் நிகழ்ந்த பல சந்தேகத்திற்குரிய நடைமுறைகளை ஊடகங்கள் கவனப்படுத்த மறுத்தன.**

**சி.ஏ.ஜி, அதாவது ஒன்றிய அரசின் தன்னாட்சி தணிக்கை நிறுவனம், கடுமையான முறைகேடுகளை, ஊழல்களை சுட்டிக்காட்டியும் ஊடகங்கள் அதற்கு எந்த வெளிச்சமும் போட்டுக் காட்டவில்லை. இதே சி.ஏ.ஜி அறிக்கை காங்கிரஸ் ஆட்சியில் அலைக்கற்றை ஊழலை குறித்த கணிப்புகளை வெளியிட்ட போது ஊடகங்கள் அதை பூதாகரமாக ஊதிப்பெருக்கியதும், அதன் மூலம் மன்மோகன் சிங் தலைமையிலான யூ.பி.ஏ அரசினை வீழ்த்த வகைசெய்ததையும் நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.**

**அதானி குழுமத்தின் அசுர வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் எப்படி சாத்தியமாகியது என்பதை ஹிண்டென்பர்க் என்ற அமெரிக்க நிறுவனம் அம்பலப்படுத்தியும் கூட, அதனை ஊடகங்கள் அழுத்தம் கொடுத்து பேசவில்லை. அதன் பின்னணியில் உள்ள வங்கி மற்றும் பங்குச் சந்தை முறைகேடுகள் ஆராயப்படவில்லை. முக்கியமான ஆங்கில செய்தி சேனலையே அதானி குழுமம் வாங்கிவிட்டது.**

**பாசிச அதிகாரக் குவிப்பா? மக்களாட்சி அதிகாரப் பரவலா?**

அதிகாரக் குவிப்பினை எதிர்த்து காங்கிரஸ், தி.மு.க, சிவசேனா, ஆர்.ஜே.டி, சமாஜ்வாடி கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சி.பி.ஐ(எம்), சி.பி.ஐ அனைத்தும் அணி திரண்டு போராடினாலும் ஊடகங்கள், அரசு நிறுவனங்கள் எல்லாம் அதிகாரக் குவிப்பின் பக்கமே நிற்கின்றன. அந்த அதிகாரக் குவிப்பின் அடையாளமாக பிரதமர் மோடியின் பிம்பம் நிறுத்தப் படுகிறது.

தேர்தலைக் குறித்த கருத்துக் கணிப்பு என்ற பெயரிலே மிகப்பெரிய பிரசாரத்தை ஊடகங்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளன. பா.ஜ.க. வெற்றிபெறுவது ஐயத்திற்கு அப்பாற்பட்ட உறுதி என்றும், மோடி அலை வீசுகிறது என்றும் தினமும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. பா.ஜ.க., அதனுடன் ஒரு சில கட்சிகளே உள்ள தேசிய ஜன நாயக கூட்டணி என்ற என்.டி.ஏ 400 தொகுதிகளைப் பெறும் என்றெல்லாம் கூறப்படுகிறது. உண்மையில் மாநிலங்களில் உள்ள நிலை என்ன என்பதை யாருமே ஆராய முடியாதபடி அவர்களது செய்திப் பிரசாரம் அமைவதைக் காண முடிகிறது.

உள்ளபடி சொன்னால் பா.ஜ.க. இப்போது பெற்றுள்ள 303 நாடாளுமன்ற தொகுதிகள் என்பது அது செல்வாக்காக உள்ள மாநிலங்களில் அது பெற்றுள்ள அதிகபட்ச வெற்றியாகும். அதனை அப்படியே மீண்டும் வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்பதுடன், மேலும் தொகுதிகளை எங்கிருந்து பெறும் என்பதும் விடையற்ற கேள்விதான்.

பா.ஜ.க., நிதிஷ் குமார் கட்சி இரண்டும் சேர்ந்து 321 தொகுதிகள் வைத்துள்ளன. இந்தியா கூட்டணி கட்சிகள் 221 தொகுதிகள் வைத்துள்ளன. இதில் ஐம்பது, அறுபது தொகுதிகள் இடம் மாறினால் பெரும்பான்மை மாறிவிடும் என்பதுதான் உண்மை.

கர்நாடகா, ஹரியானா, டெல்லி, அஸ்ஸாம். மகாராஷ்டிரா, பீஹார், மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா,



ஜம்மு&காஷ்மீர் ஆகியவற்றில் கடும் போட்டி நிலவப் போகிறது. இவற்றின் மொத்த தொகுதிகள் 216. இவற்றில் பா.ஜ.க. வைத்துள்ள 142 தொகுதிகளில் சரிவு ஏற்பட்டால் அது பெரும்பான்மையை எட்டுவது சாத்தியமில்லை. கீழேயுள்ள பட்டியலை பகுப்பாய்வு செய்தால் நிலவரம் புரியும்.

இதைத்தவிர பா.ஜ.க. வலுவாக உள்ள மாநிலங்கள் என்று கருதப்படக்கூடிய மாநிலங்களில் உள்ள 194 தொகுதிகளில் பா.ஜ.க. 171 தொகுதிகளை ஏற்கனவே வைத்துள்ளது. இத்தகைய இமாலய வெற்றியை மீண்டும் பெற முடியுமா என்ற ஐயத்திற்கு ஊடகங்கள் இடமளிப்பதில்லை. இந்த மாநிலங்களில் காங்கிரஸ், சமாஜ்வாடி கட்சி உள்ளிட்ட எதிர்கட்சிகள் வலுவாகவே உள்ளன. அவையும் தேர்தல் களத்தில் பிரச்சாரம் செய்யும், களப்பணி செய்யும், போராடும்.

ஆனால் ஊடகங்கள் இந்த தேர்தலில் பா.ஜ.க. விற்கு போட்டியே இல்லை என்ற பிம்பத்தை கட்டமைக்கின்றன. எதிர்க்கட்சிகளின் விமர்ச னங்களை புறக்கணிக்கின்றன. ராகுல் காந்தியின் யாத்திரைகளை முற்றிலும் புறக்கணித்தன ஊடகங்கள்.

ஆனாலும், மக்களாட்சியில் இறுதி அதிகாரம் மக்களிடம்தான் இருக்கிறது. இந்திய மக்கள் ஒவ்வொரு முறையும் அதிகாரக் குவிப்பு முயற்சிகளை முறியடித்துள்ளார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாமல் இருக்கலாம்; பொருளாதாரம் புரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரே கட்சியிடம் அதிகாரம் குவிந்தால் அது தங்களுக்கு நல்லதல்ல என்ற புரிதல் இருக்கிறது. விழிப்புணர்வு இருக்கிறது. அவர்கள் மீண்டும் தங்கள் அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்வார்கள்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

## ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில்

# 109,109 ‘அ ‘வட்டத்தின் பி.எல்.ஏ. 2 /பி.எல்.சி. கூட்டம்!

## பகுதிக் கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

*சென்னை, மார்ச் 22-*

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக சார்பில் 109, 109 ‘அ’ வட்டத்தின் பி எல் ஏ 2 /பி எல் சி கூட்டம் இன்று (22.03.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் அண்ணா நெடும் பாதை, ராகவன் காலனி, மீனாட்சி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

மு.க.தமிழரசு, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணை செயலாளர் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ.,

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர்

வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர், கலை கதிரவன் ஆகியோர் கலந்து கலந்து கொள்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. நாடாளுமன்ற தேர்தல் குறித்து சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் பொதுக்குழு உறுப்பினர்கள் எம். டி.ஆர்.நாதன், டி.ஜோஸ் டானியல் மாவட்டக் கழக நிர்வாகிகள் த.விக்டர் ஆர்.என்.துரை, வி. எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின்பாபு, பகுதி கழக நிர்வாகிகள் அவைத் தலைவர், புவி. பாலாஜி, துணை செயலாளர்கள் என்.பி.இதயத் பாஷா ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள் பொருளாளர் பா.கமலக்கண்ணன், வட்ட செயலாளர் க .சிட்டிபாபு, ச. டேவிட் இன்பராஜ் வரதை த.பரி, த.குணசேகர், கே.எஸ்.தினேஷ் பிரபு, மு. மோகன், மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ்.பார்த்திபன், த. ஐசென்ட்,என்.இ.சரவணன் தட்சிணாமூர்த்தி, பா. சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், ஆர்.சீனிவாசன், வி.என். பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா பிரகாஷ் துணை அமைப்பாளர்கள் குட்டி என் மோகனவேல், பல்வேறு அணிகளுடைய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.ராஜா, எம்.டி. ஆர்.சாரதி, ஜி.வி.சரவணன், க .தங்கமணி, ஜே. இருதயநாதன், மு சீனிவாசன், டி.செல்வி, ஜே மீனாட்சி (எ)ஜோதி மீனா, தீபா சந்திரசேகர், எம்.ஏ. ஆரோன் பெலிக்ஸ், எம்.ஏ. ஜஸ்டின்ராஜ், எஸ்.பிரசன்னா, வே.சுதாகர், க.யோகமூர்த்தி, த.அமரேசன், கே.கமலக்கண்ணன் திருமுருகன் பாகப் பொறுப்பாளர்கள் ராசுக்குமார், பத்மநாபன், மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழகத்தினுடைய நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர் என வினோத் வேலாயுதம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---


## சென்னை மேற்கு மாவட்டம் 100-வது வட்டம்

# ஆ.அய்யப்பனின் மனைவி உத்தமி மறைவு!

## நே.சிற்றரசு - எம்.கே.மோகன் - முன்னணியினர் அஞ்சலி!

*சென்னை, மார்ச் 22-*

சென்னை, 10, டெய்லர்ஸ் சாலை முத்துச் சோலைத் தெருவில் வசிக்கும் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி , இந்நாள் , சென்னை மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.அய்யப்பனின் மனைவி உத்தமி (வயது 73) 21-3-2024 வியாழக்கிழமை பகல் 12 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (22.3.2024 - வெள்



ளிக்கிழமை) மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு புதிய ஆவடி சாலையில் உள்ள வேலங்காடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

தகவல் அறிந்து சென்னை மேற்கு மவாட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன். எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பத்மபிரியா, வட்டச் செயலாளர் ஆ.ஏகாம்பரம் உள்ளிட்ட மவாட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கைகாட்டுபவரே பிரதமர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பேச்சு!

திருவள்ளூர், மார்ச் 22.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட சார்பில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேற்கு மாவட்ட திமுக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., வரவேற்புரையற்றினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கோபால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் தளபதி சுந்தர், காங்கிரஸ் மூர்த்தி, அஸ்வின், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் மு.பாபு, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.பி.அஸ்காப் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் கோ.கிருஷ்ண மூர்த்தி தமிழக வாழ்வுரிமை கட்சியின் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் கார்த்திக் தமிழ்நாடு விவசாயிகள் தொழி லாளர்கள் கட்சியின் மாநில துணை பொது செயலாளர் புருசோத்தமன் ஆகியோர் முன்னிலை வகித்தார்

இந்த கூட்டத்தில் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ பேசியதாவது,

திருவள்ளூர் தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரையும், அரக்கோணம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனையும் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும். இந்த தேர்தலில் எந்த பகுதியில் வாக்குகள் குறைகிறதோ அந்த பகுதி நிர்வாகி மீது திமுக தலைமை பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும்.

மோடி தலைமையிலான அரசு ஒன்றியத்தல் அமையக்கூடாது முதலமைச்சர் கைகாட்டுபவரே பிரதமர்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் ராஜாகுப்புசாமி, திருத்தணி தொகுதி பார்வையாளர் வட சென்னை நா.மனோகரன் கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ஒன்றிய நகர கழகச் செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், வி.வினோத்குமார், ஆர்த்தி ரவி, ஜி.ரவீந்திர, சி.ஜெ.சீனிவாசன், சி.என்.சண்முகம், பெ.பழனி, என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், எம்.ஜெ.ஜோதிக்குமார், டி.கிறிஸ்டி, மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் முடிவில் திருவள்ளூர் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் நன்றிகூறினார்



திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூர் தேர்தல் அலுவலகத்தை திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தார்கள். இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பூபதி, இராணிப்பேட்டை மாவட்ட துணைச் செயலாளர் எம். சிவானந்தம், ஒன்றியச் செயலாளர் சி.ஜெ.சீனிவாசன், பேரூர்ச் செயலாளர் ஜோதி குமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### சென்னை மேற்கு மாவட்டத்தில்

# ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், தலைவர்கள் - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக சென்னை மேற்கு மாவட்டத்தில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் - தலைவர்கள் கலந்தாலோசனை மற்றும் வேட்பாளர் அறிமுக ஆலோசனைக் கூட்டம் இன்று 22.03.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரத்தில் அமைந்துள்ள எம்.எல்.எம். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள், எம்.கே.மோகன், நா.எழிலன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி மேற்பார்வையாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA2 மற்றும் இந்தியா கூட்டணியில் அங்கம் வகித்துள்ள காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மையம், ஆம் ஆத்மி, மனித நேய ஜனநாயக கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் - செயலாளர்கள் இந்தகலந்தாலோசனை மற்றும் அறிமுக கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

**நே.சிற்றரசு,**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# மார்ச் 31ம் தேதி வங்கிகள் செயல்படும்! இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச் 22 –

நடப்பு நிதியாண்டின் 2023–24 கடைசி நாள் ஞாயிற்றுக்கிழமை வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசு வணிகத்தைக் கையாளும் அனைத்து ஏஜென்சி வங்கிகளுக்கும் தங்கள் கிளை களைத் திறந்து வைக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) கோரிக்கை விடுத்துள்ளது. நடப்பாண்டு மார்ச் மாதத்தில் அதிக விடுமுறை தினங்கள் வந்துள்ளன. இந்நிலையில், மார்ச் 31ந்தேதி விடுமுறையை தினத்தை ரத்து செய்து, அன்று வங்கிகள் செயல்பட வேண்டும் என அனைத்து வங்கி மற்றும் நிதி பரிவர்த்தனை நிறுவன ங்களுக்கு இந்தியன் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி உள்ளது. இதைத்தொடர்ந்து, மார்ச் 31, 2024 அன்று அரசு வணிகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து கிளைகளையும் திறந்து வைக்குமாறு ஏஜென்சி வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

மேலும் இந்த விதிவிலக்கான நாளில் வங்கிச் சேவைகள் கிடைப்பதை விளம்பரப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் கடைசி நாளான 2023–2024 அன்று வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

### தி.மு.க. தேர்தல் அறிக்கையில்

# நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம்!

## முதல்வருக்கு இராஜேஸ்குமார் எம்.பி. நன்றி!

நாமக்கல், மார்ச் 22 -

நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டல அமைக்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளதற்கு, மாவட்டச் செயலாளர் இராஜேஸ்குமார் எம்.பி., தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேற்கு மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் முன்னிலை வகித்தார். நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கடந்த மாதம் தி.மு.க. சார்பில் லோக்சபா தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் நடைபெற்றது.

இதில் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணையாளர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு, நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் அறிவித்துள்ளார். இதன் மூலம் நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி அதிகரிக்கும்.

மேலும், பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களால் வேறு பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டால், நாமக்கல் பகுதியில் முட்டை ஏற்றுமதி பாதிக்காது. இதற்கு நாமக்கல் பகுதியைச் சேர்ந்த கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை ஏற்றுமதியாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். மேலும் நாமக்கல் மாவட்டம் சோழசிராமணியில் இருந்து, ஈரோடு மாவட்டம் பாசூர் வரை ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் எனவும், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது.

இதன்மூலம் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் பயனடைவார்கள்.

நாமக்கல் லோக்சபா தொகுதியில், இண்டியா கூட்டணியின் சார்பில், கொ.ம.தே.க. வேட்பாளர் சூரியமூர்த்தி தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். இதையொட்டி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22ம் தேதி) காலை 10 மணிக்கு, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது. 25ம் தேதி தி.மு.க. கூட்டணி கொ.ம.தே.க. வேட்பாளர் சூரியமூர்த்தி வேட்பு மனுத் தாக்கல் செய்ய உள்ளார். அன்று மாலை முதல் தீவிர தேர்தல் பிரச்சாரம் நடைபெறும். வருகிற 31ம் தேதி நாமக்கல், கரூர் மற்றும் ஈரோடு லோக்சபா தொகுதி தி.மு.க. தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஈரோட்டில் நடைபெற உள்ளது. அதில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.






நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு திருச்சி சிறுகனூரில் கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர் வேட்பாளர் கே.என்அ.ருண் நேரு மற்றும் திருச்சி வேட்பாளர் துரை வைகோ ஆகியோரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்ற இருக்கும் முதல் பிரச்சார கூட்ட மேடையினை கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாநகரச் செயலாளர் மு.அன்பழகன், மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. கதிரவன், காங்கிரஸ் கலை மற்றும் கழக நிர்வாகிகள் இளங்கோவன், ஸ்ரீனிவாச பெருமாள், கமல் முஸ்தபா, கே.கிருஷ்ணமூர்த்தி, கோல்டன் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் முனனிலையில் நடைபெற்றது. இதில் கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், முன்னணியினர் பங்கேற்றனர்.

### இந்தியாவின் இருள் விலகட்டும்!

# 'இந்தியா' கூட்டணியால் நாடு ஒளிரட்டும்!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அறிக்கை!

சென்னை, மார்ச் 22 - திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீர பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தேர்தல்கள் வரும், போகும், ஆனால் இந்த முறை வரவிருக்கும் தேர்தல் அப்படிப்பட்டதன்று! இனியும் தொடர்ந்து இந்தியாவிற்குத் தேர்தல் வேண்டுமா, வேண்டாமா என்று தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் இது!

1932இல், ஹிட்லருக்குத் தவறாக வாக்களித்த ஜெர்மானிய மக்கள், அதற்குப் பிறகு இரண்டு தலைமுறைகளுக்குத் தேர்தலையே பார்க்க முடியவில்லை.

அந்தப் பிழையை இந்தியா இந்தத் தேர்தலில் செய்துவிடக் கூடாது. பாசிச இருள் வீழ வேண்டும். உதயசூரியனின் ஒளி நாடெங்கும் பரவ வேண்டும்.

இந்தியாவில் இருக்கும் பல்வேறு ஜனநாயக சக்திகள் இ.ன்.டி.யா. என்னும் பெயரில் ஒரு பெரும் கூட்டணியாக உருவாகியுள்ளன. நம் திராவிட முன்னேற்றக் கழகமும் அதில் ஓர் அங்கமாக இணைந்துள்ளது. நம் தலைவர் தளபதி இந்தியத் தலைவர்களில் ஒருவராக இன்று உயர்ந்து நிற்கிறார்.

எனவே தமிழ்நாட்டில், திமுக தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற, நாம் அனைவரும் ஓய்வறியாது, ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும் என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைச் செயற்குழு, தமிழ் நாட்டு மக்களைத் தலைவணங்கிக் கேட்டுக்கொள்கிறது.

பேரவையின் இணை அமைப்புகளான திராவிட நட்புக் கழகம், திராவிட மாணவர் பேரவை ஆகியனவும் தங்கள் பங்கினை முழுமையாக ஆற்றிட முடிவெடுத்துள்ளன.

வாருங்கள் தமிழர்களே! தளபதியின் கனவை நினைவாக்குவோம்! மோடியின் பாசிச ஆட்சியைத் தவிடு பொடியாக்குவோம்!!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஏப்.2 தொடங்கி 12-ஆம் தேதி வரை நடைபெறுகிறது!

# 1 முதல் 9ஆம் வகுப்புகளுக்கான பள்ளி இறுதித் தேர்வுகள்!

## பள்ளிக் கல்வி இயக்குநர் தகவல்!

சென்னை, மார்ச் 22 - தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2023-2024 ஆம் கல்வி ஆண்டிற்கான 1 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கான பள்ளி இறுதித் தேர்வுகள் நடத்துவது சார்பாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

"18வது மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தமிழகத்திலுள்ள அனைத்து அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான 2023 - 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளி இறுதித் தேர்வுகள் 02.04.2024 அன்று தொடங்கி 12.04.2024 வரை நடைபெறும் எனவும், 13.04.2024 முதல் மாணவர்களுக்கு கோடை விடுமுறை எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஆசிரியர்கள் 19.04.2024 அன்று நடைபெற உள்ள 18வது மக்களவைத் தேர்தல் சார்ந்த பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும், 23.04.2024 முதல் 26.04.2024 வரையில் 1 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விடைத்தாள் திருத்துதல், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் மற்றும் அடுத்த கல்வி ஆண்டிற்கான (2024 -2025) மாணவர்கள் சேர்க்கை போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

26.04.2024 அன்று இக்கல்வி ஆண்டிற்கான கடைசி வேலை நாளாக இருக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது".

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

### வேட்பு மனு தாக்கலின் கடைசி நாளில்தான்

# வாக்காளர் பட்டியலை இறுதி செய்ய வேண்டும்!

## தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு!

புதுடெல்லி, மார்ச் 22 - வேட்புமனு தாக்கலின் கடைசி நாளில்தான் வாக்காளர் பட்டியலை இறுதி செய்ய வேண்டும் என தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, முகவரி மாற்றம் செய்ய, திருத்தம் மேற்கொள்ள பொதுமக்களுக்கு தேர்தல் ஆணையம் அவகாசம் வழங்கும். இதற்காக சிறப்பு முகாம்களும் அமைக்கப்படும். அந்தவகையில், நாடாளுமன்ற தேர்தலையொட்டி நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, முகவரி மாற்றம் செய்ய, திருத்தம் மேற்கொள்ள பொதுமக்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் இறுதி வாக்காளர் பட்டியலும் வெளியிடப்பட்டன.

இந்நிலையில், தற்போது, தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், (Gfx in) 1.01.2024 ஐ தகுதி ஏற்பு நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலை புதுப்பித்து வேட்புமனு தாக்கலின் கடைசி நாளில் இறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

வேட்பாளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இலவசமாக அளிக்க வேண்டும் என்றும், வேட்பாளர் பட்டியலை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அதன் நகல் வாக்காளர் பதிவு அதிகாரியிடம் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் - நிர்வாகிகள் கூட்டம்!

## பா.மு.முபாரக் தலைமை - அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலை!

உதகை, மார்ச் 22 - நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்க நீலகிரி மாவட்ட இந்திய கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு. முபாரக் தலைமையில் தேர்தல் பணி செயலாளர் அமைச்சர் கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திமுக தலைமையிலான INDIA கூட்டணியின் வேட்பாளர், திமுக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது குறித்தும், மாவட்டம் முழுவதும் வீதி வீதியாக சென்று வாக்குகள் சேகரித்து, திமுக வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய அனைத்து பணிகளையும் செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் உதகை எம்.எல்.ஏ., கணேஷ், சி.பி.ஐ மாநிலக்குழு உறுப்பினர் பெள்ளி, மாவட்ட செயலாளர் போஜராஜன், சி.பி.எம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சங்கரலிங்கம், மதிமுக செயற்குழு உறுப்பினர் ஆரிப் சேட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட பொதுச்செயலாளர் அனீபா, விடுதலை சிறுத்தைகள் கட்சி சகாதேவன், மாவட்ட செயலாளர்கள் புவனேஸ்வரன், சுதாகர், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் அப்துல் சமது, மாவட்ட செயலாளர் அபுதாகீர், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலளார் ஜாகீர் ஹாசன், திராவிட தமிழர் கட்சி மாவட்ட மகளிர் அணி தலைவர் வசந்தா மனித நேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் தமீமுன் அன்சாரி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்டத்தில் திமுக சார்பில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், செந்தில் ரங்கராஜ், ராஜு, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஷ்குமார், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சசிகுமார், காங்கிரஸ் சார்பில் நித்யசத்யா, ரகு, நாகராஜ், உதகை ரவி, சி.பி.ஐ சார்பில் ஆரி, ரகுநாதன், சிவா, சுப்ரமணி, ஜெயகுமார், சி.பி.எம் சார்பில் வினோத், இளங்கோவன், முஸ்லிம் லீக் சார்பில் நாசர், முஜிபூர் ரகுமான், மதிமுக சார்பில் ரவீந்திரன், செல்வராஜ், விசிக சார்பில் மண்ணரசன், ராஜேந்திர பிரபு, துயில்மேகம், தீபக்குமார், மக்கள் நீதி மய்யம் சார்பில் செல்வம், ரபீக், திராவிட தமிழர் கட்சி சார்பில் உதகை சிவா, டெய்சிராணி, சிவா, அர்ஜுணன், மனித நேய மக்கள் கட்சி சார்பில் நூர் முகமது, சலீம், சேக்தாவூத், ஆசிப், மனித நேய ஜனநாயக கட்சி சார்பில் பெரியார் கார்த்தி, செமீர், ஜோசப், அப்தல் மஜீத், சிஹாப், முஜீ, உசேன், மன்சூர் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட திமுக துணை செயலாளர் ரவிகுமார் நன்றி கூறினார்.

### நே. சிற்றரசு பங்கேற்பு: வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியில் வட்டங்கள் தோறும் பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, மார்ச் 22- ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகம் சார்பில் மத்திய சென்னை தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து வட்டங்கள் தோறும் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகின்றது.

23-03-2024, சனிக்கிழமை - மாலை 6.00 மணி -111 வது வட்டம், 111வது அ வட்டம், இடம்: ராதாகிருஷ்ணன், திருமண மண்டபம், நெ. 80/141, கிரீன் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.

23.3.2024 சனிக்கிழமை - மாலை 7.00 மணி - 113 வது அ வட்டம், 113 வது ஆ வட்டம், இடம்: பசும்பொன் தேவர் மண்டபம் அபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை - 17.

23.3.2024 சனிக்கிழமை - இரவு 8. 00 மணி - 113வது வட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தேர்தல் பணி மனை, புதுக்குளத்தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 34.

24.3.2023 ஞாயிற்றுக்கிழமை - காலை 9.00 மணி - 117 வது வட்டம், இடம்: மெலோனி தெரு, ஆச்சி இல்லம்.

24.3.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி. இடம்: ஷார்ஜன் பவன், அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை,

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் மு.க. தமிழரசு, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ். ராஜ்,

தொகுதி பார்வையாளர் கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. நாடாளுமன்ற தேர்தல் குறித்து சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.நற்குணநாதன், பா.இராபர்ட், வெற்றிச் செல்வி மாணிக்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலைச்செல்வன், சி. சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு பகுதி கழக நிர்வாகிகள் எம்.ஆர்.ஐம்புலிங்கம், கோ.ரவி, மு.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம்.ஜெயக்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.பாபு, எப்.பீட்டர் ஜான், பா.மகேஷ்,டி. தேவராஜ், எம்.என்.விஷ்ணு, எஸ்.சத்தியபெருமாள், தேனா எல் .தவமணி, கோ.யுவராஜ், எஸ்.என்.கே. ராமன், எம்.ஏ. நந்தினி, பிரேமா சுரேஷ், மல்லிகா யுவராஜ்,

மாவட்ட அமைப்பாளர் பா.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய் திருமலை பொன்னுரங்கம், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.எச்.இம்ரான், என். மோகன்வேல்,

மகளிர் அணி லதாபிளாரன்ஸ், சுலோச்சன ராமு, எம். பச்சையம்மாள், சரளாகுமாரி, ரேணுகா, பி.ராஜேஸ்வரி, மாவட்ட பிரதிநிதிகள் ஏ.கண்ணன், ஜான்டிசில்வா, எஸ்.குணசேகர், ஸ்ரீதர், பாட்ஷா பாபு, பூகா.சாமிவேல் ஜெ.வரதன், ஏ.வி.இராமநாதன், எம்.வி.வினோத், டி.வேல்முருகன், எ.சிவ லிங்கம்,

பாக ஒருங்கிணைப்பாளர்கள் எம்.சரவணன், பி.கே. ஆசைதம்பி, வழக்கறிஞர் ரவிவர்மன், ஹாக்கி சதீஷ், வழக்கறிஞர் எம்.விந்தியா, எம். மணி, எஸ்.டி.டி.மோகன், வாசுதேவன் எஸ்.ரமேஷ், டி.ஜெயக்குமார், மூ.பாண்டியன், பா.வினோத் குமார், கே.எச்.அப்சல், மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்வார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை மேற்கு மாவட்டம்,

### சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில்

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களை ஆதரித்து தனது முதற்கட்ட பிரச்சாரத்தை 24.03.2024 காலை 8.30 மணியளவில் சேப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள அய்யா முதலி தெரு, பஜாஜ் தெரு சந்திப்பில் துவங்குகிறார்.

எனவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி மேற்பார்வையாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள், BLA2 (பாக முகவர்கள்) / BLC (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணியின் தோழமை கட்சி நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு,**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சொ. காவேரிமணியம்**

**மார்ச் 22 (2006)**



**மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.**

**1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.**

**"எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்க வளர்த்த இனிய உடன்பிறப்பு" எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷ் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோர் திருவுருவ படங்களுக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் வி.சி. சந்திரகுமார், மு.சுப்பிரமணியம், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, சு.குணசேகரன், வில்லரசம்பட்டி முருகேசன், ஜெ.திருவாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சிதெற்கு மாவட்ட கழகச்செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற திருச்சி தெற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டத்தில், இந்தியா கூட்டணியின் திருச்சி நாடாளுமன்ற தொகுதியின் ம.தி.மு.க வெற்றி வேட்பாளர் துரைவைகோ அவர்கள் தன்னை அறிமுகம் செய்துகொண்டு ஆதரவு கோரி உரையாற்றினார். இந்நிகழ்வில் திருச்சி மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், மாவட்டக் கழகச் துணை செயலாளர் செங்குட்டுவன், ம.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் புதூர் பூமிநாதன், கு.சின்னப்பா, ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் திரு மு.இராஜேந்திரன், டாக்டர் ரொஹையா, ம.தி.மு.க மாவட்ட செயலாளர்கள் வெல்லமண்டி சோமு, மணவை தமிழ்மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# தியாகராயர் நகர் கோ.சு.மணி இல்ல மணவிழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - கோவி.செழியன் - நே.சிற்றரசு - தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்து!

சென்னை, மார்ச் 22 -

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் தொகுதி தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணியின் சகோதரர் கோ.தண்டபாணி கலைவாணி ஆகியோரின் மகன் கோ.கோகுல்நாத் புளியந்தோப்பில் வசிக்கும் சங்கர் தில்லைநாயகி ஆகியோரின் மகள் ச.பிரியங்கா ஆகியோரது திருமண வரவேற்பு நாளை (23032024 சனிக்கிழமை) மாலை 6.30 மணி அளவிலும், திருமண விழா நாள்: 24032023 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி அளவில் சென்னை, சாலிகிராமம் 80 அடி சாலையில் உள்ள கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது இந்நிகழ்ச்சிக்கு

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில், தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வரவேற்புரையில், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை , மயிலாப்பூர் மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மயிலாப்பூர் கிழக்கு பகுதி செயலாளர் மயிலை எஸ்.முரளி, 10 வது மண்டலகுழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம் , தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135அ வட்ட செயலாளர் மு.செல்வகுமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.வினோத்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழக அரசு கொறடா கோ.வி.செழியன், மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, முனைவர் தமிழ்ச்சி தங்கபாண்டியன் எம்.பி. , கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி , எம்.கே.மோகன் , காரம்பாக்கம் க.கணபதி , AMV.பிரபாகர் ராஜா மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் , நா.ராமலிங்கம் C ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்

மேலும் க.தனசேகரன் MC, எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மாம்பலம் ஆ.சந்திரசேகர், மு.சத்யா, கே.மலர், நந்தனம் வேதா, என்.அன்பழகன், எஸ்.மதன்மோகன் MC, நொளம்பூர் வே.ராஜன் MC, கே.கண்ணன் MC, மு. .ராஜா MC, இரா.துரைராஜ் MC, ச.பரமசிவம், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், பெரியமேடு வி.சுதாகர், எம்.ஆறுமுகம், ஜெ.ஜானகிராமன், செல்விசௌந்தர்ராஜன், அ.பாபு, யோகேஷ்ரவி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர் MC, மா. .அன்பரசன், உ.துரைராஜ், வி.எஸ்.ராஜ், ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வி.எஸ். கலை, ராஜா அன்பழகன் எம்.சி., மோனிஷா கருணாநிதி, புலியூர் டி.மோசஸ், சா.தேவராசு, ஆர்.குமரன், எஸ்.உமாசங்கர், என்.எஸ்.பாலசுப்ரமணியன், ச.சண்முகநாதன், பானு சலீம், கே.சரவணன், ஆர்.கதிரவன், என்.ஜி. .சேகரன், வி.விஜய் வெங்கடேசன், வழக்கறிஞர் சி.கணேஷ்பாண்டியன், ஜி.மோகன்ராஜ், த.புவியரசன், மயிலை ஆர்.பாலு, இ.அஸ்வின் குமார், டாண்டி பிரகாஷ், ம.சதிஷ், அ.பொன்னுத்துரை, முரசொலி சிங்காரம், வழக்கறிஞர் மறைமலை, அனந்தகுமார் , பி.லட்சுமணன், எஸ்.எம்.கார்த்திக் ராஜா, மு.பாலகுரு, பவானி ரவி டி.ஸ்ரீதர் எஸ்.ஸ்ரீதர் வித்யா வேல்முருகன், எம்.எஸ்.பழனி, வழக்கறிஞர் எம்.கே.மூர்த்தி, வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன், மு.ம.செந்தில்குமார், ஜி.பி.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், என்.துரை, டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயக்குமார், பி.மாரி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மு.செல்வகுமார், எஸ்.வினோத்குமார், கார்திக்சந்திரகேசன், பவானி பால்வில்லியம், பூங்கொடி ராஜேஷ், சித்ரா செல்வகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில்

# சைதை மேற்கு பகுதியில் இன்று வாக்குகள் சேகரிப்பு!

## தலைமை - ஜி.ஜே.மோசஸ், முன்னிலை - எம்.கிருஷ்ணமூர்த்தி! வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 22-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குப்பகுதி சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில், சென்னை தெற்கு மாவட்ட கழகச்செயலாளரும், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்துதலின்படி பகுதி அமைப்பாளர் ஜி.ஜே. மோசஸ் தலைமையிலும், பத்தாவது மண்டலக்குழு தலைவரும், சைதை மேற்குப் பகுதி கழக செயலாளருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழக செயலாளர் ந.தமிழரசு, மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் முன்னிலையில் சைதை மேற்குப் பகுதிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள மசூதிகளில் தென் சென்னை நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை ஆதரித்து வாக்குகள் சேகரிக்கப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக இன்று (22.03.2024 வெள்ளிக்கிழமை) நண்பகல் 12 மணியளவில், 140வது வார்டில் பால்மோர் தெருவில் உள்ள மசூதியில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க உள்ளார்.

எனவே இந்நிகழ்விற்கு மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகத் தலைவர்கள், பாக களப்பணியாளர்கள், கழக தோழர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு சிறுபான்மை நல உரிமைப் பிரிவு பகுதி அமைப்பாளர் ஜி.ஜே. மோசஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மயிலை மேற்குப் பகுதி

# 121வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் டி.ராஜவேலு அறிக்கை!

சென்னை, மார்ச் 22-

மயிலை 121வது வட்டச் செயலாளர் டி.ராஜவேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப் பகுதி 121வது வட்டக் கழகத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம் வட்ட கழக அவைத்தலைவர் கி.சேகர் தலைமையில் இன்று (22.3.2024, வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் இராயப்பேட்டை நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ள ஆஞ்சநேயர் திருக்கோவில் பின்புறம் ராம் மந்திர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் மயிலை மேற்குப் பகுதி செயலாளர் முன்னிலையில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு, மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே 121வது வட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட சார்பில் திமுக தலைமையான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் அரக்கோணம் மற்றும் திருவள்ளூர் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. உடன் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கூட்டணி கட்சி சார்ந்த தலைவர்கள் மாவட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் கோபால், கஜேந்திரன், தளபதி சுந்தர், மூர்த்தி, அஸ்வின், மு.பாபு, ஏ.பி.அஸ்காப், கோ.கிருஷ்ணமூர்த்தி , கார்த்திக், புருசோத்தமன், மாவட்ட மாநில நிர்வாகிகள் தொகுதி பார்வையாளர்கள் கே.திராவிடபக்தன், ராஜாகுப்புசாமி, வடசென்னை நா.மனோகரன், ஆர்.டி.இ.ஆதிசேசன், ஓ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், திருவள்ளூர் நகர செயலாளர். சி.சு.ரவிச்சந்திரன் உள்பட திமுக ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் உள்ளனர்.

### திருவொற்றியூர் தொகுதியில்

# வடசென்னை தொகுதி வேட்பாளர் கலாநிதி வீராசாமி அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, மார்ச் 22-

சென்னை, வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் தொகுதியில் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் கலாநிதி வீராசாமி அறிமுகக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் வரும் 23.03.2024ம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் டி.கே.பி. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர், திருவொற்றியூர் கிழக்கு பகுதி, திருவொற்றியூர் மேற்கு பகுதி, திருவொற்றியூர் மத்திய பகுதி சேர்ந்த பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், BLA2கள், BLC பாகப் பணியாளர்கள், கழகத் தோழர்கள், கூட்டணி கட்சியைச் சார்ந்த காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மதிமுக, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, விடுதலை சிறுத்தைகள் இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேயகட்சி, மக்கள் நீதி மையம், திராவிடர் கழகம், தமிழக வாழ்வுரிமை கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், முக்குல த்தோர் புலிப்படை மற்றும் இந்திய கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் பயன்படுத்தக்கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை முதற்கட்டமாக கணினி மூலம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று (21.03.2024) ரிப்பன் கட்டட வளாக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர். லலிதா, (கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் கே. ஜெ.பிரவீன் குமார், (சென்னை மத்தியம்), கட்டா ரவி தேஜா, (சென்னை வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நகர் தெற்குப் பகுதி

# 138 (அ) வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.அன்பழகன் அறிக்கை!

சென்னை, மார்ச் 22-

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி கலைஞர் நகர் தெற்கு பகுதி 138 (அ) வட்ட செயலாளர் மு.அன்பழகன் வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 138 (அ) வட்ட கழக செயல் வீரர்கள், பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.03.2024) மாலை 7.00 மணியளவில் கலைஞர் நகர் தெற்கு பகுதி அலுவலகம் அண்ணா மெயின் ரோட்டில் அமைந்துள்ள இடத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர், 138 வார்டு மாமன்ற உறுப்பினர் கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.


இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் பா.வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், பகுதி நிர்வாகிகள் எஸ்.உமாபதி, எஸ்.ரவி மாவட்ட பிரதிநிதிகள் எம்.வீரா, கே.சசி, ஈகை.கருணாகரன், வட்ட கழக நிர்வாகிகள் ஜம்பு முருகன், கே.சண்முகம், ஏ.அசோக்குமார், வெ.கல்பனா, க.சுரேஷ்குமார், ஜி.ரமேஷ், எஸ்.மணிகண்டன், எம்.பாபு, ஆர்.அமுல்ராஜ், வே.மூர்த்தி மற்றும் கன்னி முருகன், எம்.கணபதி, ஸ்டெர்லிங் சுரேஷ், சுதா, மேகலா, பா.சர்மா, என்.எஸ்.தென்னரசு. ஆர்.வேலு, பி.சங்கர், த.சேகர், பாக முகவர்கள் என்.பிரேம்குமார், பி.தமிழரசன், து.நாகப்பன், எம்.கோபி, ஜி.ரத்தீஸ் (எ) அனீஸ், சந்தோஷ்ஜெய், பி.கந்தன், ஆர்.குமார், என்.தனசேகரன் (எ) கருப்பு, எஸ்.மகாதேவன், ஈ.சேரப்பாண்டியன், எஸ்.திருக்குமரன்.

இவ்வாறு மு.அன்பழகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**காட்டாங்கொளத்தூர் எம்.வி.இராமு**

**மார்ச் 22 (2017)**



**காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**காட்டாங்கொளத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) அவரது இல்லத்தில், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையை பாராட்டி, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸ் அவர்கள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், “தேவேந்திரகுல மக்கள் முன்னேற்ற பேரவை”யின் தலைவர் எஸ்.ஆர்.பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் பேரவை நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.




முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ‘திராவிடத் தமிழர் கட்சி’யின் தலைமை நிலையச் செயலாளர் பேரறிவாளன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி. சேகர், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபிநேசர், திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளருமான டாக்டர். கலாநிதி வீராசாமி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



திருப்பெரும்புதூர் தொகுதியின் ‘இந்தியா’ கூட்டணி நாடாளுமன்ற வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள், மரியாதை நிமித்தமாக மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோரைச் சந்தித்தார்.



தூத்துக்குடி தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார்.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 112 வது வார்டில் அமைந்துள்ள புலியூர் 7,8,9, ஆகிய தெருக்களில் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களை ஆதரித்து மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் ஏற்பாட்டில் மு.க. தமிழரசு, வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார், உடன் சட்டமன்ற உறுப்பினர் நா .எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, தொகுதி மேற்பார்வையாளர் கலை கதிரவன், வட்ட செயலாளர்கள் வரதை பரி, மோகன், சிட்டிபாபு, டேவிட் இன்பராஜ், மற்றும் பகுதி கழக / வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னணியினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## கண்டனக் குரல்!




சாதி, மதம், இனம், மொழி, நிறம், உணவுப் பழக்கவழக்கம் என எதன் பேரிலும் காட்டப்படும் பாகுபாடு என்பது கண்டிக்கத்தக்கதே. ஒருவர் சைவ உணவுப்பழக்கம் உள்ளவராகவோ அசைவம் சாப்பிடுபவராகவோ இருக்கலாம். ஆனால், இந்தப் பழக்கம்தான் உயர்வானது, புனிதமானது என்று சொல்லும்போதுதான் பிரச்சினை வருகிறது. அப்படியானதொரு எதிர்ப்பைத்தான் ஜொமாட்டோ உணவு வினியோக நிறுவனமும் சமீபத்தில் சந்தித்தது.

‘சைவ உணவுகளை விநியோகிப்பதற்கு என்றே ஒரு பச்சைப்பெட்டியை அறிமுகம் செய்கிறோம். அந்த பச்சைப்பெட்டியில் சுத்த சைவ உணவகங்களின் உணவு மட்டும்தான் இருக்கும். அசைவ உணவுகள் மட்டுமல்ல, அசைவ உணவகங்களில் விற்கப்படும் சைவ உணவுகளும் இருக்காது’ என்று அறிவித்த ஜொமாட்டா நிறுவனம், அந்த ‘சுத்த சைவ’ ஊழியர்களுக்கும் பச்சைநிற சீருடையை அறிமுகம் செய்தது. ஆனால், இப்படி விநியோகிக்கும் ஊழியர்களைப் பாகுபடுத்தக்கூடாது என்று எதிர்ப்புகள் எழுந்ததையடுத்து, ‘எல்லா ஊழியர்களுக்கும் ஒரேமாதிரியான வழக்கமான சீருடைதான்’ என்று அறிவித்திருக்கிறது ஜொமாட்டா. ‘சைவ உணவுகளுக்கு என்றே தனிப்பெட்டி என்ற அறிவிப்பு திரும்பப் பெறப்படாவிட்டாலும் சீருடைப் பாகுபாடு திரும்பப் பெறப்பட்டது எங்களுக்குக் கிடைத்த வெற்றி’ என்கிறார்கள், கண்டனக் குரல் எழுப்பியவர்கள்.

## ஃப்ளாஷ்பேக்



ஹாஜா ஜலீலுதீன்



### இஃப்தாரில் மேயர் தளபதி!

1999-ஆம் ஆண்டு, சென்னை மாநகரத் தந்தையாக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் திகழ்ந்தார். அந்த ஆண்டு, மண்ணடி தம்புச்செட்டி தெருவில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் தளபதி அவர்கள் பங்கேற்று, எங்களுடன் நோன்பு திறந்தார். அவருக்கு மரியாதை செய்யும் வகையில், சால்வை அணிவித்து அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

**-ஹாஜா ஜலீலுதீன், அவைத் தலைவர், துறைமுகம் பகுதி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எழுச்சி உரை!

1971-ஆம் ஆண்டு, ஓராண்டுக்கு முன்னதாகவே மக்களவையைக் கலைத்துத் தேர்தலை நடத்த ஒன்றிய அரசு முடிவு செய்தது. அப்போது, தமிழ்நாட்டு மக்களிடம் வானொலி மூலம் உரையாற்றினார் கலைஞர். “மக்கள் தங்களுக்காகவும், தங்கள் சந்ததிக்காகவும் வருங்காலத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வன்முறையற்ற வகையில், வறுமையை ஒழிக்கப் போராடவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற கோடிக் கணக்கான உழைக்கும் பாட்டாளிகளுக்கு இது அருமையான வாய்ப்பு. நான் மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மகத்தான நம்பிக்கை வைத்திருப்பவன்” என அவர் ஆற்றிய உரை மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது.

## சீரணி ⟶ இளைஞர் அணி

3

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

# செயலாளர்கள் மன்றம்!

*‘செயல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். பேரறிஞர் அண்ணா அதை தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால்தான் 1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்ததும், அடுத்து வந்த மே 8-அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர் இப்படிச் சொன்னார்:*

*“நாம் சிந்தித்து, சிந்தித்து ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். இனி, நாம் சிந்தித்துப் பயன் இல்லை. அதில் பொருத்தமும் இல்லை. மன்றத்தின் பெயர் ‘சிந்தனையாளர் மன்றம்’ என்று இருக்கட்டும். உங்கள் நடவடிக்கைகள் செயலாளர்கள் மன்றமாக அமைய வேண்டும்”.*

*அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசும்போது, “நாம் எதை, எதை நிறைவேற்றக் கருதுகிறோமோ அதற்கு அரசாங்கத்திடம் போதுமான நிதி இல்லை. ஆட்சியின் மூலமாக செய்யும் காரியங்கள் அல்லாமல் உங்களைப் போன்றவர்களைக் கொண்டு என்ன என்ன பணிகளைச் செய்ய முடியும் என்று யோசித்து வருகிறேன். இதில் எனக்கு திட்டமான வடிவம் புலப்படவில்லை. உங்களைப் போன்றவர்களை, மாணவ மாணவிகளைப் பொதுப் பணியில் ஈடுபட விரும்புகிறவர்களை எப்படிப் பயன்படுத்துவது? எதிலே ஈடுபடுத்துவது என்று யோசித்து வருகிறேன்” என்றவர், கிராமத்தில் இருப்பவர்களுக்கும், நகரத்தில் இருப்பவர்களுக்கும் எப்படிப்பட்ட வேலைகளைத் தரலாம் என்றும் அவர் திட்டமிட்டார்.*

*அவர் சொல்கிறார்: “இது சென்னை நகரமாக இல்லாமல் கிராமமாக இருந்தால் உங்களை எல்லாம் உணவு உற்பத்தியில் ஈடுபடும்படி சொல்வேன். உங்களை, நகரில் உள்ளவர்களை அப்படிப்பட்ட பணிகளுக்கு நான் போகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட இடங்களுக்குப் போய் வரவே ஒருநாள் ஆகிவிடும். வாரத்தில் ஒரு நாள் அல்லது தினமும் ஒரு மணி நேரம் உங்கள் நேரத்தை நீங்கள் செலவிட்டால் அது கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சமமாகும்”.*

*கிராமமாக இருந்தால், இலங்கையில் அன்று இருந்தது போல பெரிய பெரிய அரசாங்க விவசாயப் பண்ணைகளில், ஊதியம் வாங்காத தொண்டாக, பள்ளி மாணவ மாணவிகளை அழைத்துச் சென்று நீர் பாய்ச்சுவது, களை எடுப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தலாம் என்றும், நகரமாக இருந்தால் அரசு நடத்தி வந்த கோழிப் பண்ணைகளில் சேவையாற்ற வைத்து, அங்கு ஏற்படும் நட்டத்தைக் குறைக்கலாம் என்றும் அண்ணா யோசித்தார்.*

*உணவு உற்பத்தி, குடும்பக் கட்டுப்பாடு, கலப்பட ஆபத்து, சுத்தமாக வாழும் முறை, இப்படிப்பட்ட பிரச்சினைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தத் திட்டமிட்ட அவர், “நாமாகப் பார்த்து ஒரு ஆட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். இப்படிப்பட்ட ஆட்சியை அமைக்க, நீங்கள்தான் துடித்தீர்கள்.*

*நான் வேண்டாம், வேண்டாம் என்றேன். நீங்கள் வேண்டும், வேண்டும் என்றீர்கள். இப்போது பொறுப்பை என்னிடம் தந்துவிட்டு, ‘அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் - அசகாயச் சூரர்’ என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்” என்றார்.*

*அன்று அண்ணாவின் அந்த உரைக்குப் பிறகு சிந்தனையாளர்கள், செயல் வீரர்களானார்கள்.*

**‘அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் - அசகாயச் சூரர்’ என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்!”**

ஓவியம் : ரவி பேலட்



**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

3

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”

# கரிகாலச் சோழன் ஆட்சி!

***காமராஜர் ஆட்சி காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் அணைகளே கட்டப்படவில்லையாமே, 19 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த கலைஞர் எந்த அணையையும் கட்டவில்லையா?***

*பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி செய்தபோது, இந்தியாவின் பிரதமராக இருந்த நேருவின் ஐந்தாண்டு திட்டங்கள் வாயிலாக, வடமாநிலங்களில் ஹிராகுட், பக்ராநங்கல் போன்ற அணைகள் கட்டப்பட்டன. ‘வடக்கு வாழ்கிறது-தெற்கு தேய்கிறது’ என்ற தி.மு.க. உரிமைக்குரலின் காரணமாக நேருவை வலியுறுத்திய காமராஜர் தமிழ்நாட்டில் வைகை, சாத்தனூர், ஆழியாறு உள்ளிட்ட பெரிய அணைகளைக் கட்டினார்.*

*தி.மு.க ஆட்சி அமைந்தபோது ஐந்தாண்டு திட்டங்கள் இல்லை. ஆறுகளின் குறுக்கே பெரிய அணைகள் கட்டுவதற்கு இயற்கை ஆர்வலர்களும் பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். இந்த நிலையில், இயற்கை வளத்தைக் கருத்திற்கொண்டும், நீர்ப்பாசனத் தேவை கருதியும், மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து தமிழ்நாட்டில் பல அணைகளையும் தடுப்பணைகளையும் கலைஞர் தனது ஆட்சியில் கட்டியுள்ளார்.*

*1967-ஆம் ஆண்டில் தொடங்கி 2011-ஆம் ஆண்டு வரை 5 முறை தி.மு.க ஆட்சி செய்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 42 அணைகள் கட்டப்பட்டுள்ளன. எந்தெந்த இடங்கள் என்று தி.மு.க பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பல முறை பட்டியலிட்டிருக்கிறார். (பார்க்க பெட்டிச் செய்தி)*

*இந்த அணைகள் பலவும் தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்டவை. ஒரு சில அ.தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை. மேலும் சில தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை.*

*காமராஜர் ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாட்டில் அணையே கட்டப்படவில்லை என்று கண்மூடித்தனமாகப் பேசுபவர்கள் இந்த இடங்களுக்குச் சென்று கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொள்ளலாம். அண்டை மாநிலங்களை தண்ணீர் தேவைக்கு நம்பியிருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டின் இயற்கையமைப்பும் மாநில எல்லைகளும் அமைந்துவிட்டன. இந்த நிலையிலும் நீர் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு பல அணைகளைக் கட்டிய நவீன கரிகாலச் சோழன் நம் கலைஞர்.*

(1) தும்பலஹள்ளி (2) சின்னாறு (3) குண்டேரிப் பள்ளம் (4) வறட்டுப்பள்ளம் (5) பாலாறு (6) பொருந்தலாறு (7) வரதமா நதி (8) வட்டமலைக்கரை ஓடை (9) பரப்பலாறு (10) பொன்னியாறு (11) மருதா நதி (12) பிளவுக்கல் (பெரியாறு) (13) கடானா (14) ராமாநதி (15) கருப்பா நதி (16) சித்தாறு-1 (17) சித்தாறு-2 (18) மேல் நீராறு (19) கீழ் நீராறு (20) பெருவாரிப்பள்ளம் (21) மோர்தானா (22) ராஜாதோப்பு (23) ஆண்டியப்பனூர் ஓடை (24) குப்பநத்தம் (25) மிருகண்டா நதி (26) செண்பகத்தோப்பு (27) புத்தன் (28) மாம்பழத்துறையாறு (29) பொய்கை (30) நல்லாறு (31) வடக்குப் பச்சையாறு (32) கொடுமுடி (33) அடவிநயினார் (34) சாஸ்தா கோவில் (35) இருக்கன்குடி (36) சென்னம்பட்டி (37) கிருதமால் (38) நல்லதங்காள் ஓடை (39) நங்காஞ்சியார் (40) வரட்டாறு வள்ளி மதுரை (41) பச்சை மலை (42) ஆனைவிழுந்தான் ஓடை

ஓவியம் : ரவி பேலட்





**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

425

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131